# A COMPANION
TO THE
# HOLY COMMUNION.

நற்கருணைத்
# தியானமாலை.

இதில்
கர்த்தருடைய இராப்போசனமாகிய தேவநற்கருணையைப்
பரிமாறும் ஒழுங்கும்,
அவ்வொழுங்கை விஸ்தரித்து விளக்கிய பிரசங்கமும்,
தேவநற்கருணைக்கென்று ஆயத்தம்பண்ணுங்காலத்திலும்
அதை வாங்குந்தருணத்திலும்
செய்யத்தக்க தியானங்களும் செபங்களும்
அடங்கியிருக்கின்றன.

இது
திருநெல்வேலிச் சீமையிலுள்ள இடையன்குடியிலிருக்கிற
கால்வேல் ஐயராலே
செய்யப்பட்டது.

"உமது சிலுவைபாடுகளினிமித்தம் என்னை இரட்சித்தருளும்,
தயவுள்ள கர்த்தாவே."

மூன்றும் பதித்தல்.

MADRAS:
PUBLISHED BY THE MADRAS DIOCESAN COMMITTEE OF THE
SOCIETY FOR PROMOTING CHRISTIAN KNOWLEDGE,
AND SOLD AT THEIR DEPOSITORY,
17, CHURCH STREET, VEPERY.
1871.

முதலாம்பதிப்புக்கு

# முகவுரை.

கர்த்தருடைய இராப்போசனத்தைச் சேர்ந்தவர்களும், அதற்கு ஆயத்தமாகிறவர்களும் தங்களைச் சோதித்தறிந்து செபத்தியானஞ்செய்து சேரவேண்டிய ஒழுங்கிருக்க, இத்தேசத்துக் கிறிஸ்தவர்களில் அநேகர் வேதவசனத்தை நன்றாய் அறியாதவர்களாயும், தேவபத்தியில் தேருதவர்களாயும், தியானம்பண்ணுகிறதில் வழக்கப்படாதவர்களாயும் இருப்பதினாலே, நற்கருணைக்கென்று ஆயத்தம்பண்ணிக்கொள்ளுஞ் சமயத்திலும், அதை வாங்கும் தருணத்திலும் வாசித்துணரத்தக்க செபத்தியானங்களுள்ள புத்தகம் அவர்களுக்கு அவசியம் தேவையாயிருக்கின்றது. அப்படியிருந்தும், இதுவரையில் அப்படிப்பட்ட புத்தகம் இல்லாததால் அநேகர் ஏற்றபடி கர்த்தருடைய பந்தியைச்சேர ஏதுவில்லாமல், தரிசுநிலத்தில் மழைபெய்தும் பயிர் விளையாததுபோல், ஆசீர்வாதமும் ஆறுதலும் அடையாமல் போனதுண்டு. இதைக்குறித்து நெடுக விசாரப்பட்டு, இக்குறைவைத் தீர்க்க என்ன செய்யலாமென்று யோசித்து, நற்கருணைத் தியானப் புத்தகமொன்றைச் செய்யும்படி தீர்மானித்ததின்பேரில், யூரோப்புக்கண்டத்திலிருக்கிற உத்தமபத்தியும் ஞானமுமுள்ள குருமார் அக்கண்டத்துக் கிறிஸ்தவர்களுடைய பிரயோசனத்திற்காகச் செய்த நற்கருணை ஆயத்தப் புத்தகங்களைப் பரிசோதித்து, அவற்றில் இத்தேசத்துச் சபையாருடைய புத்திக்கும் தமிழ்மொழிக்கும் இசைந்தவை

களைத் தெரிந்தெடுத்து, கூட்டியும் குறைத்தும் இப்புத்தகத்தை உண்டாக்கியிருக்கிறேன்.

இச்செபத்தியானங்களை அவரவர் தனித்து வாசிக்கிறதுமன்றி, கிறிஸ்தவர்கள் செபஞ்செய்யும்படி கூடிவரும் வேளைகளிலும் சில தியானங்களை வாசிக்கத் தகும்.

தேவநற்கருணை வாங்கும்போதெல்லாம் இப்புத்தகத்தில் அடங்கியிருக்கிற செபத்தியானங்கள் ஒவ்வொன்றையும் முறையாய் வாசிக்கவேண்டுமென்று நினைக்கவேண்டாம். ஒரு மாதத்தில் சில தியானங்களையும், அடுத்த மாதத்தில் மற்றுஞ் சில தியானங்களையும் வாசித்தால், எப்பொழுதும் எழுப்புதல் உண்டாக ஏதுவாயிருக்கும். இயேசுஇரட்சகரின் அன்பை நினைத்துக் கொண்டாடுவதற்குக் கிறிஸ்தவர்கள் எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கவேண்டியதால், இப்படிப்பட்ட செபத்தியானங்களை வாசிக்கச் சமயங்கிடையாவிட்டாலும், கர்த்தருடைய பந்தியைச் சேராமல் இருக்கக்கூடாது. "தங்கள் பிதாக்களின் தேவனாகிய பராபரனைத் தேடும்படி தங்கள் இருதயத்தை நோக்கினவர்கள் பரிசுத்தஸ்தலத்திற்கேற்ற சுத்தாங்கம் அடையாதிருந்தாலும், கிருபையுள்ள பராபரன் அவர்களுக்கு மன்னிப்பாராக." (௨ நாளா. ௩௰. ௰௯.)

இப்புத்தகத்திலுள்ள செபங்களையும் தியானங்களையும் வாசிக்கிற ஆயத்தமே போதுமென்று ஒருவரும் நினைத்து மோசம்போகக்கூடாது. பாவத்தை உணர்தலும், கிறிஸ்துநாதரை விசுவாசித்துப் பற்றிக்கொள்ளுதலும், அவர் அருளும் வரப்பிரசாதங்களை வாஞ்சித்தலுமாகிய ஆயத்தம் அவசியம் வேண்டும். இவ்வாயத்தமில்லாமல் எந்தத் தியானங்களை வாசித்தாலும், எவ்

வகை எத்தனஞ்செய்து முயன்றாலும் பிரயோசனம் வராது. கர்த்தருடைய இராப்போசனம் ஆவிக்குரிய விருந்தாதலால், ஆவியோடும் உண்மையோடும் சேருகிறவர்களே அதற்குப் பாத்திரவான்கள்.

இத்தேசத்துக் கிறிஸ்தவர்கள் இப்புத்தகத்தின் உதவியால் பத்திக்கேற்ற ஆயத்தத்தோடே தேவநற்கருணையை வாங்கும்படிக்கும், "கர்த்தர் தயவுள்ளவர் என்கிறதை அவர்கள் ருசித்துப்பார்த்து" இயேசுக் கிறிஸ்துவை அறியும் அறிவிலும் கிருபையிலும் வளர்ந்தேறி வரும்படிக்கும், கடவுள் கட்டளையிட்டு ஆசீர்வாதந் தந்தருளக்கடவர்.

R. CALDWELL.

திருநெல்வேலிச்
சீமையிலுள்ள இடையன்குடி,
௲௮௱௫-௵ ஜனுவரிமீ ௨௭௨.

கவனிப்பு.—இப்புத்தகத்தில் கண்டிருக்கிற செபத்தியானங்களை அவரவர் தனித்து வாசிக்கத்தக்க ஒழுங்காய், "நான்" என்றும், "என்னுடையது" என்றும் ஒருமையாய் சொல்லியிருக்கிறது. கூட்டத்தில் வாசிக்கும்போது ஒருமைச்சொற்களை மாற்றி, "நாங்கள்" என்றும், "எங்களுடையது" என்றும் பன்மையாய் வாசிக்கவேண்டும்.

# கர்த்தருடைய இராப்போசனம்

பரிமாறப்படுகிறதற்கு முந்தின கிழமையில் தற்சோதனை செய்கிறதற்கும், தேவபத்தி வர்த்திக்கிறதற்கும் ஏதுவாகச் செய்யத்தக்க

# தியானங்கள்.

---

## ஆயத்தசெபம்.

சகல ஞானத்தையும் ஈகிறவரே, நான் என் இருதயத்தை எப்படி ஆராய்ந்தாலும், உமது திருவிருந்துக்கு என்னை எப்படி எத்தனப்படுத்தினாலும், உம்முடைய உதவியும் உம்முடைய ஆசீர்வாதமுமில்லாமல் என் முயற்சிகளெல்லாம் விருதாவாய்ப்போகும். நீர் என் கண்களைத் திறந்து என் இருதயத்தை இளகச் செய்யாவிட்டால், என் பாவங்களை அறிந்துணருகிறதற்குத் திராணியற்றவனாயிருப்பேன். நீர் விசுவாசந்தராவிட்டால், நான் கிறிஸ்துஇரட்சகரின் கிருபையைச் சார்ந்து அவரை முழுநம்பிக்கையோடே நம்புகிறதற்கு ஏதுவில்லை. நீர் உம்முடைய ஆவியினாலே என்னைச் சுத்திகரியாவிட்டால், அசுத்தமும் தீவினையும் என்னில் நிலைக்கும். ஆகையால் என் தேவனே, உம்மிடத்தில் வருகிறேன். நீரே என் கண்களைத் திறந்து என் இருதயத்தை இளகச்செய்து, எனக்கு விசுவாசந்தந்து, உம்முடைய ஆவியின் ஏவுதலினால் என்னைச் சுத்திகரித்தருளும். உமது பந்தியைச் சேருதற்கேற்ற குணங்களையும் ஆயத்தத்தையும் எனக்கு

அருளிச்செய்யும். கேட்கிற எனக்குத் தாரும், தேடுகிற நான் கண்டடையச்செய்யும், தட்டுகிற எனக்கு வாசலைத் திறந்தருளும்; இயேசுக்கிறிஸ்துவினிமித்தமே. ஆமன்.

# I.

## பாவத்தையுணர்ந்து துக்கித்துத் தன்னை வெறுத்துத் தேவஇரக்கத்தைத் தேடுதற்கேற்ற

# பச்சாத்தாபத்தியானங்கள்.

## 1.

*சங்கீதம், சம. ௰உ. என்னுடைய அக்கிரமங்கள் என்னைத் தொடர்ந்துபிடித்தன. அவைகள் என் தலையின் மயிர்களிலும் அதிகமாயிருக்கின்றன.*

கர்த்தருடைய வேதத்தைக்கொண்டு என்னைச் சீர்தூக்கிப் பார்க்கும் அளவில் நான் எவ்விதத்திலும் குறைவுள்ளவனென்று கண்டிருக்கிறது. செய்யவேண்டிய கடமைகளைச் செய்யாமல் விட்டுவிட்டேன்; செய்தாலும், அரைகுறையாய்ச் செய்தேன். ஆதிமுதல் இதுவரைக்கும் உலகத்திலே எந்தப் பாவம் நடந்திருக்கிறதோ, அந்தப் பாவத்தின் வேர் என்னிடத்திலுண்டு. இதுவுமல்லாமல், நான் குற்றமுள்ளவனாயிருக்கையில், என் குற்றங்களைக்குறித்துத் துயரப்படாமலிருக்கிறேன். நான் பலமற்றவனாயிருக்கையில், என் பலவீனத்தை உணராமலிருக்கிறேன். இயேசுவே, நான் உம்முடைய பாடுகளைத் தியானித்து, என் பாவதோஷங்களினிமித்தம் துக்கப்படும்படி எனக்குக் கிருபைசெய்யும். உமது கையிலும் உமது காலிலும் கடாவின ஆணி என் பாவமே! உமது திருச்சிரசில் சூட்டின முண்முடி என் பாவமே! உமது விலாவிலே குத்துருவின ஈட்டி என் பாவமே! இயேசுவே, நீர் சிலுவையில் அறையுண்டு வதைக்கப்பட்ட நிஷ்டூரத்தை நான் பார்த்து, எந்தப் பாவத்தையும் வெறுத்து ஒழித்துவிடவேணுக.

## 2.

சங்கீதம், உடு. ய௧. உமது நாமத்தினிமித்தம் என் அக்கிரமத்தை மன்னியும்; ஏனெனில் அது பெரியது.

என் பாவம் பெரிதே! நான் செய்த பாவங்களை அந்தகாரத்தில் செய்யாமல், வெளிச்சத்திலேயே செய்தேன். நான் கிறிஸ்துஇரட்சகருக்குப் பின்செல்லுகிறவனாய் அவரை உலகத்தாருக்கு முன்பாக அறிக்கையிட்டும், நான் துன்மார்க்கனாய் நடந்தால் உலகத்தார் என் துன்மார்க்கத்தைக் கண்டு அவரைத் தூஷிப்பார்களென்று அறிந்தும், என் பாவங்களினாலே என் இரட்சகருக்கு அவகீர்த்தியுண்டாக்கினேன். ஞானஸ்நானம் தேவநற்கருணையை நான் பெற்றும், பாவத்தை வெறுத்துவிடுவேனென்று சபையார் முன்புக்குப் பொருத்தனை பண்ணியும் திரும்பத்திரும்ப மனதறியப் பாவஞ்செய்திருக்கிறேன். கிருபையுள்ள பிதாவே, உமக்குமுன்பாக என்ன சொல்லுவேன்! உம்முடைய ஒரேகுமாரனாகிய கிறிஸ்து இயேசுவின் இரத்தமேயன்றி வேறொன்றும் என்னைச் சுத்திகரிக்கமாட்டாது. அந்த இரத்தம் பாவம்போகச் சுத்திகரிக்கும் தன்மையுள்ளதாயிருக்கிறதென்றாலும், என் பாவம் பெரிதென்று அந்த இரத்தமே விளங்கக்காட்டுகிறது. நீர் இரக்கமில்லாதவரும் கடினமனமுள்ளவருமாயிருந்தால் என் பாவம் மட்டுள்ளதாய்த் தோன்றும். நீர் அன்பேயென்னும் நாமம் விளங்கியவரானதினாலும், உமதன்பின் ஏவலினாலே உமது குமாரனுடைய திருஇரத்தம் எனக்காகச் சிந்தப்பட்டதினாலும், நான் உம்மை மறந்து உம்முடைய கட்டளையை மீறினது மட்டுமிஞ்சின பாவமாயிருக்கிறது.

அருமைஇரட்சகரே, பாவியேன் உம்மிடத்தில் அடைக்கலம் புகுந்து, நீர் செய்த பாவநிவாரணத்தை முழுநம்பிக்கையோடே நம்புகிறேன். உம்முடைய நாமமே என் இரட்சிப்பு. உம்முடைய நாமத்தினிமித்தம் என் அக்கிரமத்தை மன்னித்தருளும். "உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும், உறைந்தமழையைப்போல் வெண்மையாகும். அவைகள் இரத்தாம்

பரச் சிவப்பாயிருந்தாலும், பஞ்சைப்போலாகும்" என்று தேவரீர் அருளின வாக்குத்தத்தத்தை உமது ஆவியினாலே எனக்குணர்த்தி பலிக்கும்படிசெய்யும். அப்பொழுது சந்தோஷமுள்ள உதடுகளால் உம்மைத் துதிப்பேன்.

## 3.

சங்கீதம், ருக. ச. தேவரீர் ஒருவருக்கே விரோதமாய்ப் பாவத்தை நடப்பித்தேன்.

எனக்கொத்த மனிதருக்கு நோக நடந்ததினாலே நான் குற்றமுள்ளவனாயிருக்கிறேன்; ஆகிலும் தேவரீருடைய பிரமாணங்களை நான் மீறி, உமக்கு விரோதியும் நன்றிகெட்டவனுமாய்ப் போனதே என்பேரில் விசேஷித்த குற்றம். ஆத்துமாவே, உன் தேவனுக்கு விரோதமாய் நீ செய்த பாவங்களை உணர்ந்து, உன் கல்நெஞ்சு நொறுங்க அவைகளை அரோசித்துத் துக்கித்துக்கொள். உன்னுடைய இரகசிய யோசனைகளையும் உன் வழிகளனைத்தையும் பார்த்தறிந்த பரிசுத்த பிதாவுக்குக் கோபம்உண்டாக்கினாய். உன்னுடைய தகாத நடக்கையினாலே மாசில்லாத அன்புள்ள இரட்சகரை அவதூறுப்படுத்தினாய். மனப்பூர்வத்தோடே பாவஞ்செய்து பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தினாய். பரமபிதாவே, உம்முடைய பாதத்தில் விழுந்து பாவமன்னிப்பைக் கெஞ்சிக்கேட்கிறேன். உமது மிகுந்த இரக்கங்களின்படியே என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும். இரக்கமுள்ள மீட்பரே, என்னைக் கைதூக்கி இரட்சியும். பரிசுத்தஆவியே, என்னிடத்தில் நிலைவரமான ஆவியைப் புதிதாய் உண்டாக்கும்.

நான் நிர்ப்பந்தமான பாவியென்பது நிச்சயம். என் மீட்பருடைய மரண புண்ணியமேயன்றி, வேறே தாரகம் எனக்கில்லை. இருதயத்தின் சஞ்சலமும் இருதயத்தின் பாவமும் இருதயத்துக்கே தெரியும். ஆகையால் என் முழு ஆத்துமாவோடும், என் முழுப்பலத்தோடும் நான் பராபரனிடத்திற்கு மனந்திரும்பி, அவர் ஏற்படுத்தின சாக்கிரமெந்தின் வழியாய் அவருடைய கிருபையை அடையவேண்டுமென்று தேடி இயேசுவைநோக்கிக்கொண்டிருப்பேனாக.

## 4.

*யோபு, உ௯. உ. பராபரனுடைய தீபம் என் சிரசின்மேல் பிரகாசித்த மாதங்களில் எனக்கிருந்த சீரை எனக்குக் கொடுப்பவனார்?*

நான் குணப்பட்டு பத்தியுள்ளவனாகி, கர்த்தருடைய வழிகளில் நடக்கும் ஆரம்பத்தில் எனக்குண்டான சமாதானமும் பேரின்பமும் எவ்வளவு அதிகம்? அந்தச் சுகிர்தநாட்களில் சர்வவல்லவருடைய நிழலில் தங்கித் தீங்குக்குப் பயப்படாமலிருந்தேன். நித்திரைசெய்யப் போகும்போது, இந்த இராத்திரியிலே கர்த்தர் என்னை எடுத்துக்கொண்டாலும் அவருடைய சன்னிதியில் நான் விழித்து, நீதிமான்களின் ஆத்துமாக்களோடும் நற்தூதர்களோடும் வாசம்பண்ணுவேன் என்கிற நம்பிக்கையோடே பயமில்லாமல் படுத்துக்கொள்வேன். காலையில் நித்திரைதெளிந்து எழுந்திருக்கும்போது கர்த்தருடைய கிருபையை முதல் நினைவாக நினைப்பேன். எங்கே போனாலும், எது நேரிட்டாலும், என் பிதாவின் அன்பைக் கண்டுணர்ந்து, அவரைத் துதிப்பேன். அப்பொழுது ஒரு துக்கமும் ஒரு குறைவும் எனக்கில்லை. மரணமும் பயங்கரமாயிராமல் நித்திய சமாதானத்தைக் கூறும் தூதனைப்போல் எனக்குக் காணப்பட்டது. உலக விசாரங்களும் வியாதி துன்பங்களும் ஒரு பொருட்டாய்த் தோன்றவில்லை. என் பிதாவுக்குப் பிரியமாய் நடக்கவேண்டுமென்கிற கவலையே எனக்குக் கவலையாயிருந்தது.

ஐயோ! என் பாவத்தினாலே இந்த நன்மைகளை இழந்துவிட்டேன். நான் பராபரனோடே சஞ்சரியாமல் நன்றிகெட்டவனாகி அசாக்கிரதையாய் நடந்ததினாலும், இவ்வுலகத்தின் மயக்கங்களில் சிக்கிக்கொண்டதினாலும், கிருபைபெறத்தக்க எத்தனங்களை அசட்டைசெய்ததினாலும், ஆரம்பத்தில் பிரகாசித்த பத்தியாகிய தீபம் வரவர அணைந்துபோயிற்று.

"நீ ஆதியில் காட்டின அன்பைவிட்டுக் குளிர்ந்துபோனபடியால் உன்மேல் விசனமாயிருக்கிறேன். நீ விழுந்த நிலைமையை நினைத்து மனந்திரும்பி ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக" என்று என் இரட்சகர் சொல்லிய எச்ச

ரிப்பை நான் இப்பொழுது கேட்டுணர்ந்து அவருடைய கட்டளையின்படி சீரடைவேனாக. இரட்சகரே, திரும்பவும் என்னை உயிர்ப்பித்தருளும். என்னுடைய ஆத்துமா புதுசீவனடைந்து பெலன்கொண்டு, முன்னுள்ள சுகிர்தநன்மைகளைத் தேடும்படிக்கும், பத்திவைராக்கியமும் அன்பும் குறைந்து போகாமல் என்னிடத்தில் வர்த்தித்துவரும்படிக்கும், நான் உம்முடைய பந்தியைச் சேரும்போது உம்முடைய மரணப்பாடுகளை எனக்கு ஞாபகப்படுத்தி அவைகளை எனக்குப் பலிக்கச்செய்தருளும்.

## 5.

௧ கொரி. ௰௧. ௩௧. நம்மை நாமே நியாயந்தீர்த்தால் நாம் நியாயந்தீர்க்கப்படுவதில்லை.

என் தேவனே, உமக்கு விரோதமாய் நான் செய்த பாவங்கள் அனைத்தையும் உம்மிடத்தில் அறிக்கையிட்டு, உம்முடைய கோபாக்கினைக்குப் பாத்திரனாயிருக்கிறேன் என்று ஒத்துக்கொண்டு, நானே என்னை நியாயந்தீர்த்துத் தாழ்த்தி உம்முடைய பாதத்தில் விழுந்து பணிகிறேன். மனத்தாழ்மைக்கேற்ற வார்த்தைகளைமாத்திரம் சொல்லாமல், மெய்யாய் நான் குற்றவாளியாயிருக்கிறேன் என்று இருதயத்தின் கருத்தோடே உணர்ந்து உமக்குமுன்பாக என் குற்றங்களை அறிக்கையிடுகிறேன்.

என் தேவனே, நீர் சொல்லிய உண்மையுள்ள வாக்குத்தத்தத்தின்படி என்னை நியாயந்தீர்க்கப் பிரவேசியாமல் என் மீறுதல்களை எனக்கு மன்னித்தருளும். என் பாவங்களுக்குத் தக்கதாய் தண்டனைசெய்யாமல், கிறிஸ்துஇயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு உம்முடைய கிருபையினாலே என்னை நீதிமானாக்கும். அவருடைய இரத்தத்தின்மூலமாய் உண்டான மீட்பே என் நம்பிக்கை. உம்முடைய திருவிருந்தில் நான் அந்த மீட்பை நன்றியறியுதலோடே நினைக்கும்படி உம்முடைய கிருபையை எனக்குத் தாரும்.

மேலெழுதிய தியானங்களில் காட்டியிருக்கும்
பச்சாத்தாபமுண்டாகவும் பாவமன்னிப்புக் கிடைக்கவும்
பிரார்த்திக்கத்தக்க

## செபம்.

அன்புள்ள இயேசுவே, நீர் குணப்படுதலையும் பாவமன்னிப்பையும் இஸ்ரவேலருக்குத் தந்தருளத்தக்கதாக, பிதாவானவர் உம்மை அதிபதியாகவும் இரட்சகராகவும் உயர்த்தினுரே. இந்த நன்மைகள் ஏழை அடியேனுக்குக் கிடைக்கவேண்டுமென்று இப்போது உம்மிடத்தில் வருகிறேன். என் இருதயம் தன் பாவத்தையும் உமது இரக்கத்தையும் உணர்கிறதில்லை. அது தீயிலுங் கொடிது, கல்லிலும் வலிது. இந்தக் கல் இருதயத்தைத் தேவரீர் இரக்கமாய் எடுத்து எனக்கு நல்ல இருதயத்தைத் தாரும். உன்னதத்திலிருக்கிற பரிசுத்தர் ஒப்புக்கொள்ளத்தக்க பலியாகிய நொறுங்குண்ட இருதயத்தை எனக்குத் தந்தருளும். கிருபையுள்ள மீட்பரே, உம்முடைய பாடுகளினுலே என் இருதயம் இளகும்படிக்கும், உம்முடைய தயவு பொறுமை என் குணப்படுதலுக்கு ஏதுவாயிருக்கும்படிக்கும் கட்டளையிட்டருளும். என் இருதயம் வழுவிப் போகிறதும், சீர்மாறுகிறதும், கபடுள்ளதுமாயிருப்பதினுலே, என் இருதயத்தின் யோசனைகளுக்கு ஒருக்காலும் என்னை ஒப்புக்கொடாதேயும். எங்களுக்காகப் பரிந்துபேசுகிறவரே! இயேசுவே! உம்முடைய பரிசுத்தஆவியைக்கொண்டு என்னை உமது பிதாவினிடத்தில் சேர்த்துக்கொள்ளும். நான் அவரிடத்தில் மெய்யாய் மனந்திரும்பினவனுக அவருடைய இரக்கத்தையும் அவருடைய தயாளமான மன்னிப்பையும் பெற்றுக்கொள்ளும்படியாகவும், சமாதானமுள்ள மனதோ

டே உம்முடைய பரிசுத்த பந்தியைச் சேரும்படியாகவும் தேவரீர் என்னைக் கிருபையாய்ப் பார்த்து: ["மகனே!] மகளே! உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன" என்று திருவாய்மலர்ந்து சொல்லும். உமது இரக்கங்களினிமித்தமும், உமது புண்ணியங்களினிமித்தமுமே. ஆமன்.

---

# II.

தேவதயவையும், இயேசுஇரட்சகருடைய மேன்மையையும்,
அவர் நம்மை ஈடேற்றும்படி செய்த இரட்சணிய
கிரியைகளையும், அவர் நிர்ப்பந்தமான பாவிகளை
ஏற்றுக்கொள்ளும் இரக்கத்தையும்
தியானிக்கிறதற்கேற்ற

## விசுவாசத்தியானங்கள்.

### 1.

சங்கீதம், ௩௧. ௰௯, உம்முடைய நன்மை எவ்வளவு திரள்.

தேவஅன்பு அநேகவகையாய் எனக்குக் கட்டளையிடப்பட்டிருக்கின்றது. எனக்குக்கிடைத்திருக்கிற லவுகீக சவுக்கியங்களையும், ஆத்தும நன்மைகளையும் இத்தனையென்று சொல்ல யாராலே கூடும்! நான் மரணத்திற்குப் பாத்திரனாய் இருந்தும், தேவரீருடைய பொறுமையினாலே இதுவரைக்கும் உயிரோடிருக்கிறேன். என் அக்கிரமங்களின் இடையில் என்னை அழித்துப்போடாமல் நான் குணப்படவேண்டுமென்று காத்திருக்கிறீர். பாவத்தையும் அசுத்தத்தையும் நீக்கும்படி திறக்கப்பட்ட ஊற்றில் சேருகிறதற்கு இன்னம் எனக்கு இடமுண்டு. கிருபைபெறத்தக்க எத்தனங்களும், சீவ அப்பமாகிய வான ஆகாரமும் இம்மட்டும் எனக்குக் கிடைத்திருக்கிறது. நான் இன்னம் இரக்க ஆசனத்தண்டையில் சேர்ந்து கிறிஸ்துவின் கிருபையுள்ள வரங்களை அடையலாம். இவைகளன்றியும், இயேசுரட்சகருடைய திருவிருந்துக்கு நான் வந்து,

அவருடைய மரணத்தையும் பாடுகளையும் நினைத்துக் கொண்டாடி, அவருடைய இரட்சணிய பாத்திரத்தை வாங்கிக் கொள்ள இன்னொரு சமயமும் எனக்குக் கிடைத்திருக்கிறது. ஆகையால், நான் அவரிடத்தில் ஓடி அவருடைய பாதத்தில் விழுவேன். அவருடைய நாமமே எனக்கடைக்கலம்.

## ௨.

*சங்கீதம், ௪௨. ௰௧. என் ஆத்துமமே, ஏன் முறிந்துகொண்டிருக்கிருய். ஏன் என்னிற் கொந்தளிக்கிருய்.*

நான் செய்த திரளான பாவங்களைமாத்திரம் நினைத்துக் கொண்டு, என் பாவநாசரை மறக்கலாமா? எந்தப் பாவங்களையும் நீக்கி என்னை விடுவிக்க இயேசுரட்சகருக்குச் சத்துவமும் சித்தமும் உண்டே. "சொஸ்தமுள்ளவனுக்கு வைத்தியன் வேண்டுவதில்லை, வியாதியுள்ளவனுக்கே வேண்டும்" என்று சொல்லியபடி, பரமவைத்தியனுடைய உதவி எனக்கு அவசியந்தேவை. உள்ளங்கால்துவக்கித் தலைமட்டுக்கும் எனக்கு ஆரோக்கியம் இல்லை. சிலவேளைகளில் வியாதியின் கொடுமையினலே வியாதியுண்டென்கிற உணர்வும் அற்றவனுயிருக்கிறேன். திவ்விய மீட்பரே, உம்மிடத்தில் வருகிற யாவரையும் இரட்சிக்கிறவரே, எனக்கிரங்கும். ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும்மாத்திரமா இரட்சிப்புவேண்டும்? எனக்கும் வேண்டுமே! உம்முடைய கிருபை எனக்குக் கிடையாதிருந்தால் என்றைக்கும் கெட்டுப்போவேன். ஆயக்காரரையும் பாவிகளையும் நீர் தள்ளவில்லை: என்னையும் தள்ளமாட்டீர். உமக்குச் சித்தமானல் என்னைச் சுத்தமாக்க உம்மாலேயாகும். என் ஆத்துமாவின் நிர்ப்பாக்கியத்தை எதற்கு ஒப்பிடுவேன். காணுத கண்ணும், கேளாத காதும், ஊன்ருத காலும், தீராத நோயும், உயிரற்ற பிரேதமும் என் நிலைமைக்கு நிகரே! நீர் பூர்வகாலத்தில் இவ்வுலகத்திலே சஞ்சரித்தபோது, குறைவுள்ளவர்கள் உம்மிடத்தில் வந்து உமது கிருபையை மன்ருடின வகையாய், நானும் உம்முடைய பாதத்தில் விழுந்து மன்ருடுகிறேன். இயேசுவே! தாவீதின் குமாரனே! எனக்கிரங்கும். உலகத்தின்

பாவங்களைச் சுமந்துதீர்க்கிற தேவஆட்டுக்குட்டியே! உமது சமாதானத்தை எனக்கருளிச்செய்யும். ஒரு வார்த்தையைமாத்திரம் சொல்லும். அப்பொழுது உமது அடியான் சொஸ்தம் அடைவான்.

கர்த்தரே! பிணியாளியாகிய நான் ஆத்தும வைத்தியனிடத்தில் வருகிறேன்; நிர்ப்பந்தனான நான் இரக்கமுள்ள பிதாவினிடத்தில் வருகிறேன்; அசுத்தனான நான் பரிசுத்தத்தின் ஊற்றினிடமாய் வருகிறேன்; ஒன்றுமில்லாத தரித்திரனான நான் கருணைக்கடலான கர்த்தாவினிடத்தில் வருகிறேன்; குருடனும் அறிவீனனுமான நான் எல்லா ஆவிகளையும் பிரகாசிப்பிக்கிற காந்தியினிடத்தில் வருகிறேன்; இஸ்ரவேலின் கன்மலையானவரிடத்தில் நிலையற்றவனும் பெலவீனனுமான நான் வருகிறேன். கர்த்தாவே! என் மன அந்தகாரத்தை நீக்கி வெளிச்சமாக்கி, என் பெலட்சியங்களை அகற்றி, என் வறுமை நீங்க ஐசுவரியம் தந்து, என் பெலவீனத்திலே பெலனுண்டாக்கி, அசுத்தமற என்னைக் கழுவி, என் சரீரத்தையும் ஆவியையும் ஒட்டிய அழுக்கை நீக்கி, நான் கர்த்தருக்குப் பயந்து, மாசற்ற பரிசுத்தனாகும்படி செய்தருளும்.

## 3.

சங்கீதம், சுக. உ. என் இருதயம் தொய்யும்போது, நான் இருக்கிறதிலும் உயரமான கன்மலையில் என்னைக் கொண்டுபோய் விடும்.

இயேசுவே, நான் பாவத்தினாலே கெட்டுப்போக ஏதுவாயிருக்கும்பொழுது, உமது இரக்கத்தினாலே மோசத்துக்கு நீங்கி இரட்சிப்படைந்தேன். தேவகோபாக்கினையாகிய பெருவெள்ளத்திற்கு நான் தப்பத்தக்க கன்மலை உம்முடைய இரட்சணிய கிருபையினாலே எனக்குக் கிடைத்தது. நான் அமிழ்ந்து கெட்டுப்போகும்போது, தேவரீர் எனக்கிரங்கி, அந்த வெள்ளத்திற்கும் அந்தப் பெருங்காற்றுக் கொந்தளிப்புக்கும் நீரே உம்மை ஒப்புக்கொடுத்து, என்னை உயரமான கன்மலையில் கொண்டுபோய் விட்டுக் காப்பாற்றினீர். இப்பொழுது பெருங்காற்றடிக்கும் மூர்க்கத்தையும் கருங்கடல் கோஷ

டத்தையும் நான் கேட்டாலும், எனக்குப் பயமில்லை. நீர் என்னைக் காப்பாற்ருதிருந்தால், அந்த வெள்ளம் புரண்டோடி என்னை நித்திய துக்கசாகரத்திற்கு இழுத்துக்கொண்டுபோகும். இரட்சிப்பின் கன்மலையாகிய இந்தத் தஞ்சத்தின்மேலே நான் ஏறித் தங்கியிருக்கும்பொழுது வெள்ளம் என்னைக் கிட்டாது. இயேசுவே, சோதனைகளும் துன்பங்களும் நேரிடும்போதெல்லாம், இந்த அடைக்கல ஸ்தலத்தில் என்னைக் கொண்டுவந்துவிடும். இவ்விடத்தில்மாத்திரம் மோசத்திற்கு இடையில்லை. என் இரட்சகர் மாருதவரும் அசைவற்றவருமாமே. நேற்றும் இன்றும் என்றைக்கும் ஒரே சீராயிருக்கிருர்.

## 4.

உ கொரி. ரு. உக. அவர் நமக்காகப் பாவமாக்கப்பட்டார்.

பாவம் இவ்வளவு கொடிதென்று கிறிஸ்துவின் சிலுவைப்பாடுகளினுலேயே அறிந்திருக்கிறேன். பொல்லாத தூதர்கள் அடைந்த தண்டனையினுலும், சலப்பிரளயத்தினுலும், சோதோம் கொமோராபட்டணங்கள் கவிழ்க்கப்பட்டதினுலும், வியாதி துன்பத்தினுலும், மரணத்தினுலும், நித்திய நரகஆக்கினையினுலும், பாவத்தின் பலன் விளங்கும். ஆகிலும் பாவத்தின் கொடுமையைக் கிறிஸ்துவின் சிலுவையே துலக்கமாய்க் காட்டும். அவர் அடைந்த கஸ்திகள் மனிதருடைய பாவத்தின் பலனேயொழிய வேறல்ல. தேவசுதன்தாமே அக்கிரமக்காரர் கையில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, பெருமூச்சு விட்டு, மன்ருடி, நடுங்கி, இரத்தஞ்சிந்தி, வதைக்கப்பட; தேவசமுகப்பிரகாசம் அவருக்கு மறைய; சூரியன் இருளடைய; கன்மலை பிளக்க; பூமி அதிர; வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானக் கர்த்தர், என்னும் சிறந்த நாமங்களையுடையவர் சிலுவையில் அறையுண்டு மரிக்க; மனிதருடைய பாவத்தின் கொடுமையை இவ்வளவென்று மதிக்க யாரால் கூடும்! பாவத்தின் இன்பத்தையும் அதினுலுண்டாகும் அற்பப் பிரயோசனங்களையும் புத்தியீனர் பார்த்து மயங்கட்டும்; நானே என் இரட்சகர் எனக்காகப் பாவமாக்கப்பட்டதையும், அவா

டைந்த சிலுவைபாடுகளேயும் பார்த்துத் தியானித்துப் பாவத்தை வெறுத்துவிடுவேன்.

## 5.

எபிரேயர், உ. கூ. இயேசுவானவர் கொஞ்சக்காலமாய்த் தேவ தூதரிலும் சிறியவராக்கப்பட்டு மரணத்தைச் சகித்ததினலே, மகிமையோடுங் கனத்தோடும் முடிசூட்டப்படக் காண்கிறோம்.

இயேசுவே, உம்முடைய திருவிருந்தை நான் சேரும்போது எனக்காக நீர் பட்ட பாடுகளேயும், எனக்காக நீர் நிறைவேற்றின நீதியையும் நான் விசுவாசித்து, உம்முடைய மரணத்தையும், நீர் அடைந்த மகிமையையும் நன்றியறிதலோடே நினைத்துவரும்படி பரிசுத்தஆவியானவர் எனக்கு உதவிசெய்வாராக. அருமை இரட்சகரே, உலகத்தோற்றத்திற்குமுன் உமக்குண்டாயிருந்த மகிமையையும், எங்களே மீட்கும்படி நீர் அந்த மகிமையை வெறுத்து மனுவுரு எடுத்து, கன்னிகையிடத்திற் பிறந்ததையும், துக்கம் நிறைந்தவராய் நீர் இவ்வுலகத்தில் சஞ்சரித்ததையும், நீர் அடைந்த நிஷ்டூரங்களேயும், உலகத்தாரின் குரோதத்திற்கும் சிநேகிதரின் துரோகத்திற்கும் நீர் இணங்கினதையும், உம்முடைய வேதனே இரத்தவேர்வையையும், உம்முடைய முண்முடியையும், உமது கையிலும் உமது காலிலும் கடாவப்பட்ட ஆணிகளேயும், சிலுவையில் நீர் பட்டபாடுகள் அனைத்தையும், மரணத்தின் கொடுமைக்கும், கல்லறையின் இருளுக்கும், பாதாளத்தில் இறங்கும் பயங்கரத்திற்கும் அஞ்சாமல் அவைகளுக்கு உம்மை ஒப்புக்கொடுத்ததையும், பாவிகள் படவேண்டியதேதேதுண்டோ அதையெல்லாம் நீரே பட்டுத்தரித்ததையும், நீர் இவ்வாருய் எங்களுக்காக ஏற்பட்டு லோகத்தின் பாவங்களேச் சுமந்துதீர்த்ததால் சூரியபிரகாசம் போல் விளங்கிய உமது அன்பையும், நான் விசுவாசித்து நினைக்கும்போது என்னசொல்வேன்! இவைகளுக்கு எந்த ஈட்டைச் செலுத்துவேன்! இயேசுவே, உம்முடைய அன்புக்கு அளவில்லே. இந்த அன்பு "மரணத்தைப்போல் வல்லமையுள்ளது. அதின் தணல் அக்கினித் தணல்போலவும்,

அதின் சுவாலை ஆகாயத்தின் மின்னலைப்போலவுமிருக்கிறது. மிகுந்த சலங்களும் இவ்வன்பை அவியாது. வெள்ளங்களும் அதை அமிழ்த்த முடியாது." உம்மைச் சிலுவையில் அறைந்திறுக்கினது உம்முடைய அன்பேயல்லாமல் ஆணியல்ல. உமக்கு அன்பில்லாதிருந்தால், மனிதர் உம்மைக் கட்டவும், வாதிக்கவும், கொல்லவும் அவர்களாலே கூடாது.

தேவரீர் எனக்காக ஏற்பட்டு மரித்ததை நான் தியானித்து விசுவாசிக்கிறதுமன்றி, நீர் மரணத்தின் கொடுமையை வென்று மகிமையாய் உயிர்த்தெழுந்ததையும், சிறையாக்குதலைச் சிறையாக்கி வெற்றிசிறந்தவராய் பரத்துக்கேறினதையும், மனிதருக்காக வரங்களை வாங்கிக்கொண்டதையும், நீர் பிதாவின் மகிமையிலே பராபரனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறதையும், மத்தியஸ்தராய் எங்களுக்காகப் பரிந்துபேசுகிறதையும், நீர் நியாயந்தீர்க்க வருகிறதையும், இனி நீர் விளங்கக்காட்டும் மகிமைப்பிரஸ்தாபத்தையும் நான் நினைத்துக்கொண்டு, மென்மேலும் அன்புற்று உமக்குத் தோத்திரஞ்செலுத்துவேனாக. இந்த விசேஷங்களெல்லாவற்றையும் நான் முழுப்பத்தியோடே விசுவாசித்து, பாவத்தைப் பரிகரிக்கவும், உம்முடைய சன்னிதியில் பிரவேசிக்கிறதற்கு ஆயத்தம்பண்ணிக்கொள்ளவும், தேவரீர் எனக்குக் கிருபைசெய்தருளும்.

---

விசுவாசமுண்டாகப் பிரார்த்திக்கத்தக்க

## செபம்.

எல்லா இரக்கங்களையுமுடைய பிதாவாகிய சர்வவல்லமையுள்ள தேவனே, நீரே சகல ஈவுகளையும் குறைவற்ற வரங்களனைத்தையும் தந்தருளுகிறவர். உம்முடைய பிரியகுமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தில் நான் குறைவற்ற உத்தம விசுவாசமுள்ளவனாயிருக்கும்படி கிருபைசெய்யும். அவர் என் பாவங்

களுக்காக மரித்ததையும், என்னை நீதிமானுக்கும்படி அவர் உயிர்த்தெழுந்ததையும், பரமண்டலத்தில் உமது வலதுபாரிசத்திலே அவர் எனக்காக நின்று பரிந்துபேசுகிறதையும் மெய்யென்று நான் உணர்ந்து, விசுவாசமென்னும் கண்ணினாலே பார்க்கும்படி எனக்குக் கட்டளையிட்டருளும். அருமையான இயேசுவே! உலகத்தின் பாவங்களைச் சுமந்துதீர்க்கிற தேவஆட்டுக்குட்டியே! நீரே என் பாவங்களைச் சுமந்து தீர்த்தவர். பாவமன்னிப்பும், தேவகிருபையும், ஆத்தும சமாதானமும், இருளின் அதிகாரிகளோடே போராடத்தக்க பலமும், இம்மையில் பரிசுத்தஆவியின் ஐக்கியமும், மறுமையில் நித்திய ஆனந்தமும், நீர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலேயே எனக்குக் கிடைக்கும். கரையில்லாத உமது கருணையும், ஆராய்ந்துமுடியாத உமது அன்புமே என் ஆத்துமத்தின் நம்பிக்கை; உம்முடைய நாமமே எனக்குச் சகாயம். நீரே என் பக்கமாயிருப்பீரானால் பசாசுக்களும் மனிதரும் எனக்கென்னசெய்வார்கள்? கர்த்தரே, விசுவாசிக்கிறேன்: என் அவிசுவாசம் நீங்க உதவிசெய்யும். உம்முடைய வாக்கு எவ்வளவு உறுதியுள்ளதோ, அந்த வாக்கைப் பற்றிக்கொள்ளும் என் விசுவாசமும் அவ்வளவு உறுதியுள்ளதாகும்படி கட்டளையிடும். நீர் வாக்குத்தத்தம் பண்ணினவைகள் யாவற்றையும் நிறைவேற்றுவீரென்று நான் முழுப்பத்தியோடே நம்பி, விசுவாசத்திலே பெலன்கொண்டு, உம்மை மகிமைப்படுத்துகிறவனாயிருக்கும்படி உம்முடைய பரிசுத்தஆவியின் ஒத்தாசையை எனக்குத் தாரும். என் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை அறியும் அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணத்தக்க ஞா

ணத்தை எனக்கு அருளும். என் இரட்சகர்தாமே எனக்கு அடைக்கல ஸ்தலமாயிருக்கும்படிக்கும், என் இருதயத்தில் அவர் என்றைக்கும் வாசமாயிருக்கும் படிக்கும் என் தேவனாகிய உம்மில் நான் முழுஇரு தயத்தோடே அன்புகூர்ந்து, என் சகோதரரெல்லாரி டத்திலும் சிநேகமாயிருக்கும்படிக்கும், கிறிஸ்து தமது இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டவர்களோடே ஒரு பங்கும் ஒரு சுதந்தரவீதமும் எனக்குக் கிடைக்கும் படிக்கும் மெய்யான உயிருள்ள விசுவாசத்தை எனக் குத் தந்தருளும். விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய இயேசுக்கிறிஸ்துவினிமித்தமே. ஆமென்.

---

# III.

*கிறிஸ்துநாதரில் அன்புகூர்ந்து, அவர் செய்த இரட்சிப்புக்காக அவரைத் துதித்து, அவருடைய அவயவங்களாகிய நம்முடைய சகோதரரிடத்திலும் அன்பா யிருக்கும்படி ஏவிவிடும்*

## தேவசிநேகத்தியானங்கள்.

### 1.

*௧ யோவான், ௩. ௧. நாம் பராபரனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படும்படி பிதாவானவர் நமக்குக் காண்பித்த மிகுந்த அன்பை நோக்கிப்பாருங்கள்.*

தேவனற்கருணையில் விளங்கக்காட்டியிருக்கிற இரட்ச ணிய அன்பையும் இரக்கங்களையும் நான் இடைவிடாமல் தியானம்பண்ணி நன்றியறிதலுள்ளவனாயிருக்கவேண்டும். என் இருதயம் எப்பொழுதும் அன்பினாலே நிறைந்திருப்ப தாக. என் பாவத்தினிமித்தம் நான் கண்ணீர்விட்டுத் துக் கித்து, கிறிஸ்துவின் மரணத்தினாலுண்டாகிய நம்பிக்கை

யுடையவனுகி, அவருடைய பந்தியின் வழியாய் அருளப்படு கிற நன்மைகளை அடையும்போது, தேவ அன்பின் மாட்சி மையைக்குறித்து நான் ஆச்சரியப்படவேண்டியது. என் இரட்சகருடைய அன்பைப்போல உலகத்திலே அன்புண் டோ! சகல உலகங்களையும் உண்டாக்கின தேவகுமாரன் பாவிகளுக்காக மரித்தது எந்த அதிசயத்திலும் அதிசயமே. பாவமன்னிப்பாகிய மீட்பும், புத்திரசுவிகாரமும், பரிசுத்த ஆவியின் வரங்களும், எண்ணிறந்த திவ்விய நன்மைகளும் அவருடைய அன்பினுலேயே எனக்குக் கிடைத்தன. நான் நிர்ப்பந்த பாவியாயிருந்தும் சுவிசேஷத்துக்குரிய நம்பிக்கை யையும் ஆறுதலையும் அடைந்தேன். பராபரனுடைய புத் திரனுயிருக்கிறதைக்குறித்து ஆவியானவர் என்னுடைய ஆவி யோடேகூட சாட்சிகொடுக்கிருர். கர்த்தருடைய ஊழியக் காரரோடே அவருடைய பந்தியைச் சேர்ந்து, தேவசமாதா னத்தையும் ஆத்துமபலத்தையும் மென்மேலும் அடைவதற் கேற்ற சமயங்கள் எனக்குக் கிடைத்தன. இவ்விரக்கங்களுக் காக நான் நன்றியறிதலும் அன்பும் உள்ளவனுயிருக்கவேண் டாமா? என் தேவனே, சகல ஈவுகளிலும் உத்தம ஈவாகிய அன்பை எனக்கருளிச்செய்யும். தீயானது தீயை எழுப்பு வதுபோல், உம்முடைய அன்பு என்னிடத்தில் அன்பை எழுப்புவதாக. இரட்சகரே, உம்முடைய அன்புக்காக வாஞ் சித்து ஏங்குகிறேன். உமது அன்பினிமித்தம் வானம் மகிழ் ந்து பூரிப்பாகி, சமுத்திரமும் அதின் நிறைவும் முழங்குவ தாக. என் ஆத்துமம் உமதுமேல் வாஞ்சையாகக் கதறுகி றது. பராபரனே! என் ஆத்துமம் சீவனுள்ள தெய்வமாகிய பராபரன்மேலே தாகமாயிருக்கிறது. நான் எப்போது பரா பரனுடைய சன்னிதியிலே காணப்படுவேன்?

## 2.

க பேதுரு, க. அ. அவரை நீங்கள் காணுமலிருந்தும் அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள்.

சரீரத்துக்குரிய கண்ணுலே என் இரட்சகரை நான் காண

வில்லை. ஆகிலும் அவருடைய ஆசீர்வாதங்களைப் பெற்று, அவரோடே ஐக்கியமடைந்து, என் மீட்பர் உயிரோடிருக்கிறா ரென்று நிச்சயமாய் அறிந்திருக்கிறேன். அவர் எனக்காகச் செய்ததையும், அவர் செய்துவருகிறதையும், செய்வோமென்று அவர் சொல்லியிருக்கிறதையும் நான் யோசித்து அவரிடத் தில் அன்புகூராமல் இருக்கக்கூடுமோ! எனக்காக மரித்தவரும், என்னை நரகத்திற்குத் தப்புவித்தவரும், இம்மையில் சமாதானத் தையும் மறுமையில் மோட்ச ஆனந்தத்தையும் அருளுகிறவரு மாகிய திவ்விய இரட்சகரிடத்தில் அன்பாகவே இருக்கிறேன். கர்த்தர் என் பங்கிலிருந்தால் எனக்குத் துக்கம் என்ன? என் அன்பு குறைந்ததே என் துக்கம். இரட்சகரே, நான் உம்மைக் காணாதிருந்தும் விசுவாசித்து அன்புகூருவேனாக. நான் மென்மேலும் அன்புகூரும்படி எனக்கு விசுவாசத்தை மென் மேலும் தாரும். நீர் பாடுபட்டு மரித்ததினாலும், நான் உம்மை நினைக்கும்படி நீர் ஏற்படுத்தின சாக்கிரமெந்தினாலும் என் ஆத்துமத்தை உருகச்செய்து அன்பினாலே நிரப்பியருளும்.

## 3.

க யோவான், ச. ௰௯. அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்த படியால், நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்.

அன்புள்ளவர்கள் எப்பொழுதும் சந்தோஷப்படுவார் கள், சுயாதீனமுள்ளவர்களாயிருப்பார்கள், தங்கள் கடமை களை நிறைவேற்ற உச்சாகமாய் ஓடுவார்கள், சுயபலத்துக்கு மிஞ்சின கிரியைகளைச் செய்யத் துணிவார்கள், செய்யக்கூ டாத காரியமில்லையென்றெண்ணுவார்கள். அன்புள்ளவர்கள் ஒன்றையும் வருத்தமாக நினைக்கிறதில்லை, பிரயாசத்தினாலே விடாய்த்துப்போகிறதில்லை, உபத்திரவத்தினாலே சலிப்பை யடைகிறதில்லை, பயங்கரத்தினாலே கலங்குகிறதில்லை. அன் பானது தீயைப்போல் எப்பொழுதும் வளர்ந்தேறுகின்றது. அதை அவிக்கும்படி எவ்வளவு பிரயத்தனஞ்செய்வார்களோ அது அவ்வளவாய் கொழுந்துவிட்டு எழும்பும். என் தேவ

னே, என் இருதயத்தை அன்பினாலே நிரப்பி, உம்மில் அன்பா யிருக்கிறதே இனிமை என்று உணரும்படி எனக்கு அருளிச் செய்யும். உமது அன்புக்காக நான் எல்லாவற்றையும் நஷ்ட மென்றும் குப்பையென்றும் எண்ணும்படியாகவும், என் ஆத் துமம் உம்மைத் தொடர்ந்து தரிசித்து உம்மையே அநுபவித் துக்கொள்ளும்படியாகவும், பரிசுத்தஆவியானவர் உமது அன் பை எனக்குணர்த்தி என்னை நடத்துவாராக.

## 4.

*பிலிப்பியர், உ. ச. அவரவர் தங்களுக்கானவைகளைமாத்திரமல்ல பிறருக்கானவைகளையும் நோக்குவார்களாக.*

தற்சிநேகம் என் இருதயத்தில் தரித்திருக்கிறது. ஆகிலும் பரிசுத்த பிதாவே, நான் இதுமுதல் எல்லாரிடத்திலும் அன்பா யிருக்கத்தக்கதாக என் இருதயம் அனல்கொண்டு விரியும்படி என்னை உமது ஆவியினாலே நிரப்பியருளும். என் குடும்பத்தா ரை நான் உண்மையாய்ச் சிநேகித்து, அவர்களைத் தாங்கி, அவர் களுக்கு இடறல் உண்டாக்காமல், அவர்களுடைய ஆத்தும பிரயோசனத்திற்கேதுவாய் நடக்கும்படி எனக்கு நல்மன தைத் தாரும். என்னிலே நான் அன்பாயிருக்கிறதுபோல் பிறரி லும் அன்பாயிருக்கவேண்டுமென்றும், எனக்கு அவர்கள் செ ய்யும்படி என்னத்தை விரும்புகிறேனோ, அதை நானும் அவர் களுக்குச் செய்யவேண்டுமென்றும் விரும்புகிறேன். இந்த விருப்பத்துக்கேற்ற பலத்தை எனக்குக் கட்டளையிடும். என க்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தவர்களை முழுமனதோடே மன்னிக்கிறேன். என்னைப் பகைத்து எனக்கு அநியாயஞ் செய்தவர்களிருந்தால், அவர்களைத் தேவரீர் மன்னித்து ஆத் துமநன்மைகள் யாவையும் அவர்களுக்குத் தந்தருளும். நானும் எந்தவிதமாயாவது பிறருக்கு அநியாயஞ்செய்திருந்தால், அப் படிப்பட்டவர்களைத் தேவரீர் ஆசீர்வதித்து, நான் செய்த அநி யாயத்தை உமது இரக்கத்தினாலே நிவிர்த்திசெய்து, அவர்கள் என் குற்றத்தை மன்னிக்கும்படி அவர்கள் இருதயத்தை ஏவி

எனக்கிரங்குகிற குணத்தை அவர்களுக்குத் தாரும். பரமபி தாவே, எல்லா மனிதரையும் இரக்கமாய் விசாரித்து இரட்சி யும். இராசாத்தியவர்களையும் அதிகாரிகளெல்லாரையும், கண் காணிமார் குருமாரையும், உம்முடைய திருச்சபையனைத்தை யும், இத்தேசத்தாரையும், பெரியோர் சிறியோரையும், ஐசுவரி யவான்கள் தரித்திரவான்களையும், இளைஞர் மூத்தோரையும், உலகத்திலிருக்கிற சகல சனங்களையும் ஆசீர்வதித்தருளும். எந்த தேசத்திலும் உமது சுவிசேஷத்தின் வெளிச்சத்தைத் தேவரீர் பிரகாசிக்கப்பண்ணி, அஞ்ஞானிகள், மகம்மது மார்க்கத்தார், பொய்மதஸ்தர் எல்லாருக்கும் இரங்கி, அவர்கள் அறியாமையையும் மனக்கடினத்தையும் நீக்கி, அவர்களுக்கு உமது பரிசுத்தஆவியைத் தாரும். சிலுவையில் அறையுண்டு மரித்தவருடைய அன்பு எந்த பாஷையிலும் கூறப்படும்படி செய்து, எல்லாரும் விசுவாசத்தோடும் வணக்கத்தோடும் உம் முடைய பரிசுத்தபந்திக்கு விருந்தராய்க்கூடி அன்பினால் நிறைந்து கிறிஸ்துவின் மரணத்தை நினைத்துக் கொண்டாடும் படி கட்டளையிட்டருளும்.

---

மேற்காட்டிய நன்றியறிதலும் அன்பும் உண்டாகப்
பிரார்த்திக்கத்தக்க

## செபம்.

என் ஆத்துமநேசரே, தேவரீர் என்னை மீட்டுக் கொள்ளும்படியாய் அடிமையின் ரூபமெடுத்து, நிந் தைகளையும் விரோதங்களையும் சகித்து, சிலுவையின் மரணத்தை அடையும்படி உம்மைத் தாழ்த்திக்கொண் டீரே. இதினாலே விளங்கிய சிறந்த அன்புக்காக நான் உம்மைத் துதித்து, அவ்வன்பை நன்றியறிதலோடே நினைத்துக் கொண்டாடும்படி எனக்குக் கிருபைசெய் யும். உமது காயங்களால் குணமானேன், உமது மரணத்தினாலே பிழைத்தேன், உமது இரத்தத்தால்

என் பரமபிதாவோடே ஒப்புரவானேன்: இயேசுவே, உமது அன்பின் ஐசுவரியம் எவ்வளவு! உமது தயவையும் உமது இரக்கங்களின் ஆழத்தையும் அளவறுக்க யாராலே கூடும்? மனிதர் தேவரீருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்திருக்க, பாவிகளுக்கு வரும் தண்டனையைத் தேவரீரே ஏற்றுக்கொண்டீர். என் உயிர்க்கு உயிராகிய கிருபையுள்ள கர்த்தரே, நீர் எனக்காக உம்முடைய சீவனைத்தந்த அன்பினாலே என் இருதயம் மகிழச்செய்யும். இந்த உபகாரத்திற்காக ஏழையேன் எந்தப் பிரதியுபகாரத்தைச் செய்யக்கூடும்! உம்முடைய அன்புக்காக என்னுடைய அன்பையே அங்கிகரியும். இதையல்லாமல் வேறே காணிக்கை என்னிடத்தில் இல்லை. தேவரீர் இந்தக் காணிக்கையைப் புறக்கணியாமல், தயவாய் ஏற்றுக்கொண்டு, என் அன்பை நாடோறும் வர்த்தித்துப் பெருகும்படி செய்யும். இயேசுவே, ஆத்துமநேசரே, என் பேரில் நீர் வைத்த அன்புக்காக நான் உம்மை முழுமனதோடே நேசித்துப் புகழ்ந்து தோத்தரிக்கும்படி செய்யும். இம்மையிலிருக்கையில் என் அற்ப அன்பு புகழ் பணிவிடைகள் உமது அன்புக்குப் போர்ந்தவைகளல்ல, மறுமையிலோ என் முழு ஆத்துமாவோடும், என் முழுத் திராணியோடும் உம்மை நேசிக்கத்தக்கதாக உமக்குச் சித்தமானவேளையில் என்னை உமது பரமஇராச்சியத்தில் சேர்த்துக்கொள்ளும். கர்த்தரே, தேவரீர் என்னை நேசித்துக்கொண்டதுபோல், நான் என் சகோதரரிடத்திலும், எல்லா மனிதரிடத்திலும் அன்பாயிருந்து, அவர்களை ஆதரித்து நேசித்துவரும்படியாக என் இருதயத்தை விசாலமாக்கி, சகல ஈவுகளிலும் சிறந்த ஈவாகிய அன்பை எனக்குத் தாரும். நான் அன்பினாலே இரட்சிக்கப்பட்டவனானதால், எப்

பொழுதும் அன்புள்ளவனுயிருக்கும்படி எனக்குக் கிருபைசெய்தருளும்: உமது திவ்விய அன்பின்நிமித்தமே. ஆமென்.

---

# IV.

நாம் தேவகிருபையிலும்,
கர்த்தராயிருக்கிற இயேசுக்கிறிஸ்துவை அறியும்
அறிவிலும் வளர்ந்தேறுகிறோமோ இல்லையோவென்று
தற்சோதனை செய்கிறதற்கேற்ற

## பத்திப்பரிட்சைத்தியானங்கள்.

### 1.

௨ கொரி. ௰௩. ௫. உங்களுக்கு விசுவாசம் உண்டோ? அதைக்குறித்து உங்களைச் சோதியுங்கள்.

என் ஆத்துமநிலைமையை நான் ஆராய்ந்து பார்க்கும்போது என் மனச்சாட்சி என்னைக்குறித்து எந்தத் தீர்ப்பைச் சொல்லும்? பராபரன் என்னைக் குற்றமற்றவனாகத் தீர்ப்பாரோ? ஆக்கினைக்குட்படுத்துவாரோ? இந்த வழக்கு எப்படித் தீரும்? தம்முடைய நியாயப்பிரமாணத்தை நீதியுள்ள கர்த்தர் தமக்கு முன்பாகவைத்து என்னை நியாயந்தீர்த்தால், நான் முற்றிலுங் குற்றவாளியாய்த் தீர்க்கப்படுவேன். ஒவ்வொரு கற்பனையையும் மீறியிருக்கிறேனே. அவர் என்னை நித்திய கோபாக்கினைக்கு ஒப்புக்கொடுத்தாலும் நீதியாகவேயிருக்கும். ஆகிலும், என் பாவங்களுக்காக வரவேண்டிய ஆக்கினையைக் கிறிஸ்துதாமே அடைந்து தீர்த்தாரென்றும், நான் நியாயப்பிரமாணத்தின் கீழிராமல் கிருபையின் கீழிருக்கிறேனென்றும் விசுவாசித்துத் தைரியங்கொள்ளவேண்டும். இப்படிப்பட்ட தைரியம் என்னிடத்தில் உண்டா? பாவிகளை இரட்சிக்கும்படி கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தது நிச்சயமே. நானும்

பாவியென்று உணர்ந்திருக்கிறேன். இப்படியிருக்க, பாவத்தினிமித்தம் துயரப்பட்டு கிறிஸ்துவினிடத்தில் அடைக்கலம் புகுந்திருக்கிறேனா? எனக்குப் புண்ணியமில்லையென்று நான் உணர்ந்து, கிறிஸ்துவின் மரணத்தினாலேயே பாவநிவிர்த்தியும், தேவசமாதானமும், நித்தியசீவனும், எந்தெந்த ஆசீர்வாதங்களும் உண்டாயினவென்று நம்பி, அவரிடத்தில் முழு விசுவாசமாயும் முழுபத்தியாயும் இருக்கிறேனா? என் பிரயாசங்களையும் என் செபங்களையும் நான் சற்றாகிலும் நம்புகிறதில்லையா? பிரயாசமும் செபமுமின்றி இரட்சிப்படைய ஏதுவில்லையே. ஆகிலும் எப்படிப் பிரயாசப்பட்டாலும், எப்படிச் செபம்பண்ணினாலும் பிரயோசனமற்ற ஊழியக்காரனாயிருக்கிறேனென்று நான் ஒத்துக்கொண்டு, கிறிஸ்துவின் மூலமாய்ப் பரர்பரன் அருளிய இரக்கத்தையே நம்புவது அவசரமென்று கற்றுணர்ந்திருக்கிறேனா? மேலும், என் விசுவாசம் பலனற்றதும் செத்ததுமான விசுவாசமோ? இருதயத்தைப் பரிசுத்தமாக்கி, திவ்விய விருப்பங்களை எழுப்பி, சன்மார்க்க நடக்கைக்கு ஏவிவிடுகிற உயிருள்ள விசுவாசமோ? என் யோசனைகளும் நினைவுகளும் ஆவிக்கேற்றவைகளோ? தேவ கிருபையினாலும் பரிசுத்தஆவியின் உதவியினாலும் என் ஆத்துமா சற்று சீர்ப்பட்டிருக்கிறதாக நம்புகிறேன். ஆகிலும் நான் அடைந்த சீரினாலே எனக்கு ரட்சிப்புக் கிடைக்குமென்று எண்ணாமல், கிறிஸ்துவினாலேயே ஆத்தும நன்மைகளும், திவ்விய குணங்களும், நித்தியரட்சிப்பும் கிடைக்குமென்றறிந்து, இப்படியே நான் அவரையே நம்பி அவரிடத்தில் தரித்துக்கொள்வேனாக. என்னை ஆராய்ந்தறிந்து கர்த்தருடைய சரீரத்தை விசேஷித்துக்கொண்டு, அவருடைய மாமிசத்தைப் புசித்து, அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணும்படியாகவும், அவருடைய பரிசுத்த பந்தியைச் சேரும்போது விருதாவாய்ச் சேராமல் ஆறுதலையும் பலனையும் அடையும்படியாகவும், என்னை ஆயத்தம்பண்ணிக் கொள்ளக்கடவேன்.

## 2.

*சங்கீதம், ௰௬. ௫. கர்த்தர் என் சுதந்தரத்தின் வீதமும், என் பாத்திரத்தின் பங்குமானவர்.*

ஒருவனுடைய பொக்கிஷம் எங்கேயோ அவனுடைய இருதயமும் அங்கே இருக்கும். அப்படியானால் கர்த்தர் எனக்குப் பொக்கிஷமாகி என் இருதயத்தில் இருக்கிறாரா? எனக்காக மரித்த இரட்சகரை நான் இடைவிடாமல் தியானம்பண்ணி துதித்து, அவரோடே சஞ்சரித்துவருகிறேனா? அவருடைய அன்பா நான் பூமியில் விரும்புகிற சுதந்தரம்? கர்த்தர்தாமே எனக்குச் சுதந்தரமும் பொக்கிஷமுமானால் என் இருதயம் உலகயோசனைகளால் நிறைந்திருக்குமா? ஜெபத்தியானங்களில் நான் உருக்கமும் வாஞ்சையுமற்று இருப்பேனா? இப்படிப்பட்ட குற்றங்குறைவுகள் எனக்குண்டு; ஆயினும், என் தேவனே! நீரே என் சுதந்தரமென்று ஏற்றுக்கொள்ளுகிறேன். என்னைச் சுற்றிநிற்கிற பாவம் எனக்குத் துக்கமும் பாரமுமாயிருப்பதினாலே, தேவரீர் என்னை மாசற்ற பரிசுத்தனாக்கவேண்டுமென்று விரும்புகிறேன். இந்த விருப்பம் எனக்குண்டாயிருந்தும், நான் கர்த்தர்பேரில் வைத்திருக்கிற அன்பு அற்பந்தான். என் நீதி கந்தையே. இதையுணர்ந்து நான் சிலுவையின் அடியில் விழுந்து, என் இரட்சகருடைய கிருபையே எனக்கு வேண்டுமென்று மன்றாடிக்கொள்ளுகிறேன். ஒருவிதத்திலும் என்னைக்குறித்து மேன்மைபாராட்ட இடமில்லை. சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவையும், அவர் எனக்குச் சம்பாதித்திருக்கிற திவ்விய வரங்களையுங்குறித்தே மேன்மைபாராட்டலாம். சங்கீதத்திற் சொல்லியபடி, "தேவரீர் எனக்கு வரும் வீதத்தைக் காப்பாற்றுவீராக; நேர்த்தியான இடங்களில் எனக்கு வீதங்கிடைத்தது. ஆம்! வடிப்பமான சுதந்தரம் எனக்குண்டாயிற்று."

## 3.

உ பேதுரு, ௩. ௰௮. இயேசுக்கிறிஸ்துவின் கிருபையையும், அவரை அறிகிற அறிவையும் அதிகமதிகமாய் அடைந்துகொள்வீர்களாக.

மாசந்தோறும் கர்த்தருடைய பந்தியைச் சேர்ந்துவருகிறதினுலே நான் பரிசுத்தத்தையும் பரம விருப்பங்களையும் மென்மேலும் அடைந்துவருகிறேனு? உலகத்திற்கு மரித்துத் தேவனுக்குப் பிழைத்திருக்கிறேனு? இந்தக் கேள்விக்கு எந்த உத்தரவுசொல்லுவேன்? இந்தத் திவ்விய எத்தனங்களினுலே தேவபத்தி என்னிடத்தில் குறைந்துபோகாமலிருக்கிறதென்று நம்பிக்கையுண்டு; ஆனுலும் அது வளர்ந்தேறிவருகிறதென்றும் சொல்லக்கூடுமோ? நான் என்னைச் சோதித்துப் பார்த்து, தேவரீர் எனக்கு அருளின அன்பைச் சிந்தித்துவரும்போது, கரையில்லாத சமுத்திரம் இரண்டு எனக்குமுன் இருக்கிறதாகத் தோன்றுகின்றன. ஒரு சமுத்திரம் என் இருதயத்திலுள்ள பாவம்; மற்றது என் இரட்சகருடைய கிருபை. கர்த்தரே, நான் இப்பொழுது தியானம்பண்ணிவருகையில் விடாய்த்துப்போகாமல் ஓடவும், இளைத்துப்போகாமல் நடக்கவுந்தக்கதாக எனக்குப் புதுப்பலத்தைத் தந்து, உமது ஆவியின் வரங்களை எனக்குப் பரிபூரணமாய் ஈய்ந்தருளும்.

---

பத்தி வர்த்திக்கிறதற்காகப் பிரார்த்திக்கத்தக்க

## செபம்.

பரமபிதாவே, நான் உலகத்தை வெறுத்து உமக்கே ஊழியஞ்செய்யவேண்டுமென்றும், என் சரீரத்தையும் என் ஆத்துமத்தையும் என் நினைவுகள் விருப்பங்கள் முயற்சிகளையும் உம்மிடத்தில் படைத்தொப்புவிக்கவேண்டுமென்றும், நான் கிருபைவரங்களிலும் பரிசுத்தத்திலும் வளர்ந்தேறவேண்டுமென்றும் அடியேன் முழுஆசையோடே விரும்புகிறது தேவரீருக்

குத் தெரியும். என் தேவனே, என் விருப்பத்திற்கேற் றபடியே நான் உமக்கு ஆலயமாகும்படி என்னைப் பிரதிஷ்டைசெய்து முற்றிலும் என்னைப் பரிசுத்தவா ளாக்கும். நானாய் நன்மையானதொன்றையுஞ் செய் யக்கூடாதிருந்தும், உம்முடைய பலத்தினாலே சகலத் தையுஞ் செய்யக்கூடும். ஆதலால் தேவரீர் என்னிடத் தில் வாசம்பண்ணி, என் பலவீனத்தில் பெலனுண் டாக்கி, சோதனைகளில் எனக்கு உதவிசெய்து, உல கத்தைச் செயிக்கிற விசுவாசத்தைத் தந்து, உமது கிரு பையால் எனக்கு முந்திக்கொள்ளும். என் பரனே, நீர் எனக்குப் பிதாவாயும், நான் என்றென்றைக்கும் உமக்குப் பிள்ளையாயுமிருக்கவேண்டும். நான் பின் னானவைகளை விட்டு, முன்னானவைகளைத் தேடிக்கொ ண்டு, உமது ஆவியின் வரங்களை மென்மேலும் அடை யும்படிக்கும், உம்முடையவர்களுக்கு நீர் அருளுகிற அன்பை நான் ருசித்து, அன்பிலே வேரூன்றி பத்தி யில் வளர்ந்தேறும்படிக்கும் இந்தப் பரிசுத்த சாக்கிர மெந்தை ஏற்படுத்தினீரே: இந்தத் திவ்விய எத்தனங் களோடே உம்முடைய ஆசீர்வாதத்தையும் தந்து, என் னைச் சீர்திருத்தி, உமது பரமபுண்ணியங்களினாலே என்னை அலங்கரித்தருளும். ஆமன்.

# கர்த்தருடைய இராப்போசனத்தைப்

பரிமாறும் நாளின் காலையில்
தேவாலயத்திற்குப் போகுமுன்னே, அந்தரங்கத்திலே
விசேஷ ஆயத்தமாக வாசிக்கத்தக்க தியானங்களும்
செபங்களும்.

## I.

## ஆயத்தத்தியானங்கள்.

### 1.

*மத்தேயு, உஉ. ச. எல்லாம் எத்தனமாயிருக்கிறது; கலியாணத்திற்கு வாருங்கள்.*

ஆத்துமாவே, பரம இராயனுடைய கலியாண விருந்துக்குப்போக உன்னை ஆயத்தம்பண்ணிக்கொள். உன்னை விருந்தனுய்ச் சிறப்பித்துச் சோடித்து, கலியாண வஸ்திரத்தை உடுத்திக்கொண்டு, உன் ஞானமணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படு. சகலமும் ஆயத்தமே, தாமதமில்லாமல் போய்ச்சேரு.

உன்னை அழைக்கிறவர் தேவாதிதேவன். அப்படிப்பட்டவர் அழைக்கிற தயவை நீ அசட்டைசெய்யாமல், அவருடைய பந்தியைச்சேர விரைந்தோடு.

அவர் உன்னை அழைக்கிற தயவினிமித்தம் சேரவேண்டியதுமன்றி, அவர் விசுவாசிகளுக்குக் கொடுக்கும் நன்மைகளைப் பெற்றனுபவிக்கும்படியாகவும் சேரவேண்டியது. ஆத்துமாவே, அந்த நன்மைகளென்னவென்று யோசித்துக்கொள். இந்தப் பந்தியின்மூலமாய் உன் தேவனானவர் தமது வாக்குத்தத்தங்களை உனக்குறுதியாக்கி, பாவமன்னிப்பை நிச்சயப்படுத்தி, உன் மீட்பருடைய புண்ணியங்களை உனக்குப் பலிக்கச்செய்து, தேற்றரவையும் ஆத்துமபலத்தையுந்தந்து, தமது

கிருபையை உனக்குப் பொழிகிறதுமன்றி, தாமாய் உன்னிரு தயத்தில் வந்து வாசம்பண்ணி, உன்னோடே ஒன்றாயிருந்து, உன்னைத் தமக்காலயமாகப் பிரதிஷ்டைசெய்து, மோட்சவா சிகளுக்குரிய ஆனந்தத்தின் அச்சாரத்தை உனக்குக் கட்ட ளையிடவும் சித்தமாயிருக்கிறாரே! உன் தேவனானவர் இவ்வ ளவு அருமையான நன்மைகளை உனக்கு ஆத்துமபோசன மாக எத்தனம்பண்ணி வைத்திருக்கும்போது நீ தாமதிக்கிற தென்ன? அவருடைய அன்பைப் போற்றிக்கொண்டு அவரு டைய பந்தியைச்சேரு.

பரமஇராயன் உன்னை அழைத்ததால் உனக்குக் கிடைத்த மேன்மை இவ்வளவென்று சிந்தித்துக்கொள். கர்த்தாவே, எல்லாரிலும் நிர்ப்பாக்கியனும் அசுத்தனுமாகிய என்னை நீர் உமது பரமவிருந்துக்கு அழைத்த கனம் எதினாலே எனக்குக் கிடைத்தது! இந்தக் கனத்திற்கு நான் எம்மாத்திரம்! அதற்கு என்னிடத்தில் எந்தத் தகுதியுண்டு! நீர் மகிமையுள்ள பத் திராசனத்தை விட்டிறங்கி, எனக்காகச் சிலுவையில் அறை யுண்டு மரித்தகருணை போதாதா! அதோடே, அடியேனை உம்முடைய சன்னிதியில் அழைத்துப் பந்தியிருத்தி, சீவ அப்பத்தை எனக்குப் போசிக்கத்தந்ததும் கருணைப்பெருக் கமே!

ஆத்துமாவே, உன்இரட்சகர் உனக்காகச் சிலுவையில் மரி த்த அன்பை நீ இடைவிடாமல் நினைத்துக்கொள்; அவர் தமது பிதாவின்கோபாக்கினையாகிய ஆலையை மிதித்து, வேதனைகள் வியாகுலங்களாகிய சாகரத்தில் அமிழ்ந்தினவராகி, என் தேவ னே! என் தேவனே! நீர் என்னைக் கைவிட்டதேதென்று கூப்பிட்டாரே. அவர் அப்பொழுது உன் இரட்சிப்புக்காகக் கொரூரமான நிந்தைகளுக்கும் மரணவேதனைகளுக்கும் மன தாரத் தம்மை ஒப்புக்கொடுத்த அன்பை நீ பார்த்துணர்ந்து, அவ்வன்பை நித்திய நன்றியறிதலோடே நினைத்துக்கொள்ள வும், உன் ரட்சகர் தமது மரணத்தினாலே சம்பாதித்த உனக்கா யத்தமாக்கியிருக்கிற ஞானநன்மைகளை வாங்கிக்கொள்ளவும் மனமகிழ்ச்சியோடே அவருடைய பந்தியைச் சேருவாயாக.

## 2.

*சங்கீதம், ௫௧. ௰௮. பராபரனுக்கு ஏற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்.*

*என் இருதயத்தை ஆராய்ந்தறிந்திருக்கிற பராபரனே! இந்தச் சாக்கிரமெந்தைப் பத்திவணக்கத்தோடும், முழுப் பிரியத்தோடும் வாங்கிக்கொள்ள விரும்புகிறேன். ஆண்டவரே! தேவரீர் என் விருப்பத்தை அறிந்திருக்கிறீர். என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது. பராபரனே! என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது. என் முழுஇருதயத்தையும் எனக்குள்ள எல்லாவற்றையும் உமக்கே ஒப்புக்கொடுக்கிறேன். இந்த ஏழையின் விருப்பத்தைக் கவனித்துப்பாரும். கர்த்தாவே! என் இருதயம் பண்ணும் ஆயத்தத்தை நோக்கியருளும். என் சுபாவ பெலவீனத்தால் உண்டாகும் குறைவுகளை உம்முடைய அளவற்ற திவ்விய தயவால் நிறைவாக்கும். தேவரீரிடத்தில் பரிபூரண மீட்புண்டே; ஆதலால், இதோ! பாவியேன் உம்மண்டை வரத்துணிந்தேன். காணமற்போன ஆட்டைப்போல் நான் வழிதப்பி உம்மைவிட்டு மருளவிழுந்தேன்; ஆனாலும் இதோ! திரும்பிவருகிறேன். ஆடுகளுக்காகச் சீவனைத்தந்த நல்ல மேய்ப்பரே! காணமற்போனதைத் தேடி இரட்சிக்கவந்த இரட்சகரே! உம்முடைய அடியானைத் தேடி என்னை உம்முடையவனுக்கியருளும். பலவகையான துராசை இச்சைகளினாலே நொந்து வருந்தினவனாய் உம்மிடத்தில் வருகிறேன். கர்த்தாவே! உமக்குச் சித்தமுண்டானால் என்னைச் சுத்தமாக்க உம்மாலாகும். "பிணியாளிகளுக்கு வைத்தியன் தேவை" என்று தேவரீர் அறிந்திருக்கிறீர். நீரே எங்கள் வியாதிகளை எல்லாம் உத்தரித்த மெய்யான ஆத்தும வைத்தியனாயிருக்கிறீர். கர்த்தாவே, எனக்கிரங்கும். என் ஆத்துமத்தைச் சொஸ்தப்படுத்தும். கர்த்தாவே! கலங்கின ஆவியே தேவரீருக்கு ஏற்றபலி; நொறுங்கினதும் நருங்குண்டதுமான இருதயத்தைத் தேவரீர் புறக்கணியீர். நான் தெய்வீக சமாதானம் அடைந்த ஆவி*

யுள்ளவனாய் இனிமேல் உமக்குத் துதிதோத்திரபலியைச் செலுத்தத்தக்கதாக பாவத்தினிமித்தம் கலங்கின என் ஆவியை இப்பொழுது உமக்குப் பலியாகச் செலுத்துகிறேன்.

## 3.

லூக்கா, ௨௨. ௰௯. என்னை நினைவுகூரும்படி இப்படிச் செய்யுங்கள்.

உம்மை நினைக்கும்படி இப்படிச் செய்யக் கட்டளையிட்டிருக்கிறீரோ? இரட்சகரே, நான் உம்மை நினையாமலிருப்பதெப்படி! நீர் எனக்காகச் சிலுவையில் அறையுண்டு பாடுபட்டும், பாடுபட்டபொழுது நீர் என்னை அன்போடே நினைத்தும், இச்சாக்கிரமெந்தின்மூலமாய் உம்முடைய மரணப்பாடுகளை நான் கண்ணால்கண்டதுபோல இருந்தும், உம்மை மறக்கக்கூடுமோ! என் பாவமே உமது மரணத்திற்குக் காரணமென்றும், உமது மரணபுண்ணியங்களினாலே என் பாவதோஷங்களனைத்தும் நிவாரணமாயினவென்றும் நான் அறிந்திருக்க, உம்மை மறக்கக்கூடுமோ! உமதன்பின் பெருக்கத்தை நீர் எனக்கு உணர்த்தி, நீரே இன்பப்பெருக்கமாய் என்னிடத்தில் வந்து தங்குகிறவராயிருக்க, நான் உம்மை மறக்கக்கூடுமோ! என் இரட்சகரே! உம்மை நினைக்கிறேன். நீர் மகிமையோடே திரும்ப வரும்பொழுது என்னை நினைத்தருளும்.

## 4.

௧ கொரி. ௰௧. ௨௮. எவனாகிலும் தன்னைத்தான் சோதித்தறிந்து, பின்பு இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்திலே பானம் பண்ணக்கடவன்.

ஆத்துமாவே, பரிசுத்தபந்தியைச் சேருகிறதற்கு முன்னே எந்த நோக்கத்தோடே சேரப்போகிறாயென்றும், எப்படிப்பட்ட விருப்பத்தோடே சேரவேண்டுமென்றும் சிந்தித்துக்கொள். சேரவேண்டிய முகாந்தரங்களென்னவெனில், பராபரன் நமக்காகத் தம்முடைய குமாரனை ஒப்புக்கொடுத்த அன்பின் ஐசுவரியத்தையும், கிறிஸ்து தம்மை நமக்காகப் பலி

யிட்ட அன்பின் அதிசயத்தையும் கொண்டாடும்படிக்குச் சேரவேண்டியது.—பிதாவும் சுதனும் அருளின அன்புக்காக நன்றியறிதலோடே தோத்திரஞ்செலுத்தி, நம்மை முற்றிலும் தேவனுடைய ஊழியத்திற்குப் படைத்தொப்புவிப்பதற்காகவும் சேரவேண்டியது.—ஆண்டவருக்கு விரோதமானவைகள் யாவற்றையும் வெறுப்போமென்றும், அவருடைய கற்பனைகளைப் பணிவாய்க் கைக்கொள்வோமென்றும் ஞானஸ்நானத்தில் பண்ணின உடன்படிக்கையை மறுபடியும் உறுதிப்படுத்துகிறதற்காகவும், தேவகுமாரன் நமக்காகப் பலியாய் அடைந்த மரணத்தைப் பராபரனுக்குமுன்பாகக் கூறி ஞாபகமாய்க் காட்டி, அதை முன்னிட்டுச் செபம்பண்ணி, அந்த மரணத்தினாலே உண்டான நன்மைகள் யாவும் நமக்கும் மற்றெல்லாருக்கும் பலிக்கும்படி வேண்டிக்கொள்வதற்காகவும், உலகத்தைச் செயிக்கத்தக்க பலத்தையும், மோட்ச ஆனந்தத்தை விரும்பத்தக்க அபேட்சையையும், கிறிஸ்துவின் அன்பிற்கு அத்தாட்சியான வரங்களையும் மென்மேலும் அடைகிறதற்காகவும் நான் கர்த்தருடைய பந்தியைச் சேரவேண்டியது.

## 5.

*சங்கீதம், ௱௰௬. ௰௨, ௰௩. கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும் அவருக்கு எந்த ஈட்டைச் செலுத்துவேன்! இரட்சிப்பின் பாத்திரத்தை வாங்கி கர்த்தருடைய நாமத்தைப்பற்றிக் கூப்பிடுவேன்.*

இந்தப் பந்தியைச் சேருகிறது கிறிஸ்தவர்களுக்குள் வழக்கமாயிருப்பதினாலே நான் சேராமல், கிறிஸ்துவின் கட்டளையினிமித்தமும் இந்தச் சாக்கிரமெந்துக்குரிய நன்மைகளினிமித்தமுமே சேருகிறேன்.

பரமபிதாவே, உம்முடைய ஒரே குமாரனாகிய இயேசுநாதர் எங்களுக்காக மரிக்கும்படி நீர் அவரைத் தந்து உலகத்தாரில் இவ்வளவாய் அன்புகூர்ந்ததை நான் உணர்ந்து துதிக்கும்படியாகச் சேருகிறேன்.

அருமை இரட்சகரே, நான் உம்மை விசுவாசித்துப் பற்றிக் கொண்டு உம்மிடத்தில் நான் அன்பாயிருக்கிறதை அறிக்கையிடும்படிக்கும், நீர் எனக்காக மரித்த அன்பை நான் நன்றியறிதலோடே நினைக்கும்படிக்கும் சேருகிறேன்.

பரிசுத்தஆவியே, நீர் கிறிஸ்துவின் இரட்சிப்பை எனக்குப் பலிக்கச்செய்து, விசுவாசம் அன்பு பரிசுத்தமாகிய வரங்களை எனக்குப் பொழிந்து, மற்ற விசுவாசிகளோடே நீர் என்னை ஐக்கியப்படுத்தவேண்டுமென்று விரும்பிச் சேருகிறேன்.

இரக்கமுள்ள திரியேக தேவனே, நீர் இப்பந்தியில் விசுவாசிகளுக்கு அருளுகிற ஆத்தும போசனத்தின்மேல் நான் வாஞ்சையுள்ளவனாகி கர்த்தராயிருக்கிற இயேசுக்கிறிஸ்துவின் கிருபையையும் பராபரனுடைய அன்பையும் பரிசுத்த ஆவியின் ஐக்கியத்தையும் மென்மேலும் பெற்றனுபவிக்கவேண்டுமென்று சேருகிறேன்.

கர்த்தரே! நன்று செய்வதில் நான் சீக்கிரமாய் இளைத்துப் போகிறேன். சற்றுநேரஞ் செபம்பண்ணினால் சோர்ந்துபோகிறேன். இலேசான சோதனைகளினாலே வெல்லப்படுகிறேன். ஆனாலும் எனக்காகத் தந்திருக்கிற உம்முடைய சரீரம் என் ஆத்துமத்தைப் பலப்படுத்துமென்றும், எனக்காகச் சிந்தப்பட்ட உம்முடைய இரத்தம் என்னிடத்தில் அன்பையும் கீழ்ப்படிதலையும் உண்டாக்குமென்றும் நான் விசுவாசித்து, அவைகளின்மேலே பசிதாகமுள்ளவனாகி உம்மிடத்தில் சேருகிறேன்.

கிருபையுள்ள கர்த்தரே, என்னையும் என்னோடே இப்பந்தியைச் சேரவருகிற யாவரையும் உமது பரம ஆகாரத்தினாலே போஷித்து, ஆறுதல்படுத்தி, நித்தியசீவனுண்டாகக் காப்பாற்றியருளும். உம்முடைய சரீர இரத்தத்தை எங்களுக்காகப் பலியாய் ஒப்புக்கொடுத்த இரக்கத்தினிமித்தமே. ஆமன்.

## 6.

யோவான், ௬. ௬௨. நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியுமாய்ச் சீவனுமாயிருக்கின்றன.

என் ஆண்டவனும் என் தேவனுமாகிய இயேசுவே, நீர் ஏற்படுத்திய சாக்கிரமெந்தின் தன்மையை நான் சிந்திக்கும்

போது நன்றியறிதலோடே உமக்குத் தோத்திரஞ் செலுத்த வேண்டியது. காணப்பட்ட புறம்பான அடையாளமும் ஆவிக்குரிய உள்ளான கிருபையுமாகிய இவ்விரண்டுபங்கும் இச்சாக்கிரமெந்தில் உண்டு. தேவரீர் எங்கள் புத்திக்குறை வைக் கண்டு எங்களுக்கு இரங்கினதினாலேயல்லவோ புறம் பான அடையாளங்களால் உமது அந்தரங்கக் கிருபையை விளங்கக்காட்டினீர்.

மனிதனுடைய இருதயத்தை மகிழ்ச்சியாக்குந் திராட்ச இரசமும் அவனுடைய சரீரத்தைப் பலப்படுத்தி ஆதரிக்கும் அப்பமும் ஆகிய புறம்பான போசனத்தினாலே எங்களுக்கு வேண்டிய ஆத்துமபோசனத்தின் தன்மையையும் அதின் அருமையையும் எங்களுக்குணர்த்தினீர்.

என் தேவனே, நான் புறம்பான அடையாளங்களைமாத்தி ரம் பாராமல், அவைகளால் குறிக்கப்பட்ட ஆவிக்குரிய உள் ளான இஷ்டப்பிரசாதங்களையும் சிந்திப்பேனாக. விசுவாசி களால் மெய்யாகவும் நிச்சயமாகவும் வாங்கி உட்கொள்ளப் படுகிற உமது சரீரமும் உமது இரத்தமுமாகிய திவ்விய போச னத்தை நான் ஆவிக்குரியபிரகாரமாய்ப் பெற்றனுபவிக்கும் படிக்கும், விசுவாசத்தினாலே என் இருதயத்திலே நன்றியறி தலோடே அதை எனக்கு ஆகாரமாக்கிக்கொள்ளும்படிக்கும் நான் ஆத்துமபலத்தையும் தேற்றரவையும் அடைந்து தேறும் படிக்கும் எனக்குக் கிருபைசெய்தருளும்.

"கர்த்தருடைய இராப்போசனம் வீண்சடங்காசாரமல்ல; அது வெறும் அடையாளமல்ல. கிடையாத பொருளுக்கு அது விருதாவான குறிப்புமல்ல. வேதத்தில் சொல்லியபடி, அது கர்த்தருடைய பந்தியாயும், கர்த்தருடைய அப்பமும் பாத்திரமுமாயும், கிறிஸ்துவை நினைவுகூருதலாயும் அவரு டைய மரணத்தை அறிவிக்குதலாயும், கர்த்தருடைய சரீரத் தோடேயும் ஐக்கியமானதாயும் இருக்கிறதென்று நாம் நிச்சய மாய் விசுவாசிக்கவேண்டியது."* கர்த்தரே, விசுவாசிக்கி

* ஒமிலியென்னும் பிரசங்கத்தைக் காண்க.

றேன், என் அவிசுவாசம் நீங்க உதவிசெய்யும். உம்முடைய வார்த்தைகள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கின்றன; உம்முடைய வார்த்தையின்படி எனக்காகக்கடவது.

## 7.

*உரோமர்; அ. உ௩. ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீரமீட்கப்படுதலாகிய புத்திரசுவிகாரம் வருவதற்குக் காத்திருந்து நமக்குள்ளே தவிக்கிறோம்.*

இயேசுவே, நற்கருணையடையாளங்களில் உம்மைக் காண்கிறவர்கள் பாக்கியவான்கள். விசுவாசத்தால் உம்மை உட்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள்.

உம்முடைய வருகைக்கு ஆவலுடன் எதிர்ப்பார்த்து நீர் இருக்கிறபிரகாரமாய் உம்மைத் தரிசிக்கும்படி வாஞ்சிக்கிறவர்கள் எல்லாரிலும் பாக்கியமுடையவர்களே.

கிருபையையும் மகிமையையுமுடைய அனாதிதேவனே, ஜீவனுள்ளோர் லோகத்தில் எங்கள் செல்வமே, எங்கள் ஆனந்தமே.

இம்மையில் உமது தயாபரத்தின் முதற்பலன்கள் இவ்வளவு அருமையுள்ளனவானால், மறுமையில் எங்களுக்காக நீர் ஆயத்தமாக்கின சுதந்தரம் எவ்வளவு சிறப்பு!

போராடுகிறவனுக்கு இந்தத் திவ்விய ஆகாரம் கிடைத்திருக்க, செயங்கொண்டவனுக்கு என்னது அருளப்படமாட்டாது.

இவ்வனாந்தரத்தில் மன்னாவைப் புசிக்கத்தந்தவராகிய நீர் பரமகானான்தேசத்தில் எங்களுக்காயத்தமாக்கின நன்மைகள் எவ்வளவு அருமை!

சிறையிருப்புக்காலத்தில் நீர் உம்மையே ஈவாய்த் தந்திருக்க, உமது இராச்சியத்தில் நாங்கள் சேரும்போது எந்த ஈவுகளை அருளமாட்டீர்!

மறைபொருளை விசுவாசத்தால் கிரகித்து மகிழ்ச்சியடைகிறோம். வெளிப்பொருளைத் தரிசிக்கும்பொழுது பரவசமாவோமே.

அருமை மீட்பரே! மறைவும் திரையுமின்றி உம்மை வெளிப்படையாய்க் காணும் நாள் எப்பொழுது பிறக்கும்!

மேகமும் மந்தாரமும் நீங்க, உமது திருச்சமுகத்தின் ஒளி என்மீதில் பிரகாசிப்பதெக்காலம்!

பாவமே! சிற்றின்பமே! உலகத்தின் மாய்கையே! அகன்றுபோங்கள். மாசற்ற தேவாதிதேவன் என்னைச் சந்திக்கவந்தார்.

அவர் தாமாய் என் இருதயத்தில் பிரவேசித்து, அதைத் தமக்குரித்தாக்கி, பிரதிஷ்டைசெய்து அதை முத்திரை வைத்திருக்கிறார்.

## 8.

மத்தேயு, ௰க. உ௮. வருத்தப்பட்டுப் பாரஞ்சுமந்துகொள்ளுகிறவர்களாகிய நீங்களெல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு ஆறுதல்செய்வேன்.

நித்திய சத்தியமாகிய இயேசுசுவாமி, இந்த வசனங்கள் உம்முடையவைகளே. இந்த வசனங்கள் அன்புள்ளவைகளானதினாலே அவைகள் என்னைத் தைரியப்படுத்தி உம்மிடத்தில் சேரும்படி என்னை ஏவுகின்றன. ஆகிலும் நான் செய்த குற்றங்கள் எனக்குப் பயமுண்டாக்கி இந்தப் பரிசுத்த இரகசியங்களைச் சேராதபடிக்கு என்னை வெட்கப்படுத்துகின்றன. உம்முடைய வசனங்களின் மதுரம் என்னை வாவென்று அழைக்கிறது: ஆகிலும், என் தோஷங்களின் ஏராளம் என்னை விலகப்பண்ணுகிறது.

"வருத்தப்பட்டுப் பாரஞ்சுமந்துகொள்ளுகிறவர்களாகிய நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்" என்கிறீரே! இந்த வார்த்தைகள் எவ்வளவு இனிமையும் எவ்வளவு நேசமுள்ளவைகள்! என் தேவனாகிய கர்த்தரே, பாவியும் நீசனுமாகிய நான் உம்முடைய சரீரத்துக்கும் இரத்தத்திற்கும் பங்குள்ளவனாகும்படி என்னை உம்மிடத்தில் வரவழைக்கிற தயவு எவ்வளவு அதிசயம்.

ஏழையேன் உம்முடைய சமுகத்தில் எப்படிப் பிரவேசிப்பேன்!

இதோ பரமண்டலங்கள் உம்முடைய மகத்துவத்தைக் கொள்ளாதிருக்க, ஏழைப் பாவிகளைப்பார்த்து எல்லாரும் என்னிடத்தில் வாருங்களென்கிறீர்.

என்னிடத்தில் யாதொரு நன்மையுமில்லையென்று நான் அறிந்திருக்க, உம்மிடத்தில் சேர எப்படித் துணிவேன். நான் வெகுவிசை உமக்கு நோக நடந்திருக்க, தேவரீர் என் வீட்டுக்குள் எப்படிப் பிரவேசிப்பீர்!

உம்முடைய சமுகத்தில் தேவதூதர்கள் வணங்கிச் சேவிக்க, பரிசுத்தவான்களும் விசுவாசிகளும் பயந்துநிற்க, பாவிகளாகிய எங்களை நீர் பார்த்து எல்லாரும் என்னிடத்தில் வாருங்களென்கிறீர்!

தேவரீரே இதைச் சொல்லாதிருந்தால் யார் அதை மெய்யென்று நம்புவான்! நீர் இப்படி கற்பித்தாலொழிய யார் உம்மிடத்தில் சேரத்துணிவான்!

நான் இவ்வளவு தயவாய் அழைக்கப்பட்டிருப்பதினாலே, உமது இரக்கத்தை நம்பி உம்மிடத்தில் வருகிறேன்.

நோவாளியாகிய நான் பரிகாரியிடமாகவும், பசியும் தாகமுள்ள நான் சீவவூற்றினிடமாகவும், எளியவனாகிய நான் பரலோக இராசாவினிடமாகவும், ஊழியக்காரனாகிய நான் என் நாயனிடமாகவும், சிருட்டியாகிய நான் என் சிருட்டிகரிடமாகவும், மனம் நொந்தவனாகிய நான் தேற்றரவாளனிடமாகவும் சேருகிறேன்.

தேவரீர் பாவியினிடமாக வருகிறது எதினாலே எனக்குக் கிடைத்தது! நீர் உம்மையே எனக்கு ஈவாய் அருளுகிறதற்கு நான் எம்மாத்திரம்!

இந்த இரக்கத்திற்கு நான் பாத்திரனல்ல. என்னிடத்தில் ஒரு நன்மையுமில்லையென்று தேவரீருக்குத் தெரியும்.

என் அபாத்திரத்தை நான் ஒத்துக்கொண்டு, உமது இரக்கத்தைப் போற்றி, ஒப்பில்லாத உமது அன்புக்காக உமக்குத் தோத்திரஞ்செலுத்துகிறேன்.

உம்முடைய அன்பு எவ்வளவு விசேஷமாய் விளங்குகிறது! உம்முடைய தயவு எவ்வளவு இனிமையாய்ப் பிரகாசிக்கிறது! உம்மிடத்தில் நான் பெற்ற உபகாரங்களுக்காக உமக்கு எவ்வளவோ தோத்திரஞ்செய்யவேண்டியது. தேவரீர் சகல பரிசுத்தவான்களிலும் பரிசுத்தராயிருக்கிறீர், நானோ பாவிகளிலுங் கொடியபாவி. என் கண்களை எடுத்து உம்மைப் பார்க்கிறதற்கு நான் அபாத்திரனாயிருந்தும், தேவரீர் என்னைத் தேடுகிறீர்! என்னோடே சஞ்சரிக்கவேண்டுமென்று விரும்புகிறீர், உமது பந்திக்கு என்னை வரவழைக்கிறீர், வான் ஆகாரத்தையும் தேவதூதர்களின் அப்பத்தையும் எனக்குப் புசிக்கத்தருகிறீர், பரமண்டலத்திலிருந்திறங்கி லோகத்துக்குச் சீவனைக் கொடுக்கிற சீவஅப்பம் தேவரீரேயல்லவோ?

ஆத்துமாவே, இந்த துக்கசாகரத்திலே உனக்குக் கிடைத்த அருமையான வரப்பிரசாதங்களினிமித்தம் நீ மகிழ்ச்சியாயிருந்து பராபரனுக்குத் தோத்திரஞ்செலுத்து. உன் இரட்சகரின் அன்பு ஒருக்காலுங் குறைகிறதில்லை. அவர் செய்த பாவநிவாரணத்தின் பலனும் ஒருக்காலும் அடைந்து தீராது. நீ இந்தப் பரம இரகசியங்களைப் பத்தியோடு ஆசரிக்கும்போதெல்லாம், கிறிஸ்துவின் இரட்சிப்பை ஞாபகம்பண்ணிக்கொண்டு அவருடைய புண்ணியபலன்களுக்குப் பங்குள்ளவனாவாய்.

ஆதலால் இந்த நற்கருணைக்கு வரும்போது ஆவியின் எழுப்புதலினாலும் பத்தியுள்ள யோசனைகளினாலும் உன்னை ஆயத்தம்பண்ணிக்கொண்டு சேரவேண்டியது.

கர்த்தரே, நான் உம்முடைய வரப்பிரசாதத்தினாலே ஆறுதல் அடையும்படிக்கும் தேவரீர் என் பகைஞருக்குமுன்பாக எனக்கு ஆயத்தமாக்கின பரிசுத்த விருந்தின்மூலமாய் மகிழ்ச்சியுள்ளவனாயிருக்கும்படிக்கும் உம்மிடத்தில் வருகிறேன்.

நான் விரும்பவேண்டியதும் விரும்பக்கூடியதும் தேவரீரிடத்தில் உண்டு. நீரே என் இரட்சிப்பும் என் மீட்புமானவர். என் நம்பிக்கையும் என் பலமும் என் மகிமையும் நீரே.

ஆதலால் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவே, என் ஆவியை உம்மிடத்தில் ஒப்புவிக்கிறேன். இன்றைக்கு உமதடியானுடைய ஆத்துமத்தை மகிழப்பண்ணும்.

உம்மையே எனக்குத் தாரும். உம்மையல்லாமல் ஒரு ஆறுதலும் எனக்கில்லை. உம்மையல்லாமல் நான் இருக்கவும் உம்முடைய தரிசனையில்லாமல் நான் பிழைக்கவுங்கூடாது. ஆதலால் நான் வழியிலே தொய்ந்துபோகாதபடிக்கு உம்மைச் சீவஅப்பமாகத் தந்து என்னைப் போஷியும் ஆண்டவரே!

என் தேவனாகிய கர்த்தரே, சகல ஆவிகளையும் சிருட்டித்து உயிர்ப்பித்தவராகிய நீர் பாவம்நிறைந்த என் ஆத்துமத்தைச் சந்தித்து அதை உயிர்ப்பித்து உமது பரமசீவுகளால் போஷித்துத் திருத்தியாக்கினது உம்முடைய அதிசயமான இரக்கமே.

தேவரீரைப் பத்தியோடே ஏற்றுக்கொண்டு ஞானமகிழ்ச்சியால் நிறைந்திருக்கிற ஆத்துமா எவ்வளவு பாக்கியமுள்ளது.

ஒரு ஆத்துமாவானது உம்மை ஏற்றுக்கொள்ளும்போது அது மேன்மைபொருந்திய ஆண்டவனை அங்கிகரித்து, நேசமுள்ள தோழனைச் சேர்த்துக்கொண்டு, பிரியமான விருந்தனை உபசரித்து, உண்மையுள்ள சிநேகிதனை அன்புசெய்து, சிறந்த மகிமையுடைய உத்தம மணவாளனை அணைத்துக்கொள்ளுகின்றது.

தேவரீருக்குமுன்பாக வானமும் பூமியும் அவைகளின் சிங்காரம் முழுமையும் அமைந்திருக்கக்கடவது. எல்லாம் உம்முடையதே. மனிதர் விரும்பிச் சிநேகித்துக்கொள்வதெல்லாவற்றிலும் நீரே விரும்பப்படத்தக்கவராயிருக்கிறீர்.

# II.

## ஆயத்தச்செபங்கள்.

### 1.

மகா இரக்கமுள்ள தேவனே, நான் உம்முடைய குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவின் கட்டளைப்படி அவருடைய மரணத்தை நினைக்கும்படிக்கும், நற்கருணையப்பம் இரசத்தை வாங்குகையில் அவருடைய சரீரத்தோடும் இரத்தத்தோடும் ஐக்கியப்படும்படிக்கும், அவ்வைக்கியத்திற்கேற்ற குணங்கள் யோசனைகளை அடையும்படிக்கும், எனக்குக் கிருபைசெய்யும். இன்றைக்கு உம்முடைய பரிசுத்த சாக்கிரமெந்து ஆசரிக்கப்படுகையில், சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவையும் அவர் மரித்த அன்பை உணர்த்தும் அத்தாட்சிகளையும் நான் விசுவாசத்தால் நோக்கிக்கொண்டு, அவருடைய அன்பை நிறைவாய்ப் பெற்றனுபவிக்கும்படி, எனக்குக் கட்டளையிடும். இந்தச் சமயத்தில் நான் யோசிக்கவேண்டியவைகளைத் தேவரீர் எனக்கு ஞாபகப்படுத்தி, என் செபத்தியானங்களைக் கலக்கத்தக்கவைகளுக்கு என்னை விலக்கமாய்க் காத்து எனக்கு ஞானசிந்தை வணக்கம் நன்றியறிதலாகிய இக்குணங்களை எனக்கு அருளும். நான் உலகசிந்தனைகளுக்கும் சுயநீதியை நம்பும் பெருமைக்கும் இடங்கொடாமலும், அபாத்திரவிதமாய்ப் போசனபானம் பண்ணி, கிறிஸ்துவின் சரீரத்திற்கும் இரத்தத்திற்கும் குற்றமுள்ளவனாகி ஆசீர்வாதம் பெறவேண்டியதில் சாபத்தைப் பெறாமலும் இருக்கும்படி எனக்குக் கிருபைசெய்யும். இந்த விருந்தைச் சேருகை

யில் நான் கிறிஸ்துவின் சரீரத்தை விசேஷித்துக்கொள் ளவும், மனஉருக்கத்தோடும் திவ்விய அமரிக்கையோ டும் என் இரட்சகனை நினைக்கவும், உம்முடைய பரி சுத்தஆவியின் உதவியை எனக்குக் கட்டளையிடும். அப்பத்தைப் பிட்கையில் நான் இயேசுவைக் கண்டறி யும்படி என் கண்களைத் திறந்தருளும். பாவமன்னிப் பையும் நீதிமானாகுதலையும் புத்திரசுவிகாரத்தையும் பரிசுத்த குணங்களையும் நித்தியசீவ நம்பிக்கையையும் கிறிஸ்துவின் மரணத்தினாலே சம்பாதிக்கப்பட்ட மற் றெந்த நன்மைகளையும் விசுவாசத்தின் வழியாய் எனக் குத் தாரும். மெய்விசுவாசிகள் அனைவரோடும் திருச் சபைக்கு மகிமைபொருந்திய தலைவராகிய கிறிஸ்து வோடும் என்னை ஐக்கியப்படுத்தி, அவ்வைக்கியத்திற் கேற்ற தேவ அன்பையும் சகோதர அன்பையும் என் னிடத்தில் எழுப்பும். உம்முடைய நற்கருணையானது கிருபைபெறத்தக்க சுகிர்த எத்தனமேயென்று நாங்க ளெல்லாரும் உணரும்படியாய், அதை வாங்குகை யில் எங்கள் மனச்சாட்சி சமாதானமடையவும், எங் களிடத்தில் பாவமான இச்சைகள் அடங்கி கிருபை வரங்கள் பெருகவும், எங்கள் ஆத்துமா உம்முடைய வழிகளில் இளைப்பின்றி ஓடத்தக்கதாய் உச்சாக மடைந்து பலப்படவும் எங்களுக்குக் கிருபைசெய் யும். அன்றியும், பரமபிதாவே உலகமெங்குமிருக்கிற உம்முடைய சபைகளில் நற்கருணை பெறுகிறவர்க ளுடைய தொகையைப் பெரிதாக்கி, உமது இராச்சி யத்தில் சகல தேசத்தாரையும் உட்படுத்தி, பூமியின் கடையாந்தரங்களிலிருக்கிற யாவரும் உம்மிடத்தில் வந்து பணிந்து இரட்சகருடைய பாடுகளை விசுவாசித் துக் கொண்டாடும்படி கட்டளையிட்டருளும். அவ ருடைய நிமித்தமே. ஆமன்.

## 2.

கிருபையுள்ள இயேசுவே, உமது பரிசுத்த சாக்கிரமெந்துக்குரிய பலன்களையும் ஆசீர்வாதங்களையும் நான் அடையும்படிக்கு என்னை ஆயத்தம்பண்ணியருளும். பாவமும் லோகச்செல்வமும் எனக்கு இன்பமற்றவைகளாயிருக்கும்படி, தேவரீர் உம்முடைய தயாபரத்தின் ஐசுவரியத்தை எனக்குக் காட்டி, உம்மை நேசிக்கும் அன்பினாலும் உமதூழியத்தின் இனிமையாலும் மோட்சஆனந்தத்தின் முதற்பலன்களாலும் என்னிருதயத்தை நிரப்பி இந்தச் சாக்கிரமெந்திலே நான் உமது சரீரத்தையும் உமது இரத்தத்தையும் விசேஷித்துக்கொள்ளும்படி என் கண்ணைத் திறந்து, மெய்விசுவாசத்தையும் ஞான உணர்வையும் எனக்குத் தாரும்.

பரமபிதாவே, உமது பிரியமான குமாரனுடைய சாயலை நான் அணிந்து, அவருடைய கிருபைவரங்களாகிய கலியாண வஸ்திரத்தை உடுத்தி, தேவரீர் ஒப்புக்கொள்ளத்தக்க ஞான ஆயத்தத்தோடே உம்முடைய பந்தியைச் சேரும்படி எனக்குக் கிருபைசெய்தருளும். பரிசுத்தஆவியே, உயிருள்ள விசுவாசத்தையும், தாழ்ந்த சிந்தையையும் தேவபுத்திரருக்கேற்ற கீழ்ப்படிதலையும் பரிசுத்த விருப்பங்களையும் எல்லாரையும் நேசிக்கும் அன்பையும் எனக்கு நிறைவாய்த் தாரும். சிலுவையில் அறையுண்ட இரட்சகரை நினைக்கும் சமையத்திற்கேற்ற பத்தி அன்பு ஆத்துமசந்தோஷம் துதிதோத்திரங்களை என்னிடத்தில் எழுப்பியருளும். என்னை மீட்டுக்கொண்டவரினிமித்தமே. ஆமன்.

## 3.

உம்முடைய இரக்கங்களின் பெருக்கத்தின்படி மெய்யாய்க் குணப்படுகிறவர்களுடைய பாவங்களை நீக்குகிற கிருபையுள்ள பிதாவே, என் மீறுதல்களைக் குறித்துத் துக்கப்பட்டு மன்னிப்பு வேண்டுமென்று ஆவலோடே பிரார்த்திக்கிற அடியேன்பேரில் உமது இரக்கமாகிய கண்ணூன்றி என்னை அங்கிகரித்து இரட்சியும். நினைவினாலும் சொல்லினாலும் செய்கையினாலும் உம்முடைய கட்டளைகளை மீறினது என் பாவமே. உம்முடைய உபகாரங்களை நான் அற்பமாய் எண்ணி உம்முடைய நியாயத்தீர்ப்புகளை இகழ்ந்து இரட்சிப்பைப் பெறத்தக்க எத்தனங்களை அசட்டைசெய்து, உம்முடைய நீதியுள்ள கோபாக்கினை என்மேல் வரும்படியாக நடந்திருக்கிறேன். கர்த்தாவே, என் அக்கிரமங்களை நீர் நோக்கிக்கொண்டு என் பாவங்களுக்குத் தக்கதாய் பதில் செய்வீரானால் நான் காற்றுக்குமுன் பறக்குந் தூசியைப்போலாவேனே. ஆனாலும், "உமக்குப் பயப்படும்படிக்கு மன்னிப்புத் தேவரீரிடத்திலிருக்கிறது." நீர் அன்புள்ள பிதாவாயும் ஆறுதலை அளிக்கிறவராயும் பாவங்களினிமித்தம் மெய்யாய்த் துக்கிக்கிறவர்களுடைய மன்றாட்டுக்குச் செவிகொடுக்கிறவராயுமிருக்கிறீர். ஆகையால், நான் என் மீட்பராகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தை என் சிரசின் மேல் வைத்து, உம்முடைய கிருபாசனத்திற்குமுன்பாகப் பணிந்து விழுந்து, தேவரீர் என் மீட்பருடைய புண்ணியங்களினிமித்தம் எனக்கு இரங்கவேண்டுமென்றும், கார்மேகம்போலிருக்கிற என் பாவங்களின் விசாரங்களை அகற்றி உமதன்புள்ள முகத்தின் பிரகாசத்தை எனக்குக் காண்பிக்கவேண்டுமென்றும், உம்

முடைய இரக்கத்தின் ஐசுவரியத்தை முன்னிட்டுத் தாழ்மையாய் வேண்டுதல் செய்கிறேன்.

கர்த்தாவே, என் விண்ணப்பங்களைக் கேட்டு, என் கண்ணீரையும் பார்த்துணர்ந்து, சிலுவையிலே உமது திருவிலாவில் இருந்து சொரிந்த இரத்தத்தினாலே சகல பாவங்களும்போக என்னைக் கழுவி, இந்தச் சாக்கிரமெந்தைப் பெற்றனுபவிக்கும்படி என்னைப் பாத்திரவானாக்கியருளும். பரிசுத்தமுள்ள பிதாவே, இப்பொழுது இயேசுக்கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமுமாகிய சாக்கிரமெந்தைப் பரிமாறுஞ்சமயம் வந்திருக்க, கொடிய பாவியாகிய நான் உம்முடைய பரிசுத்த பந்தியைச் சேரும்படி எப்படித் துணிவேன்! உம்முடைய திருப்பார்வைக்கு வானங்களும் சுத்தமானவைகளல்ல. பூமியின் அஸ்திபாரங்களும் உம்முடைய சமுகத்துக்குமுன்பாக அசையும். ஆனாலும், தேவரீர் எங்களுக்கிரங்கி எங்களுக்கு ஆறுதலும் தைரியமும் உண்டாகும்படி இச்சாக்கிரமெந்தை ஏற்படுத்தி, "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமந்துகொள்ளுகிறவர்களாகிய நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்" என்று கட்டளையிட்டிருக்கிறீர். இக்கட்டளைப்படி உம்மிடத்தில் வருகிறேன். என் அக்கிரமம் நீங்க என்னைக் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரித்து, நிலவரமான ஆவியை என்னிடத்தில் புதிதாய் உண்டாக்கும். சீவஅப்பமாகிய இந்தத் திவ்விய ஆகாரத்தை நான் மேன்மையாய் எண்ணி தாழ்மையாய் வாங்கி விசுவாசத்தோடே உட்கொள்ளவும், என் இரட்சகருடைய மரணப்பாடுகளினாலே உண்டான புண்ணியப்பலன்கள் நன்மைகள்யாவையும் நான் பெற்றனுபவிக்கவும், தேவரீர் எனக்கனுக்கிரகஞ்

செய்து என் இருதயத்தின் சிந்தனைகளையும் என் ஆவியின் சத்துவங்களையும் சீர்திருத்தி ஆண்டு நடத்தவேண்டுமென்று உம்மைக் கருத்தாய் வேண்டிக்கொள்ளுகிறேன். என் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினிமித்தமே. ஆமன்.

## 4.

இரக்கமுள்ள பிதாவே, உம்முடைய குமாரனுகிய இயேசுக்கிறிஸ்து எனக்காக மரணமடைவதற்கும், அவர் இந்தப் பரிசுத்த சாக்கிரமெந்தின் மூலமாய் எனக்கு ஞான போசனமாவதற்கும், தேவரீர் அவரைத் தந்தருளினதற்காக உமக்குத் தோத்திரம். எனக்குக் கிடைத்திருக்கிற இந்த இரக்கம் விலைமதியாத இரக்கமே. மகிமையணிந்த தூதர்களும் தூரமாய் நின்று வணங்க, உமக்குச் சமீபமாய்ச் சேர்ந்து உம்மிடத்தில் பந்தியிருக்கிறதற்கு ஏழையேன் எம்மாத்திரம்! இயேசுவே, உம்மைப் பகைக்கிறவர்களை நீர் சிநேகிக்கிறதும், உம்மைக் கொலைசெய்தவர்களை நீர் உயிர்ப்பிக்கிறதும், உமக்குரிய இலட்சணங்களாமே. இவ்விலட்சணங்களுக்கேற்றதாய் நன்மையொன்றுக்கும் அபாத்திரனுகிய என்னை உம்முடைய பரமவிருந்துக்கு அழைக்கிறீர். உம்முடைய கட்டளைப்படிச் சேருகிறேன். ஆனுலும், என் பாவங்களை எனக்குப் பின்னுகத் தள்ளி அவைகளை விட்டு வெறுத்து, சுத்த மனதோடே சேரும்படி எனக்குக் கிருபைசெய்யும். பரிசுத்தமுள்ள இரட்சகரே, என் பாவங்களை அரோசிக்கிறேன். நான் பாவத்திற்கு இணங்கினதினிமித்தம் உண்மையாய்த் துக்கப்படுகிறேன். என் பாவமே உம்மைக் கொன்றதினுலும், என்னையும் கொல்லும்படி என் பாவம் எத்தனிக்கிறதினுலும், என் பாவத்

தைக் கொன்று அதை என்னைவிட்டகற்றும், ஆண்டவரே. இந்தத் திவ்விய விருந்தின் வழியாய் தேவரீர் என்னைச் சந்தித்து, நான் செய்த பாவங்களெல்லாவற்றையும் எனக்கு மன்னித்து, உம்முடைய இரத்தத்தினாலே என்னைக் கழுவி, எனக்குண்டாயிருக்கிற ஆத்துமவியாதிகள் பலவீனங்கள் போக என்னை முற்றிலும் சொஸ்தமுள்ளவனாக்கி, தெரிந்துகொள்ளப்பட்டவர்களனைவருக்கும் நீர் வாக்குத்தத்தம்பண்ணின நித்தியசீவனை எனக்கு நிச்சயப்படுத்தியருளும்.

நான் பாத்திரமானவிதமாய்ச் சேர்ந்தால் இவைகளையெல்லாஞ் செய்ய ஆயத்தமாயிருக்கிறீரே, நானோ பாத்திரனல்ல. ஆனாலும், கர்த்தரே, என்னை அபாத்திரனென்று பாராமல் உம்முடைய புண்ணியத்தினிமித்தம் என்னை இரக்கமாய் அங்கிகரியும். தேவரீர் எனக்காக மரித்திருக்கிறபடியால் நான் உண்மையான நன்றியறிதலோடும் பாவத்தை அரோசிக்கும் வெறுப்போடும் என்றைக்கும் நான் உம்முடையவனென்று உம்மோடே உடன்படிக்கைபண்ணத்தக்க உறுதியோடும் உம்முடைய கிருபையை விரும்புகிற வாஞ்சையோடும் நீர் மரித்த அன்பை நினைக்கிறது என் கடமையே. உம்மை நினைத்துக் கொண்டாடுகிறது எனக்கு மனமகிழ்ச்சியாயிருக்கும். இப்படிச் செய்ய ஆவலும் வாஞ்சையுமுள்ளவனாயிருக்கிறேன். ஆகிலும் என் இரட்சகரே, நீரே எனக்கிரங்கி உதவிசெய்யாவிட்டால் தகுந்தபடி உம்முடைய அன்பை நினைக்க என்னாலே கூடாது. நீர் எனக்காகச் செய்து சகித்ததை நான் உணராமல் உம்முடைய அன்பை அற்பமாய் எண்ணினேன். என் அன்பு குறைந்தும் என் இருதயம் கடினப்பட்டுமிருக்கிறது. அன்புள்ள இரட்

சகரே, என் யோசனைகளை உயர்த்தி என் கல்நெஞ்சை உம்முடைய அன்பினாலே இளகச்செய்யும். என் இருதயம் எவ்வளவு அன்பைக் கொள்ளுமோ நான் அவ்வளவு அன்போடே உம்மை நேசிக்கும்படிக்கும், உமது கிருபை எனக்கு எவ்வளவு அவசியந் தேவையோ நான் அவ்வளவு ஆவலோடே அதை அபேட்சிக்கும்படிக்கும், பாவத்தை அரோசிக்கிறது எவ்வளவு நியாயமோ நான் அவ்வளவு வைராக்கியத்தோடே அதை அரோசிக்கும்படிக்கும் என்னிடத்தில் நீர் வைத்த அன்பு எவ்வளவு உருக்கமோ நான் அவ்வளவாய் என் சகோதாரிடத்தில் அன்புவைக்கும்படிக்கும் உமது கிருபையை எனக்குத் தந்தருளும். இரக்கமுள்ள தேவனே, இந்த நன்மைகள் எனக்கு அவசியந்தேவையாயிருப்பதினாலும், உம்முடைய இரக்கம் கரையில்லாச் சமுத்திரமாயிருப்பதினாலும், நான் உமது குமாரனுடைய திரு இரத்தத்தினாலே உமக்கு ஆளாய்க் கொள்ளப்பட்டவனானதினாலும், இவைகளைத் தேவரீரிடத்தில் வேண்டிக்கொள்ளத் துணிந்தேனேயன்றி வேறொரு முகாந்தாத்தையிட்டுத் துணியவில்லை. ஆகையால் என் தேவனே, உமது இரத்தத்தினிமித்தமும் உம்முடைய குமாரனுடைய புண்ணியங்களினிமித்தமும் என்னைப் புறக்கணியாமல் அங்கிகரித்தருளும். ஆமன்.

# விசேஷித்த பண்டிகை நாட்களுக்கேற்ற நற்கருணைத் தியானங்கள்.

## 1.

### கிறிஸ்துநாதர் பிறந்த பண்டிகைக்கேற்ற நற்கருணைத் தியானம்.

இது மகிழ்ச்சிதரும் நல்ல நாள்! பத்தியுள்ளவர்களனைவரும் இந்நாளைக் காணும்படி ஆவலுடன் எதிர்ப்பார்த்தார்கள், விசுவாசிகளின் பிதாவான ஆபிரகாம் தூரத்தில் நின்று இந்நாளைக் கண்டு களித்தார். இந்நாளில் இரட்சகர் அவதரித்ததால் பூமியில் சமாதானமுண்டாயிற்று, வானோரும் பூரித்துப் பாடினார்கள். இந்த நல்ல நாளை மறுபடியும் காணும்படி என் பரமபிதாவானவர் என்னைக் காப்பாற்றின கிருபைக்காக நான் அவரைத் துதித்து, அவருக்குத் தோத்திரப்பலியிட்டு, அவருடைய திருவிருந்தைச் சேருவேனாக. எனக்குக் கிடைத்த எத்தனையோ சிறந்த உபகாரங்களை நான் இன்றையதினத்தில் நினைக்கவேண்டியது! இந்நாளில் தேவன் மனிதரோடே ஒப்புரவானார். பாவத்தை அரோசிக்கிறவர் இன்று பாவிகளிடத்தில் தங்கவந்தார். இந்நாளில் வானமும் பூமியும் ஒன்றுக்கொன்று சமாதான உறவுபண்ணின. கிருபையும் உண்மையும் இன்றையதினத்தில் ஒன்றையொன்று சந்திக்க, நீதியும் சமாதானமும் ஒன்றுக்கொன்று முத்தஞ்செய்ய, தெய்வ இலட்சணங்கள் யாவும் கிறிஸ்துவின் அவதாரத்தால் ஒன்றோடொன்று ஒப்புரவாயின. அளவறுக்கப்படாத மகத்துவர் இன்று குழந்தையானார். அனைத்தையும் சிருட்டித்தவர் சிருட்டியானார். அவர் ஆதாமுடைய பிள்ளையாய்ப் பிறந்தவராயிருந்தும் ஆதாமுடைய பாவவிஷந் தீண்டாதவராயிருந்தார். அவர் தரித்திரனாய்ப் பிறந்து இராசாக்கள் பெரி

யோர்களால் புறக்கணிக்கப்பட்டும், தூதர்களால் வணங்கப் பட்டார். இரட்சகரே, நீர் வாழ்க! உம்முடைய அன்பை மட்டிட்டு மதிக்கவும், தகுந்தபடி அதைப் போற்றவும் யாரா லே கூடும்? உம்மை நீர் சிறுமையாக்கினது எவ்வளவு சிறப்பு! உம்மை நீர் தாழ்த்தினது எவ்வளவு மேன்மை! நீர் ஏற்றுக் கொண்ட வறுமை எப்பேர்ப்பட்ட செல்வத்திலும் அருமை யானது. நீர் எங்கள்நிமித்தம் அடிமையின் ரூபமெடுத்தது உம்முடைய இராசமகத்துவத்திற்கு அத்தாட்சி. இலச்சை யடைந்து வெற்றிசிறந்தீர்: தாழ்ந்து உயர்ந்தீர்.

ஆத்துமாவே, இந்நாளில் நடந்த விசேஷங்களை நீ எப் படி கொண்டாடவேண்டியது! உன் நன்றியை நீ எப்படி காண்பிக்கவேண்டியது! இரட்சிப்பின் பாத்திரத்தை நீ வாங் கிக்கொண்டு இயேசு இரட்சகர் இன்றைக்கு உனக்காக எடுத்த மனுஷீகத்துக்குரிய மாமிசஇரத்தத்தை விசுவாசத்தி னாலே வாங்கி அதை உனக்கு ஆகாரமாக்கிக்கொள். இவ் வகையாய் அவரை நினைத்துக் கொண்டாடி அவருக்கு உன் துதிதோத்திரங்களைச் செலுத்துவாயாக. அன்புள்ள கர்த்த ரே, நீர் புறம்பாய்மாத்திரம் எனக்காகப் பிறந்தது போதாது. என்னிருதயத்திலும் பிறக்கவேண்டும். எங்கள் மாமிசத்தைத் தரித்து, எங்கள் மனுஷீகத்தில் பங்கெடுத்து எங்களுடன் ஐக்கியப்பட்டவரே, நாங்களும் தேவரீரோடே ஐக்கியப் படும்படிக்கும், உம்முடைய ஆவியைப் பெற்று உம்முடைய திவ்விய தன்மையில் பங்குள்ளவர்களாகும்படிக்கும் எங்க ளுக்குக் கிருபைசெய்யும்.

தேவரீர் மனிதஅவதாரஞ்செய்ததைப்பற்றி உம்மைத் துதிக் கும்போது, நீர் பட்ட பாடுகளையும் நினைக்கவேண்டியது. உம் முடைய பிறப்போடே உம்முடைய கஸ்தியும் பிறந்தது. தெய்வதத்துவத்தின்படி நீர் மரிக்கக்கூடாதிருக்கையில் எங் களுக்காக மரிக்கவேண்டி மனிததத்துவமெடுத்தீர். உம்மு டைய பிறப்பு உம்முடைய மரணத்துக்கு ஆரம்பமாமே, ஆதலால் உமது சென்மமும் உமது மரணமும் ஆகிய இவ்விர ண்டு அதிசயங்களையும் நான் ஒருமிக்க நினைப்பேனாக. பிறப்

பினாலும் இறப்பினாலும் விளங்கிய உம்முடைய அன்பை நான் சிந்திக்கும்போது என் முழு இருதயத்தோடும் உமக்குத் தோத்திரஞ்செலுத்துகிறேன். ஆதலால் தூதரோடும்,—ஹ.

## 2.

கிறிஸ்துநாதர் உயிர்த்தெழுந்த பண்டிகைக்கேற்ற நற்கருணைத்

## தியானம்.

ஆத்துமாவே, உன் இரட்சகர் வெற்றிவேந்தராய் வருகிறார். நீ செயகீர்த்தனங்களைப் பாடிக்கொண்டு அவரைச் சந்திக்கப் புறப்பட்டுப் போ. அவர் ஆயுதமணிந்து படைக்கும் போருக்கும் சென்றபொழுது சந்தோஷங்கொண்டாடினாய். அவர் செயங்கொண்டருளிக் கோலமாய் வருகையில் நீ எவ்வளவாய்க் களிக்கவேண்டும். அவர் பாவிகளுடைய கொடூரங்கள் நிந்தைகளையும் பேய்களின் மூர்க்கத்தையும் தேவனுடைய நீதியான கோபாக்கினையையும் மரணநிழலையும் இருள்சேர்ந்த உலகத்தின் காவலையும் கடந்து எழுந்தருளினதால் அவருடைய போர் இப்பொழுது முடிந்தது, உன் பாவக்கடனும் உன் சிறையிருப்பும் தீர்ந்தன. உனக்காக ஏற்பட்ட வேந்தர் சிறையாக்குதலைச் சிறையாக்கி, பாவம் மரணம் பாதாளத்தை மேற்கொண்டு இப்பொழுது செயங்கொண்டாடி வெற்றிவிருதுகளோடே வருகிறார். கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் இஸ்தோத்திரிக்கப்பட்டவர். கிருபைபொருந்திய திவ்விய இரட்சகரே, வாழ்க! நீர் உயிர்த்தெழுந்த இன்று உம்முடைய சனனநாளாமே. இன்று உம்மைச் செனிப்பித்தோமென்று நித்திய பிதாவானவர் திருவுளம்பற்றினபடிக்கு, இப்பொழுது நீர் பரலோக ராச்சியத்திற்கு அரசராய்ச் சன்மித்தீர். உம்முடைய பிறப்பினாலே உம்மை மனிதகுமாரனென்றும் உம்முடைய உயிர்த்தெழுதலினாலே உம்மைத் தேவகுமாரனென்றும் விளங்கக் காண்பித்தீர். எங்கள் மீட்பர் உயிரோடிருக்கிறாரென்று இப்பொழுது நிச்சயமாய் அறிந்திருக்கிறோம். எங்களுக்காக மரித்த

வர் திரும்ப உயிர்கொண்டு எங்களுக்காகப் பரிந்துபேசும்படி பரத்துக்குப் போயிருக்கிறார். பாடுபட்டுத் தம்முடைய அன்பையும் உயிர்த்தெழுந்து தம்முடைய வல்லமையையும் காண்பித்தவர் முற்றுமுடிய எங்களை இரட்சிக்கத்தக்கவராமே. இது கர்த்தர் உண்டுபண்ணினநாள். வானங்கள் மகிழ்ந்து பூமி பூரிப்பாயிருக்கக்கடவது.

அவிசுவாசிகளான யூதர்கள் இக்காலத்தில் பஸ்கா ஆட்டுக்குட்டியை அறுத்துப் புசிக்கிறார்கள். நாங்கள் ஆசரிக்கும் பஸ்காவோ அவர்களுடையதைப்பார்க்கிலும் விசேஷித்தது. எங்கள் பஸ்காவாகிய கிறிஸ்து எங்களுக்காகப் பலியிடப்பட்டிருக்கிறார். அவர் எங்களுக்காகக் கொடுத்த சரீரமும் இரத்தமுமே எங்களுக்காக அவர் ஆயத்தமாக்கின பஸ்காப் போசனம். அவர் மரித்தும் இதோ என்றென்றைக்கும் உயிரோடிருக்கிறார். ஆகையால் நான் களிகூருதலுடனே உம்முடைய சன்னிதியில் பிரவேசித்து உம்முடைய கிரியைகளைச் சந்தோஷமாய் விவரிப்பேன்.

என் இரட்சகரே, என்னை நீதிமானாக்கும்படியல்லவோ உயிர்த்தெழுந்தீர். நீர் உயிர்த்தெழுந்திராவிட்டால் உம்முடைய மரணத்தை நினைக்குதல் ஆறுதலுள்ளதாயிராது. இந்தச் சாக்கிரமெந்து உம்முடைய பாடுகளை எங்களுக்கு ஞாபகப்படுத்துகிறதுமன்றி, உம்முடைய உயிர்த்தெழுதலையும் எங்களுக்கு நிச்சயப்படுத்துகிற அத்தாட்சியுமாமே. இதினிமித்தமே இந்த விருந்து சந்தோஷக்கொண்டாட்டம். நீர் பிழைத்திருக்கிறதால் நாங்களும் பிழைப்போம். உம்முடைய உயிர்த்தெழுதலால் புதுநம்பிக்கையும் புதுச்சீவனும் எங்களுக்குண்டாயின. மரணமும் இப்போது பயங்கரமல்ல. அதின் கூர்மையாகிய பாவம் அற்றுப்போனதினாலும், அது சாவாச் சீவனுக்கு வாசலாகும்படி நியமிக்கப்பட்டதினாலும், மரணம் எங்களுக்குப் பிரயோசனமாய் மாறிற்று. கர்த்தர் மெய்யாய் எழுந்திருக்கிறார் என்கிற ஒரே மொழியால் எங்கள் ஐயம் பயம் சஞ்சலம் யாவும் தீர்ந்தன. நாங்கள் இடைவிடாமல்

தேவரீருக்குத் துதிதோத்திரங்களைச் செலுத்தும்படியாக உம்முடைய திருஇரத்தத்தினாலே எங்களைப் பாவமறக் கழுவி உயிர்ப்பித்து, பராபரனுக்கு முன்பாக எங்களை இராசாக்களும் ஆசாரியரும் ஆக்கினீர். ஆதலால் துதரோடும். ஆ.

## 3.

பரிசுத்தஆவியின் பண்டிகைக்கேற்ற நற்கருணைத்

## தியானம்.

மெய்விசுவாசமுள்ள ஆத்துமத்திற்குப் பரிசுத்தஆவியின் கிருபை வரங்கள் கிடைக்கிறது. கர்த்தரே, நான் மெய்யாய் விசுவாசிக்கும்படிசெய்து உம்முடைய முத்திரையாகிய பரிசுத்த ஆவியை எனக்குக் கட்டளையிட்டருளும். இவ்வரம் பெற்றவர்களிடத்தில் கண்டிருக்கும் அத்தாட்சிகளையும் நற்குணங்களையும் எனக்குத் தாரும். பரிசுத்தஆவியைப் பெற்றவர்கள் அவரால் பிறந்தவர்களே. நானும் அவரால் பிறந்தவனென்று விளங்கும்படி புது இருதயத்தையும் புது ஆவியையும் என்னிடத்தில் உண்டாக்கி, நான் நாளுக்குநாள் இருளிலிருந்து வெளிச்சத்திற்கும், பாவத்திலிருந்து பரிசுத்தத்திற்கும், உலகத்திலிருந்து என் இரட்சகராகிய பராபரனண்டைக்கும், திரும்புகிறவனாயிருக்கும்படி எனக்குக் கிருபைசெய்யும். பரிசுத்தஆவியைப் பெற்றவர்கள் செபம்பண்ணும் வரத்தை அடைந்தவர்களே. நானும் சடங்காசாரம்போல செபம்பண்ணாமல், ஆவியோடும் உண்மையோடும் செபம்பண்ணும்படிக்கும், என் இருதயம் பரிசுத்த விருப்பங்களால் நிறைந்து எக்காலமும் உம்மை வாஞ்சிக்கிறதாயிருக்கும்படிக்கும், கிருபைசெய்யும். பரிசுத்தஆவியைப் பெற்றவர்கள் சரீரத்தின் கிரியைகளை அழிக்கிறவர்களே. கர்த்தரே, நானும் எந்தச் சோதனைகளோடும் போராடி பாவத்தை எதிர்த்துநின்று சிற்றின்பங்கள் யாவையும் வெறுக்கும்படி எனக்கு உதவிசெய்யும். பரிசுத்தஆவியைப் பெற்றவர்கள் நீதியின் கனிகளைக் கொடுக்கிறவர்களே. நானும் உமக்கு மகிமையுண்டாக அன்

பு சமாதானம் பொறுமை விசுவாசம் இச்சையடக்கம் இவை முதலிய நற்குணங்களை உடையவனுயிருக்கும்படி கிருபை செய்தருளும்.

என் பரமபிதாவாகிய கர்த்தரே, செபத்தைக் கேட்கிறவரே, உம்மை வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மைகள் யாவையும் அளிக்கிறவரே, சகல ஈவுகளிலும் உத்தம ஈவாகிய உம்முடைய பரிசுத்தஆவியை எனக்கும் உமது சபையார் அனைவருக்கும் சிருட்டிக்கப்பட்டிருக்கிற யாவருக்கும் தந்தருளும். உம்முடைய ஆவியானவர் அநேகங்கோடி ஆத்துமங்களைக் குணப்படுத்திப் பரிசுத்தமாக்கியிருக்கிறூரே. அவர் என்னையும் குணப்படுத்திப் பரிசுத்தமாக்கும்படி கட்டளையிடும். பொல்லாத இச்சைகள் அடங்கவும், செத்த இருதயம் உயிர்கொள்ளவும், நொந்தமனம் சுகிக்கவும், அறியாமையும் கீழ்ப்படியாமையும் துக்கமும் நீங்க அவைகளுக்குப் பதிலாக ஞானம் நன்னடக்கை பரிசுத்த சந்தோஷங்கள் எனக்கு உண்டாகவும், எனக்கும் உம்முடைய சபையாரெல்லாருக்கும் உமது பரிசுத்தஆவியின் ஈவுகளைப் பொழிந்தருளும். நீர் தந்தருளிய ஒப்பில்லாத உத்தம ஈவுக்காக நான் உம்மை என்றைக்கும் தோத்திரிக்கும்படி உமது ஆவியானவர் என்னிடத்தில் இறங்கி ஒருநாள்மாத்திரம் என்னிடத்தில் தங்காமல் சதாகாலமாய் என்னிடத்தில் தங்கி வாசம்பண்ணும்படி கட்டளையிடும்.

---

# கர்த்தருடைய இராப்போசனமாகிய

## தேவநற்கருணையைப் பரிமாறும் ஒழுங்கை

## விஸ்தரித்து விளக்கிய

# பிரசங்கம்.

---

கர்த்தருடைய இராப்போசனத்துக்கு வருகிறவர்கள் தாங்கள் செய்த பாவங்களைக்குறித்து உண்மையாய் மனஸ்தாபப்படுகிறவர்களாயும், கிறிஸ்து இரட்சகரிடத்தில் உயிரும் உறுதியுமுள்ள விசுவாசம்வைக்கிறவர்களாயும், தேவ அன்பும் சகோதர அன்பும் உள்ளவர்களாயும் சேரவேண்டியது. சேருகிறதற்குமுன் இந்த நற்குணங்களுள்ளவர்களாயிருந்து, பத்திக்கேற்ற ஆயத்தஞ்செய்கிறதுமன்றி, சேர்ந்திருக்கும்போதும் அவர்கள் இந்தக் குணங்களை எழுப்பி முயற்சிபண்ணி ஆவிக்குரிய கிருபையை அதிகமதிகமாய் அடைந்து தேறவேண்டும். இப்படிப்பட்ட முயற்சிபண்ணித் தேறுகிறதற்கு செபபுஸ்தகத்தில் அடங்கியிருக்கிற நற்கருணை ஒழுங்கு நல்ல உதவி. அந்த ஒழுங்கைப் பார்க்கும்பொழுது அது மனந்திரும்புதலையும் விசுவாசத்தையும் அன்பையும் எழுப்பி வர்த்திக்கப்பண்ணுகிறதற்கேற்ற நல்ல எத்தனமென்று விளங்கும். அதன் தன்மையும் அதன் நோக்கமும் விளங்கும்படியாயும், நற்கருணையை வாங்கும்போது ஆக்கினைத்தீர்ப்புண்டாகப் போசனபானம்பண்ணுமல், ஆத்துமநன்மைகளும் திவ்விய ஆறுதலுமே பெருகும்படி பத்தியோடே போசனபானம்பண்ணும்படியாயும், நற்கருணை பரிமாறும் ஒழுங்கில் கண்டிருக்கிற ஒவ்வொரு விசேஷத்தை நாம் இப்பொழுது எடுத்துச் சுருக்கமாய் விஸ்தரித்துக் காண்பிப்போம்.

நற்கருணை ஒழுங்கின் துவக்கத்தில் கர்த்தருடைய செபம் முதலாவதாக வாசிக்கப்படும். இது தகுதியே, ஏனென்றால்,

இந்தச் செபம் நற்கருணையை ஏற்படுத்தின கர்த்தராலே கற்பிக்கப்பட்ட செபமாயிருக்கிறதுமல்லாமல், இதிலே பராபரனை எங்கள் பிதா என்றழைத்து, அவர் தம்முடைய மகிமையை யாவருக்கும் விளங்கச்செய்து நம்முடைய சரீரத்திற்கும் ஆத்துமாவுக்கும் தேவையான போசனத்தைக்கொடுத்து நம்முடைய குற்றங்களை மன்னிக்கவேண்டுமென்று இந்தச் செபத்திலே விண்ணப்பம்பண்ணுகிறதாயுமிருக்கிறது.

அதற்குப் பின்வருஞ் சுருக்கச்செபத்தின் பொருளென்னவென்றால், புறம்பான நடக்கைமாத்திரம் மனிதருக்குத் தெரிந்திருக்க பராபரன் இருதயங்களையும் விருப்பங்களையும் ஆராய்ந்துபார்க்கிறவர்; அவருக்குமுன்பாக இரகசியமில்லை; ஆகையால் அவர் நம்மையும் நாம் செய்யப்போகிற ஆராதனையையும் ஒப்புக்கொள்ளுதற்கு ஏதுவுண்டாயிருக்கும்படி அவர் தம்முடைய ஆவியினாலே அன்புமுதலிய நற்குணங்களை நமக்குத் தந்து நம்மை ஆயத்தமுள்ளவர்களாக்கவேண்டும். அன்றியும், பராபரன் "தம்முடைய பரிசுத்தஆவியின் ஏவுதலால் நம்முடைய இருதயத்தின் சிந்தனைகளைச் சுத்தம் பண்ணியருளவேண்டும்" என்று இந்த செபத்திலே வேண்டிக்கொள்வோம். ஏனென்றால், நாம் இயல்பின்படி அசுத்தராயும் இந்த திவ்விய பந்திக்கேற்ற நற்சிந்தனைகளைச் சிந்திக்க ஏலாதவர்களாயும் இருக்கிறோம். ஆதலால் பரிசுத்தஆவியின் ஏவுதல் நமக்குக் கிடைக்கவேண்டியது அவசியம். இதுவுந் தவிர அன்பானது நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறதாயிருப்பதினாலே பத்துக்கற்பனைகளாகிய நியாயப்பிரமாணத்தை வாசிக்கிறதற்குமுன்னே "பரிபூரணமான அன்புக்காக" வேண்டுதல்செய்யும்படி நியமித்திருக்கிறது சரியே.

பின்பு பத்துக்கற்பனைகள் வாசிக்கப்படும். கர்த்தருடைய இராப்போசனம் வாங்குகிறவர்கள் தங்கள் பாவத்தை அறிந்துணர்ந்து அதைக்குறித்துத் துக்கிக்கிறவர்களாயிருக்கவேண்டுமே. பாவமின்னதென்று நியாயப்பிரமாணத்தினாலே அறியப்படும். இதினிமித்தியம் பராபரனுடைய பரிசுத்த பிரமாணங்

களின் அடக்கமாகிய பத்துக்கற்பனைகளை நற்கருணை ஒழுங்கின் துவக்கத்திலே வாசிக்கும்படி நியமித்திருக்கிறது. இந்தக் கற்பனைகள் புறம்பான தூர்க்கிரியைகளைமாத்திரம் விலக்கிறதென்று நினைக்கக்கூடாது. பாவத்தின் விதையும் வேருமாகிய இச்சையும் இந்த கற்பனைகளினலே விலக்கப்பட்டதென்று கர்த்தர் மலையில் பண்ணின பிரசங்கத்தினல் அறிந்திருக்கிறோம். திருஷ்டாந்தரமாக, "நம்மைத்தவிர உனக்கு வேறே தேவர்களில்லாமல் போவதாக" என்று சொல்லிய கற்பனையால் லோகநேசமும் விலக்கப்பட்டிருக்கிறது. "ஒருவன் உலகத்தின்மேல் அன்பாயிருந்தால் பிதாவைச் சிநேகிக்கும் அன்பு அவனிடத்தில் இராது" என்கிற வாக்கியத்தினலே இந்த யோசனை விளங்கும். "கொலைசெய்யாதிருப்பாயாக" என்ற கற்பனையால் கொலையல்லாமல் அநியாயமான கோபமும் வற்மமும் விலக்கப்பட்டிருக்கிறது. "விபசாரஞ் செய்யாதிருப்பாயாக" என்பதினல் சிற்றின்பயோசனைகள் இச்சைகளும் விலக்கப்பட்டிருக்கிறது. இப்படியிருக்க, நாம் புறம்பாக நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டியதுமன்றி நம்முடைய இருதயமும் அதற்குக் கீழ்ப்படிந்து அதைக் கைக்கொள்ளவேண்டியது. ஆகையால், குருவானவர் ஒவ்வொரு கற்பனையையும் வாசித்தவுடனே சபையார் "கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்" என்று சொல்லி, தாங்கள் அந்தக் கற்பனையை மீறினதாக ஒத்துக்கொண்டு, மீறின குற்றத்தைக் கர்த்தர் இரக்கமாய் மன்னிக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்வார்கள். சகோதரரே, நீங்கள் ஒவ்வொரு கற்பனையின் முடிவிலும் இந்த மறுமொழி சொல்லும்போது, அந்தக் கற்பனையை மீறினதைப் பராபரனிடத்தில் உண்மையாய் அறிக்கையிட்டு, அதைக்குறித்து உண்மையாய் மனஸ்தாபப்பட்டு, அவருடைய இரக்கத்தையும் மன்னிப்பையும் ஆவலாய்க் கேட்டுக்கொள்ளுகிறீர்களா?

"கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்" என்று சபையார் சொல்வதுமல்லாமல், "இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்களிருதயத்தை ஏவியருளும்" என்றுஞ் சொல்வார்கள்.

இப்படிச் சொல்லும்போது பராபரனுடைய பிரமாணங்களைக் கைக்கொள்வதற்கு இயல்பின்படி நமக்குப் பெலனும் மனதும் இல்லையென்று நாம் ஒத்துக்கொண்டு, தெய்வசித்தத்துக்கேற்றபடி நடக்கிறதற்குத் தேவனே நம்மை உச்சாகமுள்ளவர்களாக்கிப் பலப்படுத்தவேண்டுமென்று வேண்டுதல் செய்து, இனி அவருடைய ஆவியின் உதவியைக்கொண்டு அவருடைய பரிசுத்த பிரமாணங்களைக் கைக்கொள்ளும்படி உறுதியாய்த் தீர்மானம்பண்ணவேண்டியது.

பின்பு "இராசாக்களுக்காகவும், அதிகாரிகளுக்காகவும், மற்றெல்லாச் சனங்களுக்காகவும் விண்ணப்பங்களையும் வேண்டுதல்களையும் பிரார்த்தனைகளையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டுமென்று நான் பிரதானமாய்ப் புத்திசொல்லுகிறேனே" என்று அப்போஸ்தலன் ஆதிக்கிறிஸ்தவர்களுக்குக் கற்பித்தபடி இராசாத்திக்காகச் செய்கிற செபம் வாசிக்கப்படும்.

ஞாயிற்றுக்கிழமைக்கும் பண்டிகைநாட்களுக்கும் குறிக்கப்பட்ட சுருக்கச்செபங்களில் அன்றையதினத்துக்குரிய செபம் இப்போது வாசிக்கப்படும். நிருபவாக்கியங்களையும் சுவிசேஷ வாக்கியங்களையும் பத்தியோடே வாசிக்கிறதற்கும், அந்தந்த நாளுக்கடுத்த படிப்பினைகளைக் கற்றுக்கொள்வதற்கும் இந்தச் சுருக்கச் செபங்கள் ஏதுவும் உதவியுமாயிருக்கிறது.

பின்பு நிருபவாக்கியமும் சுவிசேஷவாக்கியமும் வாசிக்கப்படும். பத்துக்கற்பனைகளாகிய நியாயப்பிரமாணத்தை வாசித்துக் கூறினதின்பின்பு, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை விலக்கி மீட்ட இரட்சகருடைய உபதேசங்களையும், அவருடைய கிரியைகளையும் விளங்கக்காட்டுஞ் சில விசேஷித்த வாக்கியங்களை வாசிக்கிறது ஆறுதல் உண்டாக்கத்தக்கதாயிருக்கிறது. நிருபவாக்கியங்களில் கிறிஸ்துமார்க்கத்துக்குரிய முக்கியமான போதகங்களும், சுவிசேஷவாக்கியங்களில் கிறிஸ்துநாதருடைய பிரதான கிரியைகளைக்குறித்

துச் சொல்லிய சரித்திரங்களும், அவர்தாமே உரைத்த அருமையான உபதேசங்களும் அடங்கியிருக்கின்றன.

பின்பு நைசீன் விசுவாசப்பிரமாணம் வாசிக்கப்படும். பராபரனுடைய திருவசனமாகிய நிருப சுவிசேஷவாக்கியங்களை வாசித்தபின்பும், கர்த்தருடைய இராப்போசனத்தை ஒருமித்து வாங்குகிறதற்குமுன்பும், பிதாவையும், அவருடைய பிரிய குமாரனாகிய நம்முடைய இரட்சகரையும், பரிசுத்தஆவியையும் குறித்து எக்காலத்திலுமுள்ள சபையார் அனைவரும் கைக்கொண்டிக்கிற பொதுவான விசுவாசத்தை நாமும் கைக்கொண்டிருக்கிறோமென்று வெளியரங்கமாய் அறிக்கையிடுகிறது தகுதியே.

குருவானவர் வேதாகமத்திலுள்ள ஒரு வாக்கியத்தை வாசித்து அதை விஸ்தரித்துப் பிரசங்கம்பண்ணினதின்பின்பு, எல்லாரும் சகோதர அன்பைக் காண்பிக்கிறதற்கு இரண்டுவது நியமித்திருக்கிறது. இந்த அன்பைக் காண்பிக்கும்படி, முதலாவது, தரித்திரரான சகோதரருடைய அவசரங்களுக்கென்று காணிக்கை கொடுக்கப்படும். நம்முடைய விசுவாசத்தை நம்முடைய கிரியைகளினாலே காண்பிக்கிறதற்கு இது நல்ல சமயம். இரண்டாவது, கிறிஸ்துநாதருடைய அன்பு அவருடைய செபங்களினாலே விளங்கினதுபோல், நம்முடைய அன்பும் அப்படியே நம்முடைய செபங்களினாலே விளங்கவேண்டியதாலும், சகோதர அன்புள்ளவர்கள் விசேஷமாய் விசுவாசிகளாகிய குடும்பத்தாரைச் சிநேகிக்கிறவர்களானதினாலும், "உலகத்தில் போராடுகிற கிறிஸ்துசபை அனைத்திற்கும் நற்சீர் உண்டாக" செபம்பண்ணப்படும்.

இதோடே நற்கருணை ஆயத்த ஒழுங்கு முடியும். இதற்குப் பின்வருவதெல்லாம் நற்கருணையைப் பரிமாறும் ஒழுங்கோடே சேர்ந்திருக்கிறது.

சகோதரரே, இதுவரைக்கும் நீங்கள் செய்தவைகளையும் சொன்னவைகளையும் சிந்தித்துக்கொண்டு உங்களைச் சோதித்துப்பாருங்கள். தேவனுடைய பரிசுத்த பிரமாணங்கள் வாசிக்

கப்பட்டபொழுது, நீங்கள் உங்களைக் குற்றவாளிகளென்று அறிக்கையிட்டு, அந்தப் பிரமாணங்களைக் கைக்கொள்ளத்தக்க மனதைக் கேட்டுக்கொண்டீர்கள். கிறிஸ்து இரட்சகருடைய சுவிசேஷம் வாசிக்கப்பட்டதின்பின்பு பராபரனை உங்கள் பிதாவாகவும், இயேசுவை உங்கள் இரட்சகராகவும், பரிசுத்த ஆவியை உங்களுக்குச் சீவனைக்கொடுப்பவராகவும் நீங்கள் ஏற்றுக்கொண்டு உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டீர்கள். தரித்திர சகோதரருக்கென்று காணிக்கை கொடுத்து, பொதுவான திருச்சபையின் வாழ்வுக்காகச் செபம்பண்ணினீர்கள். இப்படிச்செய்யும்போது ஆவியோடும் உண்மையோடும் செய்தீர்களா? உங்கள் பாவத்தை அறிக்கையிட்டதில் அதை உணர்ந்தா அறிக்கையிட்டீர்கள்? உங்கள் பலவீனத்தை உணர்ந்ததினாலேயா பராபரனுடைய பிரமாணங்களைக் கைக்கொள்ளத்தக்க மனதைக் கேட்டுக்கொண்டீர்கள்? கிறிஸ்துவின் சுவிசேஷத்தைச் சந்தோஷமான நற்செய்தியென்று உணர்ந்தீர்களா? விசுவாசப்பிரமாணத்தை வாயினாலே சொன்னதுமல்லாமல், அதிலடங்கிய விசேஷங்களை விசுவாசித்து, உண்மையாய் ஏற்றுக்கொண்டு, மன உறுதியோடே அறிக்கையிட்டீர்களா? தருமங்கொடுத்தபோது கையினாலே கொடுத்ததற்கு இருதயம் இசைந்ததா? செபம்பண்ணும்போது ஆவலோடும் விசுவாசத்தோடும் செபம்பண்ணினீர்களா? இப்படியெல்லாம் கர்த்தருடைய சித்தத்திற்கேற்கச் செய்தீர்களானால், நீங்கள் கர்த்தருடைய இராப்போசனம் வாங்குகிறதற்கேற்ற ஆயத்தமுடையவர்களாய் இருப்பீர்களென்பதற்குச் சந்தேகமில்லை.

தேவநற்கருணை பரிமாறும் ஒழுங்கை நாம் இப்பொழுது சிந்தித்துப்பார்க்கவேண்டும். இதிலே முதலாவது, நற்கருணை வாங்கும்படி சேர்ந்திருக்கிறவர்களைக் குருவானவர் பார்த்து: "கர்த்தருக்குட்பட்ட பிரியமானவர்களே" என்று அழைத்துக் குறிக்கப்பட்ட புத்திமதிகளை வாசிப்பார். இந்தப் புத்திமதிகளில் நம்மைச் சோதிக்கவேண்டியதைக்குறித்துச் சொல்லியிருக்கிற புத்திகள் பிரதானம். நாம் அபாத்திரராய்ச் சேர்ந்

தால் மோசம் பெரிதாயிருக்கும்; ஏற்றவிதமாய்ச் சேர்ந்தால் மிகுந்த பிரயோசனம் அடைவோம். இவ்விரண்டு முகாந்தரங்களினிமித்தம் நம்மைச் சோதித்து அறியவேண்டியது அவசியம். மேலும் ஏற்றவிதமாய் நற்கருணையை வாங்கினால் கிறிஸ்து நமக்குள்ளே வாசமாயிருப்பாரென்றும், நாம் அவருக்குள்ளே வாசமாயிருப்போமென்றும் சொல்லியிருக்கிறது. அவரோடே இவ்வகையாய் ஐக்கியப்படுதல் எவ்வளவு ஆனந்தமும் எவ்வளவு அருமையுமுள்ளது! இந்த ஐக்கியத்தை நீங்கள் அடைந்து, அதன் ஆனந்தத்தையும் அதன் அருமையையும் உணர்ந்துகொள்வீர்களாக.

இரட்சகர் உங்களை மீட்டுக்கொண்ட சொல்லிமுடியாத உபகாரங்களினிமித்தம் நன்றியறிதலோடே அவருக்குத் தோத்திரஞ் செலுத்தவேண்டுமென்று ஏவுகிற புத்திமதிகளும் இந்தப் பிரசங்கத்திலுண்டு. அப்படி ஏவுகிறதில் உங்களை இருளிலும் மரணநிழலிலும் கிடந்த நிர்ப்பாக்கியமுள்ள பாவிகள் என்று காட்டியிருக்கிறது. உங்களை அப்படிப்பட்டவர்களென்றுணர்ந்தீர்களா? உங்கள் பாவத்தையும் நிர்ப்பாக்கியத்தையும் வாயினாலே அறிக்கையிடுகிறது இலேசான காரியம். அதை உணருகிறதும் பாவத்தை வெறுக்கிறதும் இலேசல்ல. உங்கள் நிர்ப்பாக்கிய நிலைமையை உணராவிட்டால் நீங்கள் மீட்கப்பட்டதைக்குறித்து நன்றியறிதலுள்ளவர்களாகவும், இயேசுக்கிறிஸ்துவை உண்மையாய் ஏற்றுக்கொள்ளவும், அவரை அன்பாய்த் துதிக்கவும் ஏதுவில்லை. கர்த்தருடைய இராப்போசனம் வாங்குகிறபோது அவர் வெளிப்படுத்திய ஒப்பில்லாத மகா அன்பை நினைக்கிறது விசேஷித்த கடமையாயிருப்பதினாலே, நம்முடைய பாவத்தையும் நாம் அடையவேண்டிய ஆக்கினையையும் உணர்ந்துகொள்வது அவசியமே. நம்முடைய பாவங்களுக்காகச் சிலுவையில் அறையுண்ட இயேசுக்கிறிஸ்துவின் அன்பே ஆத்துமத்திற்கு மெய்யான ஆறுதல். இந்த ஆறுதல் உங்களுக்குக் கிடைக்கும்படி இந்தப் பரிசுத்த இரகசியங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஆதலால் கர்த்தருடைய இராப்போசனத்துக்குச் சேரும்போது

இந்த ஆறுதலை விரும்பித் தேடிச் சேரவேண்டியது. குருவானவர் இந்தப் புத்திமதிகளை வாசிக்கும்போது நீங்கள் கவனித்துக் கேட்கிறதுமல்லாமல், ஒவ்வொரு விஷயத்தையுங்குறித்து உடனேக்குடனே விண்ணப்பம் பண்ணவும்வேண்டும். எப்படியென்றால், நன்மையானதைக்குறித்து வாசிக்கக் கேட்கும்போது, இந்த நன்மையை நான் அடையும்படி செய்தருளும் என்றும், ஆக்கினையைக்குறித்து வாசிக்கக் கேட்கும்போது, கர்த்தாவே, இந்த மோசத்துக்கு என்னை விலக்கிக் காரும் என்றும் விண்ணப்பம்பண்ணுங்கள்.

குருவானவர் மேற்சொல்லிய புத்திமதிகளை வாசித்தானவுடனே நற்கருணை வாங்குகிறவர்களைப்பார்த்து விசுவாசத்தோடே சேரும்படி அழைப்பார். அவர்கள் புறம்பாகக் கிறிஸ்துவின் சன்னிதானத்திலே சேர்ந்தாயிற்று; இதற்கு அடையாளமாக தேவாலயத்திலுள்ள தூரமான இடங்களை விட்டு நற்கருணை மேசைக்குச் சமீபமாய்ச் சேர்ந்திருக்கிறார்கள். ஆனாலும் விசுவாசமில்லாமல் சரீரத்தின்படி மாத்திரம் சேருகிறது பிரயோசனமற்றதென்றும், விசுவாசத்தினாலே கிறிஸ்துவினிடத்தில் சேரக்கூடுமேயன்றி மற்றப்படி அவரிடத்தில் சேரக்கூடாதென்றும், விசுவாசமுள்ளவர்களுக்குமாத்திரம் இந்தச் சாக்கிரமெந்துக்குரிய பொருளும் ஆறுதலும் கிடைக்குமென்றும் வேதத்தினாலே நிச்சயமாய்த் தெரிந்திருப்பதால், "விசுவாசத்தோடே சேருங்கள்" என்று எச்சரிப்புச் சொல்லப்படும்.

இதற்குப்பின்பு பொதுவான பாவ அறிக்கைச் செபம் வாசிக்கப்படும். இந்தச் செபத்தினாலே நம்முடைய பாவத்தை அறிக்கையிட்டு, அதற்கு வரவேண்டிய ஆக்கினை நீதியே என்று ஒத்துக்கொண்டு, நம்மை வெறுத்துத் தாழ்த்தி, நம்முடைய பாவம் நம்மாலே சுமக்கப்படாத பாரமென்று சொல்லி, மிகவும் உருக்கமாய் விண்ணப்பம்பண்ணுகிறதுமன்றி, நம்முடைய பாவங்களை இப்படி அறிக்கையிட்டிருக்கையில், கர்த்தராயிருக்கிற இயேசுக்கிறிஸ்துவின் புண்ணியங்களையும்

நினைத்து, அவர் நிமித்தமாகப் பராபரன் பாவமன்னிப்பையும் ஆத்தும சமாதானத்தையும் நமக்குத் தந்தருளவேண்டுமென்றும், நாம் புதிதாக்கப்பட்டவர்களாய் இனி எப்பொழுதும் அவருக்கு ஊழியஞ்செய்வதற்கு அவர் நம்மைப் பலப்படுத்த வேண்டுமென்றும் ஆவலோடே வேண்டிக்கொள்வோம்.

எல்லாரும் இப்படித் தங்கள் பாவங்களை ஒத்துக்கொண்டு, தேவனிடத்தில் இரக்கத்தையும் கிருபையையும் பிரார்த்திக்குஞ்சமயத்தில், சபையார் இன்னம் முழங்கால்படியிட்டிருக்க, குருவானவர் எழுந்துநின்று தேவனுடைய நாமத்தினாலே பாவவிமோசன அறிக்கையைக் கூறுவார். அதின் கருத்தென்னவென்றால், குணப்பட்டு விசுவாசிக்கிறவர்களனைவருக்கும் பாவமன்னிப்பை அருளிச்செய்வோமென்று தேவன் சொல்லிய வாக்குத்தத்தத்தைக் குருவானவர் காட்டி, அந்த வாக்குத்தத்தம் சபையாருக்குப் பலிக்கும்படியாயும், தேவன் அவர்கள் பாவங்களை அவர்களுக்கு மன்னித்து சகல நன்மையிலும் அவர்களை உறுதிப்படுத்தும்படியாயும், அவர்களுக்காக வேண்டுதல் செய்வார். இந்த அறிக்கையைக் கேட்கும்போது உங்கள் விசுவாசத்தை எழுப்பிக்கொண்டு, தேவனுடைய வாக்குத்தத்தத்தையும் அவருடைய கிருபையுள்ள உடன்படிக்கையையும் உறுதியாய்ப் பற்றிக்கொள்ளுங்கள்; முழு இருதயத்தோடே கிறிஸ்துவை விசுவாசித்து, சுவிசேஷத்துக்குரிய ஆறுதலை உங்களுடையதாக்கிக்கொள்ளுங்கள்; அந்த ஆறுதல் விசுவாசிக்கிறவர்கள் சுதந்தரமே. தேவனுடைய வார்த்தையை நீங்கள் விசுவாசியாவிட்டால், அவருடைய பணிவிடைக்காரன் கூறுகிற பாவவிமோசன அறிக்கை உங்களுக்குப் பிரயோசனமுடையதாயிராது. விசுவாசிகளாயிருந்தால் உங்களுக்குக் கூறப்பட்ட தேவனுடைய வார்த்தையைக்கொண்டு உங்களைத் தைரியப்படுத்தி, நம்முடைய பாவங்கள் நீங்கிப்போயினவென்றும், பராபரன் நம்மோடே ஒப்புரவாயிருக்கிறாரென்றும் சமாதானமுண்டாவதாகவென்று வாழ்த்துகிறார் என்றும் சொல்லி உங்களை ஆறுதல்படுத்திக்கொள்ளுங்கள்.

தேவனுடைய ஊழியக்காரர் கூறும் பாவவிமோசன அறிக்கைக்குத் தேவனுடைய வார்த்தையே அஸ்திபாரம். ஆகையால் குருவானவர் இந்த அறிக்கையை வாசிப்பதுமன்றி, வேதத்திலுள்ள அத்தாட்சிகளைக்கொண்டு அதைத் திருட்டாந்தரப்படுத்தும்படிக்கும், சபையாருடைய விசுவாசத்தை உறுதிப்படுத்தும்படிக்கும், சுவிசேஷத்திலுள்ள சில விசேஷித்த வாக்கியங்களை எடுத்து வாசிப்பார்.

இவைகளில் வருத்தப்பட்டுப் பாரஞ்சுமந்தவர்களைப் பார்த்து: "நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் செய்வேன்" என்று கிறிஸ்துநாதரே சொல்லிய ஆறுதலுள்ள வார்த்தை முதலாவதாக வாசிக்கப்படும். அவர் இளைப்பாறுதல் செய்கிறதெப்படியென்றால், அவர் பாவிகளுக்கு இரங்கி, அவர்களுடைய வருத்தமும் பாரமும் நீங்கும்படியாகப் பராபரனுடைய மன்னிப்பாகிய இரக்கத்தையும், தம்முடைய ஆவியின் உதவியாகிய கிருபையையும் அவர்களுக்கு அருளிச்செய்கிறார். பின்பு, "தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிற எவனும் கெட்டுப்போகாமல் நித்தியசீவனை அடைவதற்குப் பராபரன் அவரைத் தந்து இவ்வளவாய் உலகத்தாரில் அன்புகூர்ந்தார்" என்ற வாக்கியம் வாசிக்கப்படும். இதுவும் கிறிஸ்து இரட்சகருடைய திருவாயினாலே கூறப்பட்ட வாக்கியம். சுவிசேஷத்தின் பொருள் முழுவதும் இதிலே அடங்கியிருக்கின்றது. விசுவாசம் வைக்கிறதற்கு இதைப்பார்க்கிலும் உறுதியான அஸ்திபாரம் கிடைக்குமா? "தம்முடைய சொந்த குமாரனென்றும் பாராமல், அவரை நம்மெல்லாருக்காகவும் ஒப்புக்கொடுத்தவர், அவரோடே மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளமாட்டாரா?" பின்பு அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுலாலும் பரிசுத்த யோவானாலும் எழுதப்பட்ட வாக்கியங்கள் இரண்டு வாசிக்கப்படும். இந்த வாக்கியங்களின் அடக்கம் என்னவென்றால், கிறிஸ்துநாதர் பாவிகளை இரட்சிக்கும்படி உலகத்தில் வந்தபடியினாலே நாம் எப்படிப்பட்ட பாவிகளாயிருந்தும் நம்மைப் புறக்கணியாமல் ஏற்றுக்கொள்ள

ருணை மேசையிடமாய்த் திரும்பி: "பராபரனுக்குத் தோத்திரஞ் செலுத்துகிறது மிகவும் தகுதியாயும் நீதியாயும் நமக்கு விசேஷித்த கடமையாயும் இருக்கிறது" என்று சொல்லிய பின்பு, தாமும் தேவநற்கருணை வாங்குகிறவர்களனைவரும் மோட்சத்திற்கேறி வெற்றிசிறந்த திருச்சபையைச் சேர்ந்தவர்களாயிருந்தாற்போலவும், அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் இரத்தச்சாட்சிகளாகிய மகிமைபொருந்திய சங்கத்தைச்சேர்ந்து அவர்களோடே செயகீர்த்தனம் பாடினவர்களாயிருந்தாற்போலவும், "சேனைகளின் கர்த்தராயிருக்கிற பராபரனே, பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர்" என்கிற சிறந்த கீதத்தை ஏகசிந்தையோடும் ஏகசத்தத்தோடும் வாசிப்பார்கள். இதை வாசிக்கும்பொழுது சரீரத்தின்படி பூமியிலிருக்கிறவர்களாயிருந்தும், ஆவியின்படி பரமண்டலத்தில் சேர்ந்தவர்களாய் நம்முடைய சிருட்டிகரும் இரட்சகருமாகிய அநாதிதேவனை முழு இருதயத்தோடே மகிமைப்படுத்தித் துதிக்கவேண்டும்.

இந்தக் கீர்த்தனத்தை வாசித்தபின்பு, குருவானவரும் முழங்கால்படியிட்டு, பராபரனுடைய வரப்பிரசாதங்களைப் பெற்றுக்கொள்ளுகிறதற்குத் தாமும் சபையாரும் பாத்திரவான்களல்லவென்று தாழ்மையாய் ஒத்துக்கொண்டு, அவைகளைப் பாத்திரவிதமாய்ப் பெற்றுக்கொள்ளத்தக்க கிருபை தங்களுக்குக் கிடைக்கவேண்டுமென்று ஆவலோடே செபம்பண்ணுவார்கள். நம்மை எப்படி ஆயத்தப்படுத்தினாலும், எப்படிப்பட்ட அன்போடும் உருக்கத்தோடும் கீர்த்தனம்பாடி செபம் பண்ணினாலும், ஒரு நன்மையையும் பெற்றுக்கொள்ள நாம் பாத்திரரல்லவென்று நாம் உணர்ந்து நம்மைச் சிறுமைப்படுத்தித் தாழ்த்தவேண்டியது. இதற்கேற்றதாகவும், தானியேல் தீர்க்கத்தரிசி சொன்ன வார்த்தைக்கொப்பாகவும், "எங்கள் சுயநீதியை நம்பி உம்முடைய பந்தியில் சேரத்துணியாமல், உமது இரக்கத்தையே நம்பிச் சேருகிறோம்" என்று இச்செபத்திலே சொல்லியிருக்கிறது. அன்றியும், கானான்தேசத்து ஸ்திரி இயேசுநாதரிடத்தில் மன்றாடினதில் தன்னைத் தாழ்மைப்படுத்தின வார்த்தைகளில் ஒன்று இந்தச் செபத்தி

லுண்டு; ஆனாலும் அவள் சொன்னதைப்பார்க்கிலும் இந்தச் செபத்தில் கண்டிருக்கிற வார்த்தை மிகவும் தாழ்மையுள்ளது. அவள்: "தங்கள் எசமான்களுடைய போசனபலகைகளிலிருந்து விழுந் துணுக்கைகளை நாய்கள் தின்னுமே" என்றாள். நாமோ பராபரனுடைய மேசையிலிருந்து விழுந் துணுக்கைகளையும் பொறுக்கிக்கொள்ளப் பாத்திரவான்களல்லவென்று ஒத்துக்கொள்ளுகிறோம். பராபரன் நம்மை அங்கிகரிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கும்பொழுது நம்முடைய கிரியைகளை நம்பி வேண்டிக்கொள்ளாமல், அவைகளை ஒன்றும் பெருதவைகளென்று முற்றிலும் வெறுத்து, கிறிஸ்துவின் புண்ணியங்களையே நம்பிப் பிரார்த்திக்கவேண்டும்.

பின்பு நற்கருணைப் பிரதிஷ்டைச்செபம் வாசிக்கப்படும். கிறிஸ்து பலியாய் மரணமடைந்ததையும், அவருடைய பலியினாலே சர்வலோகத்தின் பாவங்களும் நிவிர்த்தியாக்கப்பட்டதையும், அதை என்றுமுள்ள ஞாபகமாக நினைக்கும்படி தேவ நற்கருணை ஸ்தாபிக்கப்பட்டதையும் இந்தச் செபத்தின் துவக்கத்திலே காட்டி, அப்பம் இரசமாகிய சிருட்டிகளுமல்லாமல், ஆவிக்குரிய கிருபையும் நமக்குக் கிடைக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டு, பின்பு கர்த்தருடைய இராப்போசனம் ஏற்படுத்தப்பட்ட வரலாறும், அதை ஏற்படுத்தினதில் கர்த்தரே திருவுளம்பற்றின வார்த்தைகளும் எடுத்து வாசிக்கப்படும்.

பிரதிஷ்டைச்செபம் வாசிக்கப்படும்பொழுது சபையார் தங்கள் விசுவாசத்தையே எழுப்பிக்கொண்டு அதை முயற்சி செய்யவேண்டியது. இத்தருணத்தில் விசுவாசமொன்றே தேவை. குருவானவர் எதைச் சொன்னாலும் எதைச் செய்தாலும் விசுவாசத்தை எழுப்புகிறதே அவருடைய விருப்பம்.

அவர் அப்பத்தையும் இரசத்தையும் பிரித்தெடுத்து அவைகளைப் பிரதிஷ்டைசெய்ய ஆயத்தமாக்கும்போது, பராபரன் தம்முடைய குமாரனை இவ்வுலகத்தில் அனுப்பும்படியாயும், மனிதருடைய பாவங்களுக்காக அவரைப் பலியிட்டுக்கொடுக்கும்படியாயும், உலகத்தோற்றத்திற்குமுன் அவர் கொண்டரு

வின் ஆலோசனையை நினையுங்கள். "கிறிஸ்து காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்துக் கொண்டு தோத்திரம்பண்ணினார்" என்று குருவானவர் வாசிக்கும்போது, ஆண்டவர் தம்முடைய சீஷர்களோடே பஸ்காவிருந்தை ஆசரித்ததையும், அவ்வேளையில் அவர் திருவுளம்பற்றின திவ்விய உபதேசங்களையும், நீங்கள் வாங்கப்போகிற சாக்கிரமெந்தை அவர் ஏற்படுத்தி தமது திருக்கரங்களால் அதை அப்போஸ்தலருக்குப் பரிமாறிக்கொடுத்ததையும் சிந்தித்துக்கொண்டு; அப்பம் பிட்கப்படுகையில், ஆண்டவர் உங்கள் மீறுதல்களுக்காகக் காயப்பட்டு உங்கள் அக்கிரமங்களுக்காக நொறுக்கப்பட்டதையும், அவர் உங்களுக்குப் பிணைப்பட்டு உங்கள் பாவங்களைச் சுமந்துதீர்க்கும்படி கொடிய வேதனையடைந்ததையும், அவர் தழும்புகளால் நீங்கள் குணமானதையும், உங்களுக்குச் சமாதானம் உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் இறங்கினதையும், அவர் திருமேனி பிட்கப்பட்டாற்போல்வருந்த அவர் கைகால்களில் வலு ஆணிகள் கடாவினதையும், அவர் சிலுவையில் அறையப்பட்டு மரித்ததையும், உங்கள் பாவங்களைச் சுமந்ததினாலேயே அவர் இந்தக் கஸ்தியெல்லாம் உத்தரித்ததையும்; நீங்கள் நினைத்து விசுவாசிக்கிறதுந் தவிர, குருவானவர் பாத்திரத்தைக் கையில் எடுத்துக்கொள்ளும்போது, ஆண்டவருடைய திருஇரத்தம் உங்களுக்காகச் சிந்தப்பட்டதையும், அவர் ஆத்துமம் பாடுபட்டதில் அவருடைய வேர்வையெல்லாம் இரத்தமாய் மாறித் தரையில் விழுந்ததையும், பின்பு முண்முடி சூட்டின சிரசிலும் சிலுவையில் அறையப்பட்ட கைகால்களிலும் ஈட்டி குத்துருவின் விலாவிலும் இரத்தஞ்சொரிய விலைமதியாத அவருடைய திருஇரத்தமெல்லாம் உங்கள் பாவங்கள்போகத் தாரைதாரையாய்ப் பாய்ந்ததையும், உயிருள்ள விசுவாசத்தோடும் நன்றியறிதலோடும் சிந்தித்துக்கொள்ளுங்கள்.

"இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரம்" என்றும், "இது உங்களுக்காகவும் அநேகருக்காகவும் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தம்" என்றும், கிறிஸ்துநாத

ரே திருவுளம்பற்றின வார்த்தைகளைப் பிரதிஷ்டை வாசகமாக வாசிக்கும்பொழுது, நற்கருணை அப்பம் இரசம் என்றிவைக ளின் தன்மை மாறாமல் முன்போலவேயிருந்தும், அவைக ளைப் பிரதிஷ்டைபண்ணின நோக்கத்தையும், அவைகளின் வழியாய் விசுவாசிகளுக்கு அருளப்படும் ஆவிக்குரிய நன் மைகளையும் பார்த்தால், அவைகளைக் கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமுமாக அங்கிகரிக்கவேண்டியதுமல்லாமல், "அவர் கட்டளையிட்ட பரிசுத்த ஏற்பாட்டின்படி அந்த அப்பத்தை யும் திராட்ச இரசத்தையும் விசுவாசத்தோடு வாங்குகிறவர் கள் மிகவும் பரிசுத்த அவருடைய சரீரத்தையும் இரத்தத்தை யும் பெற்றனுபவிப்பார்கள்" என்று விசுவாசிக்கவும் வேண் டியது.

பிரதிஷ்டை செய்ததின்பின்பு, நற்கருணை வாங்குகிறவர் கள் வரிசைவரிசையாகப் பரிசுத்த மேசையினருகே சேர்ந்து கிராதியிலே முழங்கால்படியிட்டிருக்க, குருவானவர் நற் கருணை அப்பத்தையும் இரசத்தையும் அவரவர்களுக்குக் கொ டுக்கும்போது, அன்புள்ள இரட்சகர் இப்படியே ஒவ்வொரு விசுவாசிகளையும் தம்மிடத்தில் அழைத்து, தம்முடைய சரீரத் தையும் இரத்தத்தையும் தமது மரணப்பாடுகளால் உண்டான நன்மைகளனைத்தையும் அவர்களுக்கு அருளிச்செய்கிறார் என்று நினைவுகூர்ந்து, அவரிடத்தில் நம்பிக்கை வைக்கிறவர் களாயும் அவருக்குத் துதிதோத்திரஞ் செலுத்துகிறவர்களா யும் இருங்கள்.

காணப்படுகிற புறம்பான அடையாளங்களையும், அவைக ளில் அடங்கியிருக்கிற ஞான அர்த்தத்தையும் குருவானவர் செய்யவும் வாசிக்கவும் நியமிக்கப்பட்டவைகளையும் அந் தந்த வார்த்தை வாசிக்கப்படும்போது, நாம் சிந்திக்கவேண்டிய விசேஷங்களையும் இப்பொழுது காட்டியாயிற்று. ஆனாலும் நற்கருணை வாங்கும்படி உங்கள் முறை வரும்போது மேற் காட்டிய அடையாளங்கள் விசேஷங்களில் ஒன்றையும் பாரா மலும், குருவானவரும் மற்றச் சபையாரும் செய்கிறதைக் கவ னியாமலும், அருமை இரட்சகர் உங்கள் சரீரத்தையும் உங்

கள் ஆத்துமத்தையும் நித்தியசீவனுண்டாகக் காக்கும்படி வந்திருக்கிறாரென்று அவரையே தரிசித்துத் தியானித்து ஏற்றுக்கொள்ளவேண்டியது. விசுவாசமே நம்பப்படுகிறவைகளின் உண்மை. அதுவே கிறிஸ்துவின் சரீரத்தையும் இரத்தத்தையும் வாங்குகிற எத்தனம். கிறிஸ்துநாதர் இச்சாக்கிரமெந்தின் வழியாய்க் கொடுக்கும் ஈவுகளையும், அவருடைய புண்ணியபலன்கள் நன்மைகளையும் விசுவாசத்தினாலேயே வாங்கவேண்டியது. விசுவாசத்தோடே நற்கருணை வாங்குகிறோமானால், கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமுமாகிய விலையுயர்ந்த ஈவுகளைப் பெற்றனுபவிக்கிறதுமன்றி சகல ஞானநன்மைகளையும் அடைவோம். விசுவாசத்தோடே வாங்காவிட்டால் வெறும் அப்பமும் இரசமும் கிடைக்குமேயன்றி, கிறிஸ்துவின் வரப்பிரசாதங்களை அடையாமல், நமக்கு ஆக்கினையே உண்டாகப் பொசித்துக் குடிக்கிறவர்களாயிருப்போம். நற்கருணை வாங்கும் சமையத்தில் விசுவாசத்தோடே வாங்கி அனுபவிக்கிறது இவ்வளவு அவசியந் தேவையாயிருக்க, குருவானவர் அவனவன் கையில் நற்கருணை அப்பத்தையும் பாத்திரத்தையும் கொடுக்கும்போது, அவர்கள் விசுவாசத்தை ஏவி எழுப்பி கிறிஸ்துவின் மரணபுண்ணியங்களை அவர்களுக்கு உரித்தாக்கத்தக்க சில வார்த்தைகளைச் சொல்லும்படி நியமித்திருக்கிறது. அவர்கள் இந்த வார்த்தைகளைச் சொல்லும்போது சபையாரும் தங்கள் உள்ளத்தில் அவைகளைச் சொல்லிச் சிந்தித்துக்கொள்ளவேண்டும். "உனக்காகக் கொடுக்கப்பட்ட கர்த்தராயிருக்கிற இயேசுக்கிறிஸ்துவின் சரீரமும், உனக்காகச் சிந்தப்பட்ட அவருடைய இரத்தமும் உன் சரீரத்தையும் உன் ஆத்துமத்தையும் நித்தியசீவன் உண்டாகும்படி காக்கக்கடவது" என்று குருவானவர் சொல்லும்போது, அவனவன் யோசித்துக்கொள்ளவேண்டியதாவது: கிறிஸ்துவின் சரீரம் எனக்காகக் கொடுக்கப்பட்டது மெய்யே, அவருடைய இரத்தம் எனக்காகச் சிந்தப்பட்டதும் மெய்யே. நான் நித்தியசீவனை அடையும்படி அவர் எனக்காக மரணமடைந்தார். என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்

மை ஒப்புக்கொடுத்தவர் தம்முடைய சரீரத்தை எனக்கு ஆத்தும ஆகாரமாகத் தருகிறாரே. என் ஆத்துமத்தாகந் தீர்க்கும்படி தம்முடைய இரத்தத்தையும் ஞானபானமாகத் தருகிறாரே. அவருக்குத் தோத்திரமுண்டாவதாக என்று தியானஞ் செய்யவேண்டும். பின்னாலே குருவானவர் சொல்வது, கிறிஸ்து "எனக்காக மரணமடைந்தாரென்று நீ நினைவுகூரும்படி இதை வாங்கிப் பொசித்து, விசுவாசத்தால் உன் இருதயத்திலே நன்றியறிதலோடே அவரை உனக்கு ஆகாரமாக உட்கொள்வாயாக" என்பார். இந்த வார்த்தைகளைப் பார்த்தால் கிறிஸ்துவின் சரீர இரத்தத்தை ஏற்றுக்கொள்ளும் வகை நன்றாய் விளங்கும். எப்படியெனில்: (க) விசுவாசத்தால் வாங்கும்படி கற்பித்திருக்கிறது. வாயானது அப்பத்தை உட்கொள்ளுமேயன்றி ஆவிக்குரிய கிருபையை உட்கொள்ளாது. விசுவாசமே கிறிஸ்துவைக் கண்டு கேட்டு அங்கிகரித்து, வஸ்திரம்போல் உடுத்தி, ஆகாரம்போல் உட்கொள்ளும். விசுவாசமே ஆத்துமத்திற்குக் கையும் கண்ணும் வாயும் ஆனது. ஆதலால் விசுவாசத்தால் வாங்கும்படி சொல்லலாயிற்று. (உ) இருதயத்திலே வாங்கும்படி கற்பித்திருக்கிறது. கிறிஸ்துவின் மாமிச இரத்தம் சரீர போசனமாயிராமல், ஆவிக்குரிய ஆகாரமாயிருப்பதினாலே அப்படிச் சொல்லியிருக்கிறது. (ங) நன்றியறிதலோடே வாங்கும்படி கற்பித்திருக்கிறது. கிறிஸ்துநாதரை விசுவாசத்தால் தரிசித்து, விசுவாசத்தால் அவருடைய சரீர இரத்தத்தை உட்கொண்டு, அவருடைய தயவை ருசித்துப்பார்க்கிறவர்கள் தாங்கள் பெற்ற திவ்விய உபகாரங்களைக்குறித்து நன்றியறிவது அவர்கள் கடமையே.

நற்கருணை பரிமாறும் ஒழுங்கில் நியமித்தபடிக்கும், கர்த்தருடைய கட்டளைப்படிக்கும் விசுவாசத்தால் உங்கள் இருதயத்திலே நன்றியறிதலோடே கிறிஸ்துவின் சரீரத்தையும் இரத்தத்தையும் வாங்கினவர்களாயிருந்தால், அவருடைய வாக்குத்தத்தத்தின்படி அவரே உங்களிடத்தில் வாசமாயிருப்பாரென்றும், உங்களோடே ஒன்றாயிருப்பாரென்றும், விசுவாசிக்கிறதுமன்றி, தேவன் உங்களுக்குப் பாவமன்னிப்பை

அருளிச்செய்தது நிச்சயமென்றும், இனி உங்கள் வாழ்நாட்களெல்லாம் நீங்கள் பரிசுத்தமும் நீதியுமுள்ளவர்களாய் நடக்கும்படி தம்முடைய ஆவியினாலே உங்களுக்கு உதவிசெய்வாரென்றும் நம்பி ஆறுதலுள்ளவர்களாயிருந்து, கிறிஸ்துவின் அன்பினாலே உங்களைத் தேற்றிக்கொண்டு, அபாத்திரரான பாவிகளாகிய உங்களுக்குத் தேவன் தந்தருளின நன்மைகளைக் குறித்து அவரைத் துதித்துத் தோத்தரிக்கவேண்டும்.

எல்லாரும் நற்கருணை வாங்கினதின்பின்பு சில செபங்களும் தோத்திரங்களும் வாசிக்கப்படும். ஏற்றபடி நற்கருணை வாங்கினவர்கள் கிறிஸ்துநாதரோடே ஐக்கியப்பட்டவர்களாயும், அவரைக்கொண்டு பிதாவோடே ஐக்கியம் அடைந்தவர்களாயும், அப்பா பிதாவே என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றவர்களாயும் இருப்பதினாலே கர்த்தருடைய செபம் முதலாவதாக வாசிக்கப்படும்.

அதன்பின்பு வாசிக்கப்படும் முதலாஞ்செபத்தினாலே நாம் செய்த துதிதோத்திரப்பலியை தேவன் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று பிரார்த்திக்கிறதுமல்லாமல், நம்முடைய சரீரங்களையும் ஆத்துமங்களையும் சீவனுள்ள பலியாக அவருக்குப் படைத்தொப்புவிக்கிறதாயுமிருக்கிறது. சகோதரரே, இந்தச் செபம் வாசிக்கப்படும்போது பராபரன் தந்தருளின இரக்கங்களையும் கிறிஸ்து மரித்த அன்பையும் நினைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் பெற்ற உபகாரங்களுக்குப் பதிலாக என்னத்தைக் கொடுத்தாலும் அது போதாதென்றறிந்து, உங்களையே பராபரனுக்கு ஒப்புக்கொடுங்கள்.

விசுவாசிகள் நற்கருணையின் வழியாய் அடையும் நம்பிக்கையையும் ஆறுதலையும் இரண்டாஞ் செபத்தில் காண்பித்திருக்கிறது. நற்கருணையைச் சேரப்போகிறவர்கள் பாவபாரஞ் சுமக்கிறவர்களாயும், பாவ சங்கிலியால் கட்டப்பட்டவர்களாயும் இருந்தாலும், அவர்கள் விசுவாசத்தோடே சேர்ந்தால் கிறிஸ்துவின் கிருபையினுடைய ஐசுவரியத்தைக் கண்டு இளைப்பாறுதலடைவார்கள். பாவமன்னிப்படைந்தோமென்

கிற நிச்சயத்தையும் தெய்வசமாதானம் மெய்ச்சுயாதீனத்தைப் பெற்று ஆறுதலும் ஞானசந்தோஷமும் நிறைந்தவர்களாய்த் தங்கள் வீடுகளுக்குத் திரும்புவார்கள். இதினிமித்தம் கிறிஸ்துவின் கிருபையினாலே இந்த ஆறுதலையும் இந்த நம்பிக்கையையும் அடைந்தவர்கள் இச்செபத்தில் அடங்கியிருக்கிற துதிதோத்திரங்களைச் செலுத்துகிறது தகுதியே.

இரட்சகர் நற்கருணையை ஏற்படுத்தினதின்பின்பு அவரும் அவருடைய சீஷர்களும் ஒரு சங்கீதம் பாடினார்களென்று சொல்லியிருக்கிறது; அதுபோல் மேற்சொல்லிய செபங்களுக்குப்பின்பு ஒரு தோத்திரக்கீர்த்தனம் வாசிக்கப்படும். இந்தப் பரமகீதத்தில் கிறிஸ்துநாதர் பிறப்பின்பேரில் தேவதூதர்கள் பாடின பாட்டை முகவுரையாகச் சொல்லி, பின்பு கிறிஸ்துநாதரைத் தேவ ஆட்டுக்குட்டியாகவும் உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிறவராகவும் காட்டி, அவர் நமக்கிரங்கி நம்முடைய செபங்களை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று மிகவும் உருக்கமாய் வேண்டிக்கொண்டிருக்கிறது. இந்தக் கீர்த்தனத்திலே கர்த்தரை உயர்த்துந் துதியும், நம்மை வெறுக்குந் தாழ்மையும், உன்னதங்களிலிருக்கிற பரமண்டல சேனையுடைய தோத்திரமும், பூமியிலே நொறுங்குண்ட இருதயமுடையவர்களுடைய தவிப்பும் ஒன்றோடொன்று பொருந்துகின்றன. வாசிக்கும்போது பராபரனுடைய புத்திரருக்கும் மோட்சசுதந்தரவாளிகளுக்கும் ஏற்ற களிப்போடும், பாவ அழுக்கால் தீட்டுப்பட்டவர்களுக்கேற்ற துக்கத்தோடும் அதை வாசிக்கவேண்டியது. நாம் இப்படிச் செய்யும்படி விசுவாசத்தின் மூலமாய் நம்முடைய இருதயங்களில் வாசம்பண்ணுகிற இயேசு இரட்சகர் தமது பரிசுத்தஆவியின் உதவியை நமக்கு அருளிச்செய்வாராக.

கடைசியாக ஆசீர்வாதம் கூறப்படும். எல்லாப் புத்திக்கு மேலான தெய்வசமாதானமும், பிதா குமாரன் பரிசுத்தஆவியாகிய திரியேக பராபரனுடைய ஆசீர்வாதமும் நற்கருணை வாங்கினவர்களனைவரோடும் நிலைத்திருக்கவேண்டுமென்று

குருவானவர் பராபரனுடைய நாமத்தினாலே அவர்களை வாழ்த்தச் சபையார் "ஆமன்" என்பார்கள். சகோதரரே, இந்த ஆசீர்வாதத்தைக் கேட்கும்போது நற்கருணை ஒழுங்கிலே நீங்கள் நினைத்துக் கொண்டாடின நன்மைகளையும், விசுவாசத்தினாலே நீங்கள் பெற்றனுபவித்த நன்மைகளையும் நினைத்து, அந்த நன்மைகள் என்றென்றைக்கும் சதாகாலமாக உங்கள் சுதந்தரமாய் நிலைக்கும்படிக்கும், கர்த்தருடைய இராச்சியத்திலே சேருமளவும் நீங்கள் தெய்வசமாதானத்தையும் பரிசுத்த ஆவியின் வரங்களையும் பெற்றுத் தேறும்படிக்கும், கர்த்தருடைய ஆசீர்வாதம் மென்மேலும் உங்களுக்குக் கிடைக்கும்படியாக கருத்தோடே வேண்டிக்கொள்ளுங்கள்.

கர்த்தருக்குட்பட்ட பிரியமானவர்களே, நீங்கள் தேவ நற்கருணை வாங்குகையில் உங்கள் சிந்தைகள் விருப்பங்கள் தியானங்கள் மேற்காட்டிய பரிசுத்த ஒழுங்குக்கு ஏற்றவைகளா? இதைக்குறித்து உங்களைச் சோதித்துப்பாருங்கள். நீங்கள் ஏற்றபடி விசுவாசத்தோடும் ஞான சிந்தையோடும் இச்சாக்கிரமெந்தை வாங்கினால் பிரயோசனம் மிகுதியாயிருக்கும். எப்படியென்றால், அப்பத்தினாலும் திராட்ச இரசத்தினாலும் உங்கள் சரீரம் பெலனடைந்து தேற்றப்படுகிறது போல், கிறிஸ்துவின் சரீரத்தினாலும் இரத்தத்தினாலும் உங்கள் ஆத்துமா பெலனடைந்து தேற்றப்படும். இதுவுமல்லாமல் இந்தப் பொல்லாத உலகத்துக்குரிய பாவங்களுக்கும் மாய்கைக்கும் நீங்கள் விலகி, இருதயத்தினாலும் மனதினாலும் பரமண்டலத்துக்கேறி, அவ்விடத்தில் கிறிஸ்துவோடே சஞ்சரிக்கிறவர்களாயும், கர்த்தருடைய இராச்சியத்தில் சேர்ந்து அவரைத் தரிசித்து, அவரோடே அரசாளுகிறதற்கு ஆயத்தமுள்ளவர்களாயும் இருப்பீர்கள். அந்த இராச்சியத்தில் சாக்கிரமெந்துக்கள் இல்லை. அடையாளங்களும் மறைபொருள்களும் அவ்விடத்தில் இல்லை. அங்கே சேர்ந்தவர்கள் கர்த்தரை முகமுகமாய்த் தரிசித்து, சதாகாலமாய் அவரை வணங்கித் துதித்து அவருடைய மகிமையை அனுபவிப்பார்கள். நீங்களும் அந்த ஆனந்தத்திற்குப் பங்குள்ளவர்களாகும்படி

இயேசு இரட்சகருடைய பாடுகளை நினைத்து, அவருடைய அன்பைக் கொண்டாடி, அவருடைய வரப்பிரசாதங்களைப் பெற்றுக்கொள்ளுகிறதற்காக நியமித்த தேவ நற்கருணையை நீங்கள் அசட்டைசெய்யாமல், அது பரிமாறப்படும்போதெல்லாம் விசுவாசத்தோடே சேர்ந்து தேவபத்தியை மென்மேலும் அடைந்து தேறுவீர்களாக.

பராபரனையும் அவருடைய குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசுகிறிஸ்துவையும் நீங்கள் அறிந்து நேசித்துக் கொண்டேயிருக்கும்படி, எல்லாப் புத்திக்குமேலான தேவ சமாதானம் உங்கள் இருதயத்தையுஞ் சிந்தையையுங் காப்பாற்றக்கடவது. பிதா குமாரன் பரிசுத்தஆவியுமாகிய சர்வ வல்லமைபொருந்திய பராபரனுடைய ஆசீர்வாதமும் உங்களுக்குள்ளேயிருந்து, எப்பொழுதும் உங்களோடே நிலைத்திருக்கக்கடவது. ஆமன்.

# பரிசுத்த நற்கருணை

என்னும்

# கர்த்தருடைய இராப்போசனத்தைப்

பரிமாறும் ஒழுங்கு.

நற்கருணை வாங்காதவர்கள் தேவாலயத்தைவிட்டுப் போனபின்பு, நற்கருணை வாங்கப்போகிறவர்கள் வரிசைவரிசையாயிருந்து ஆயத்தமாகிறவேளையில் அவர்கள் முழங்காற்படியிட்டுத் தனித்துச் செபிக்கத்தக்க செபத்

## தியானம்.

ஆத்துமாவே, இப்பொழுது பராபரனுடைய வாசஸ்தலத்திலும், தேவாதி தேவனுடைய சமூகத்திலும் வந்திருக்கிறாய். பத்தியுள்ள விருந்தர்கூடி கர்த்தருடைய பந்தியை ஆசரிக்கவும், சிலுவையில் அறையுண்ட இயேசுவின் மரணப்பாடுகளை நினைக்கவும் ஆயத்தமாகிறார்கள். பரமராயனுடைய பணிவிடைக்காரனும் இப்பொழுது பரிசுத்தமேசையண்டையில் வந்து, "சகலமும் எத்தனமாயிருக்கிறது, கலியாணத்துக்கு வாருங்கள்" என்று அழைக்கிறதுபோல் நிற்கிறார். "கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஆலயத்தில் இருக்கிறார். பூமியெல்லாம் அவருக்கு முன்பாக மவுனமாயிருக்கக்கடவது" என்று சொல்லியபடி, இப்பந்தியைச் சேருகிறவர்களெல்லாரும் அரவமடக்கிப் பேசாமல் மவுனமாயிருக்கிறார்கள். இப்படி வணக்கமாயிருக்கிறது தகுதியே. ஏனென்றால், தேவசுதனுடைய மரணத்தையும், அவருடைய அதிசய அன்பையும் காட்டி ஞாபகப்படுத்தும் நியமத்தைப்பார்க்கிலும் பயபத்தியுள்ள ஆசாரமுண்டோ? ஆத்துமாவே, நீ இந்தப் பரிசுத்த பந்திக்கு வந்திருக்கையில் மவுனமாயிருந்து, உன்னைச் சோதித்துச் செபத்தியானம்பண்ணிக்கொண்டு, தாழ்மையோடும் பயபத்தியோடும் விசுவாசத்தோடும் சேருவாயாக.

## செபம்.

கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவே, பாவிகளை இரட்சிக்கும்படி உலகத்தில் வந்தவரே, வருத்தப்பட்டுப் பாரஞ்சுமந்துகொள்ளுகிறவர்களை உம்மிடத்தில் வரவழைக்கிறவரே, "இவர் பாவிகளை ஏற்றுக்கொண்டு அவர்

களிடத்தில் போசனம்பண்ணுகிறூர்" என்று இகழப் பட்ட பாவிகளின் நேசனே, என் பாவங்களாகிய பா ரத்தினலே வருத்தப்பட்டு உம்மிடத்தில் வருகிறேன். தேவரீர் என் பாரத்தை இறக்கி எனக்கு இளைப்பாறுத லைத் தாரும். நீர் முற்றுமுடிய இரட்சிக்கிறவராயும், ஞா னம் வல்லமை அன்பு நிறைந்தவராயும் இருப்பதின லே, என் முழு நம்பிக்கையும் என் அடைக்கலமும் நீரே. இப்பொழுது உம்முடைய கட்டளைப்படி உம் மையும் உமது பாடுகளையும் உமது இரட்சணிய அன் பையும் நினைக்கும்படியாக உம்முடைய சமுகத்தில் வந்திருக்கிறேன். எனக்கும் இங்கே கூடிவந்திருக்கிற வர்களெல்லாருக்கும் உம்மைப் பிரசன்னமாக்கி, உமது திருமுகப்பிரகாசத்தை எங்களுக்குக் காண்பித்து, உம து அன்புள்ள ஈவுகளால் எங்களை ஆறுதல்படுத்தும். நாங்கள் அமைந்து தெளிந்து சந்தேகந்தீர்ந்த மனதை யுடையவர்களாகி, இரட்சகர் எங்கள் நடுவிலிருக்கி றூர் என்று விசுவாசித்துக்கொண்டு, சொல்லிமுடியாத மகிமையால் நிறைந்த சந்தோஷமுடையவர்களாயி ருக்கும்படிக்கும், உமது சரீர இரத்தத்தோடு ஐக்கி யப்பட்டு, உம்மோடும் எங்கள் சகோதரரோடும் ஒன் றூயிருக்கும்படிக்கும், தேவரீர் எழுந்தருளிப்போன இடத்தில் நாங்களுஞ் சேர்ந்து உமது மகிமையைக் காண்போமென்கிற நிச்சய நம்பிக்கையுள்ளவர்களா யிருக்கும்படிக்கும், இப்பொழுது எங்களைச் சந்திக்க வந்து, உம்மை வெளிப்படுத்தி, உமது ஆவியின் முதற் பலன்களைத் தந்து எங்களை ஆசீர்வதித்தருளும். உமது மரணபுண்ணியங்களினிமித்தமே. ஆமன்.

# THE ORDER OF THE ADMINISTRATION OF THE LORD'S SUPPER, OR HOLY COMMUNION.

INDIAN INSTITUTE * OXFORD *

## பரிசுத்த நற்கருணை

என்னும்

# கர்த்தருடைய இராப்போசனத்தைப்

## பரிமாறும் ஒழுங்கு.

¶ சனங்கள் முழங்கால்படியிட்டிருக்கக் குருவானவர் பந்தி மேசைக்கு வடபக்கத்தில் நின்று கர்த்தருடைய செபத்தையும், அதற்குப் பின்வருகிற சுருக்கச் செபத்தையும் வாசிக்க வேண்டும்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய இராச்சியம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்றுதாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல், எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குட் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ஆமன்.

### சுருக்கச் செபம்.

எந்த இரகசியமும் மறைவாயிராதபடிக்கு எல்லா இருதயங்களையும் எல்லா விருப்பங்களையும் சோதித்தறிந்திருக்கிற சர்வவல்லமையுள்ள பராபரனே, நாங்கள் தேவரீரிடத்தில்

பரிபூரணமாய் அன்புகூரவும், உமது பரிசுத்த நாமத்தை உத்தமமாய் மகிமைப்படுத்தவும் எங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவினிமித்தம் உமது பரிசுத்தஆவியின் ஏவுதலால் தேவரீர் எங்களிருதயத்தின் சிந்தனைகளைச் சுத்தம்பண்ணியருளும். ஆமென்.

¶ அப்பொழுது குருவானவர் திரும்பிச் சனங்களைப் பார்த்துப் பத்துக்கற்பனைகளையும் தெளிவாய் வாசிக்கவேண்டும். சனங்கள் இன்னும் முழங்கால்படியிட்டிருக்க, ஒவ்வொரு கற்பனையும் வாசித்தபின்பு, பராபரனை நோக்கிப் போனகாலத்தில் அந்தந்தக் கற்பனையை மீறினதற்கு இரக்கத்தையும், வருங்காலத்தில் அதைக் கைக்கொள்ளுகிறதற்குக் கிருபையையும் பின்வருகிறபடி வேண்டிக்கொள்ளவேண்டும்.

குருவானவர்:

பராபரன் திருவுளம்பற்றிச் சொல்லிய வார்த்தைகளாவன: உன் தேவனாகிய கர்த்தர் நாமே. நம்மைத்தவிர உனக்கு வேறே தேவர்களில்லாமற்போவதாக.

சனம்: கர்த்தாவே, எங்களுக்கிரங்கி இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்களிருதயத்தை ஏவியருளும்.

குரு: உயர்ந்த வானத்திலும், தாழ்ந்த பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்காதிருப்பாயாக; நீ அவைகளை நமஸ்கரியாமலும் சேவியாமலுமிருப்பாயாக; ஏனென்றால், உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நாம் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, நம்மைப் பகைக்கிறவர்களைக்குறித்துப் பிதாக்களுடைய பாவங்களைப் பிள்ளைகளிடத்தில் மூன்று நான்கு தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயும், நம்மிடத்தில் அன்புகூர்ந்து நம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு ஆயிரந் தலைமுறைமட்டும் இரக்கஞ்செய்கிறவராயுமிருக்கிறோம்.

சனம்: கர்த்தாவே, எங்களுக்கிரங்கி இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்களிருதயத்தை ஏவியருளும்.

குரு: உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக; ஏனென்றால், கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார்.

சனம்: கர்த்தாவே, எங்களுக்கிரங்கி இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்களிருதயத்தை ஏவியருளும்.

குரு: ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக. ஆறுநாளும் நீ வேலைசெய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம்நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருகஜீவனானாலும், உன் வாசல்களிலிருக்கிற பரதேசியானாலும் யாதொரு வேலையையுஞ் செய்ய வேண்டாம்; ஏனென்றால், கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால், கர்த்தர் ஏழாம்நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்.

சனம்: கர்த்தாவே, எங்களுக்கிரங்கி இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்களிருதயத்தை ஏவியருளும்.

குரு: உன் தேவனாகிய கர்த்தர் எனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக.

சனம்: கர்த்தாவே, எங்களுக்கிரங்கி இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்களிருதயத்தை ஏவியருளும்.

குரு: கொலை செய்யாதிருப்பாயாக.

சனம்: கர்த்தாவே, எங்களுக்கிரங்கி இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்களிருதயத்தை ஏவியருளும்.

குரு: விபசாரம் பண்ணாதிருப்பாயாக.

சனம்: கர்த்தாவே, எங்களுக்கிரங்கி இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்களிருதயத்தை ஏவியருளும்.

குரு: களவு செய்யாதிருப்பாயாக.

சனம்: கர்த்தாவே, எங்களுக்கிரங்கி இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்களிருதயத்தை ஏவியருளும்.

குரு: பிறனுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக.

சனம்: கர்த்தாவே, எங்களுக்கிரங்கி இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்களிருதயத்தை ஏவியருளும்.

குரு: பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக.

சனம்: கர்த்தாவே, எங்களுக்கிரங்கி இந்தப் பிரமாணங்களெல்லாவற்றையும் எங்களிருதயத்தில் பதித்தருளவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம்.

¶ பின்பு, இராசாத்திக்காகச் செய்கிற பின்வரும் இரண்டு செபங்களில் ஒன்று வாசிக்கப்படும். குருவானவர் முன்போல் நின்று சொல்லுகிறதாவது:

## செபம்பண்ணக்கடவோம்.

நித்திய இராச்சியத்தையும் அளவற்ற அதிகாரத்தையுமுடைய சர்வவல்லமைபொருந்திய பராபரனே, திருச்சபையனைத்துக்கும் இரக்கமாயிரும். உம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட ஊழியக்காரியுமாய், எங்கள் இராசாத்தியும் ஆண்டவருமாயிருக்கிற விக்த்தோரியாளேன்பவர் தாம் உம்முடைய பணிவிடைக்காரியென்று உணர்ந்து, உமக்குக் கனமும் மகிமையுமுண்டாகவேண்டுமென்று எல்லாவற்றிலும் விரும்பும்படி அவருடைய இருதயத்தை ஆண்டுகொள்வதுமல்லாமல், நாங்களும் மற்றும் அவருடைய இராச்சியத்தாரெல்லா

ரும் அவருக்கு இருக்கிற அதிகாரம் உம்மாலுண்டானதென்று நினைத்துக்கொண்டு, உமது நிமித்தமே உம்முடைய திருவசனத்திற்கும் நியாயத்திற்கும் ஏற்றவிதமாய் அவருக்குத் தாழ்மையாய்க் கீழ்ப்படிந்து கனம்பண்ண, எங்களுக்குக் கிருபை செய்தருளவேண்டுமென்று, உம்மோடும் பரிசுத்த ஆவியோடும் ஒரே தேவனாக என்றென்றைக்கும் சீவித்தரசாளுகிற எங்கள் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின்மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

அல்லது இதை வாசிக்கவேண்டும்.

சர்வவல்லமையுள்ள நித்திய பராபரனே, இராசாக்களுடைய இருதயங்கள் உம்முடைய ஆளுகைக்குட்பட்டிருக்கின்றனவென்றும், தேவரீர் உமது திவ்விய ஞானத்தின்படி அவைகளைத் திருப்பி நேர்படுத்துகிறீரென்றும், உமது பரிசுத்த வசனத்தினாலே அறிந்திருக்கிறோம். உம்முடைய ஊழியக்காரியுமாய் எங்கள் இராசாத்தியும் ஆண்டவளுமாயிருக்கிற விக்த்தோரியாளென்பவர் தம்முடைய எல்லா யோசனைகளினாலும் வார்த்தைகளினாலும் கிரியைகளினாலும் உமக்குக் கனமும் மகிமையுமுண்டாகவேண்டுமென்று எப்பொழுதும் விரும்பவும், அவர் விசாரணைக்குட்பட்ட உம்முடைய சனத்தை வாழ்விலும் சமாதானத்திலும் தேவபத்தியிலும் காக்கும்படி கருதவும், அவருடைய இருதயத்தை நேர்படுத்தி ஆளவேண்டுமென்று, தாழ்மையாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். இரக்கமுள்ள பிதாவே, உம்முடைய பிரியமான குமாரனும், எங்கள் கர்த்தருமாகிய இயேசுக்கிறிஸ்துவினிமித்தம் இதைக் கட்டளையிட்டருளும். ஆமென்.

¶ பின்பு, அன்று வாசிக்கவேண்டிய சுருக்கச்செபம் சொல்லப்படும். அதை வாசித்தவுடனே குருவானவர் நிருபவாக்கியத்தை வாசிக்கவேண்டும். வாசித்தபின்பு சனங்களெல்லாரும் எழுந்துநிற்க, அவர் சுவிசேஷ வாக்கியத்தையும் வாசிக்கவேண்டும். வாசித்தபின்பு, சனங்கள் இன்னும் நிற்கப் பின்

வருகிற விசுவாசப்பிரமாணத்தைப் பாட அல்லது வாசிக்க வேண்டும்.

வானத்தையும் பூமியையும் காணப்படுகிறதும் காணப் படாததுமான எல்லாவற்றையும் படைத்தவராயிருக்கிற சர் வவல்லமையுள்ள பிதாவாகிய ஒரே தேவனை விசுவாசிக்கி றேன்:

ஒரே கர்த்தருமாய் பராபரனுடைய ஒரே பேறான குமார னுமாயிருக்கிற இயேசுக்கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன்: அவர் சகல உலகங்களும் உண்டாவதற்குமுன்னே தமது பிதாவினாலே செனிப்பிக்கப்பட்டவர்; தெய்வத்தில் தெய்வ மாகவும் சோதியில் சோதியாகவும், மெய்த்தேவனில் மெய்த் தேவனாகவும், உண்டாக்கப்படாமல் செனிப்பிக்கப்பட்ட வர்; பிதாவோடே ஒரேதன்மையுடையவர்; சகலத்தையுமுண் டாக்கினவர்; மனிதராகிய நமக்காகவும் நமக்கு இரட்சிப் புண்டாகவும் பரமண்டலத்திலிருந்திறங்கிப் பரிசுத்தஆவியி னாலே கன்னிமரியாளிடத்திலே சரீரத்தைப் பெற்று மனித னாகி, நமக்காகப் பொந்தியுப்பிலாத்துவின்கீழ்ச் சிலுவையி லறையுண்டு, பாடனுபவித்து, அடக்கம்பண்ணப்பட்டார்: வேதவாக்கியங்களின்படி அவர் மூன்றாம்நாளில் உயிர்த்தெ ழுந்திருந்தார்; அவர் பரமண்டலத்திற்கேறிப் பிதாவின் வல துபாரிசத்தில் வீற்றிருக்கிறார்; அவர் உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க மகிமையோடே திரும்பவரு வார்; அவருடைய இராச்சியத்துக்கு முடிவில்லை.

கர்த்தருமாய்ச் சீவனைக் கொடுக்கிறவருமாய்ப் பிதாவி லும் குமாரனிலும் நின்று புறப்படுகிறவருமாய், பிதாவோ டுங் குமாரனோடுங்கூடத் தொழுது தோத்திரிக்கப்பட்டவரு மாய், தீர்க்கதரிசிகள்மூலமாக உரைத்தவருமாயிருக்கிற பரிசு த்தஆவியையும் விசுவாசிக்கிறேன். ஒரே பொதுவான அப் போஸ்தலத் திருச்சபையுண்டென்றும் விசுவாசிக்கிறேன். பாவமன்னிப்புக்கென்று ஏற்பட்ட ஒரே ஞானஸ்நானத்தை

அறிக்கையிடுகிறேன். மரித்தோர் உயிர்த்தெழுதலும் மறுமைக்குரிய சீவனுமுண்டாகக் காத்திருக்கிறேன். ஆமென்.

¶ பின்பு, பிரசங்கஞ்செய்யவேண்டும். அல்லது திருச்சபையின் அதிகாரத்தினாலே நியமிக்கப்பட்டதும் அல்லது இனி நியமிக்கப்படுவதுமான ஓமலியென்னும் பிரசங்கங்களில் ஒன்றை வாசிக்கவேண்டும்.

¶ பின்பு, குருவானவர் கர்த்தருடைய பந்திமேசைக்குத் திரும்பப்போய்க் காணிக்கை வாசகமென்னும் பின்வருகிற வாக்கியங்களில் தமக்குத் தகுதியென்று தோன்றுகிற ஒன்றையாவது சிலவற்றையாவது வாசிக்கவேண்டும்.*

மனிதர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரமண்டலங்களிலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்துகிறதற்கு உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது. பரி: மத்தே. ௫:

பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைக் கூட்டிவையாதேயுங்கள். அங்கே பூச்சியும் துருவும் கெடுக்கும்; அங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுகிறார்கள். பரமண்டலத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைக் கூட்டிவையுங்கள், அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதுமில்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதுமில்லை. பரி: மத்தே. ௬.

மனிதர் உங்களுக்கு எவைகளைச் செய்யவேண்டுமென்றிருக்கிறீர்களோ, அவைகளையே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் இதுவே. பரி: மத்தே. ௭.

கர்த்தரே கர்த்தரே என்று என்னிடத்தில் சொல்லுகிற ஒவ்வொருவனும் பரலோக இராச்சியத்தில் பிரவேசிப்பதில்லை.

* காணிக்கை கொடுக்கும்போது உள்ளத்திலே சொல்லவேண்டியது: எல்லாம் உம்முடையதே, உம்முடையவைகளில் எடுத்து உமக்கென்று கொடுக்கிறேன். கர்த்தரே, இந்தக் காணிக்கையை ஏற்றுக்கொண்டு சகோதர அன்பையும் உதாரகுணத்தையும் எனக்குக் கட்டளையிடும்.

பரமண்டலத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே அதில் பிரவேசிப்பான். பரி: மத்தே. ௭.

சக்கேயு நின்று கர்த்தருடனே: இதோ கர்த்தரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன்; எவனிடத்திலாவது நான் ஏதையாகிலும் அநியாயமாய் வாங்கியிருந்தால், நாலத்தனையாய்த் திரும்பச் செலுத்துகிறேன் என்றான். பரி: லூக்கா, ௰௯.

எப்பொழுதாகிலும் சொந்தப்பணம் சம்பளமாகக்கொண்டு தண்டிலே சேவிப்பவனார்? திராட்சத்தோட்டம் போட்டு அதின் கனியில் பொசியாதிருப்பவனார்? அல்லது மந்தையை மேய்த்து அதின் பாலில் சாப்பிடாதிருப்பவனார்? க. கொரி. கூ.

ஆத்துமாவுக்குரியவைகளை உங்களுக்கு விதைத்திருந்தோமாகில், சரீரத்துக்குரியவைகளை நாங்கள் உங்களிடத்தில் பெற்றுக்கொள்ளுகிறது பெரிய காரியமா? க. கொரி. கூ.

ஆசாரியப் பணிவிடை செய்கிறவர்கள் தேவாலய வருமானத்தில் பொசிக்கிறார்களென்றும், பீடத்தில் காத்திருக்கிறவர்களுக்குப் பீடத்துக்குரியவைகளில் பங்குண்டென்றும் அறியீர்களா? அப்படியே கர்த்தர் சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்புண்டாகக் கட்டளையிட்டிருக்கிறார். க. கொரி. கூ.

சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான்; பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். அவனவன் துக்கத்தோடேயாவது, கட்டாயத்தினாலேயாவது கொடாமல், மனதில் நியமித்தபடி கொடுக்கக்கடவன். சந்தோஷமாய்க் கொடுக்கிறவனிடத்தில் பராபரன் அன்பாயிருக்கிறார். ௨. கொரி. கூ.

தேவவசன உபதேசத்தைக் கேட்கிறவன் தனக்குள்ள சகல நன்மைகளிலும் உபதேசிக்கிறவனுக்குப் பங்குகொடுக்கக்கடவன். மோசம்போகாதேயுங்கள்; பராபரன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார். மனிதன் விதைக்கிறதெதுவோ, அதையே அறுப்பான். கலாத்தியர், சு. ௭.

நமக்குச் சமையமிருக்கையில், யாவருக்கும் விசேஷமாய் விசுவாசிகளாகிய வீட்டாருக்கும் நன்மைசெய்யக்கடவோம். கலாத்தியர், சு.

போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபத்தி பெரிய ஆதாயம். ஏனெனில், நாம் இவ்வுலகத்தில் ஒன்றும் கொண்டு வந்ததில்லை, உலகத்திலிருந்து ஒன்றும் கொண்டுபோகவுங் கூடாதே. க. தீமோ. சு.

இம்மையிலே ஐசுவரியமுள்ளவர்கள் உதாரமாய்க் கொடுக்கவும், உபகாரிகளாயிருக்கவும், நித்தியசீவனைப் பிடித்துக் கொள்ளத்தக்கதாக வருங்காலத்துக்கென்று நல்ல அஸ்திபாரத்தைத் தங்களுக்குப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கற்பிப்பாயாக. க. தீமோ. சு.

உங்கள் கிரியையும், பரிசுத்தவான்களுக்கு நீங்கள் ஊழியஞ்செய்ததினாலுஞ் செய்துவருகிறதினாலும் தம்முடைய நாமத்துக்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறக்கப் பராபரன் அநீதியுள்ளவரல்ல. எபிரே. சு.

நன்றுசெய்யவும் உபகாரங்கொடுக்கவும் மறவாதேயுங்கள். இப்படிப்பட்ட பலிகளில் பராபரன் பிரியமாயிருக்கிறார். எபிரே. ல௩.

ஒருவன் உலக சீவனம் உடையவனாயிருக்கத் தன் சகோதரனுக்குக் குறைவுண்டென்று கண்டு, தன்னிருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால் அவனுக்குள்ளே பராபரனுடைய அன்பு எப்படி நிலைக்கும். க. யோவான், ௩.

உன் ஆஸ்திகளில் தருமஞ்செய்; எந்த ஏழைக்கும் உன் முகத்தை மறையாதே; அப்பொழுது கர்த்தர் உனக்குத் தமது முகத்தை மறைக்கமாட்டார். தோபித்து. ச.

உன் திராணிக்குத்தக்கதாய் நீ இரக்கமுள்ளவனாயிரு. உனக்கு மிகுதியிருந்தால் மிகுதியாய்க்கொடு, உனக்குக் கொஞ்சமிருந்தால் அந்தக் கொஞ்சத்தில் சந்தோஷமாய்க் கொடுக்கச் சாக்கிரதையாயிரு. இப்படிச் செய்வதினாலே அவசரம் வருங் காலத்துக்கு நற்பலனைக் கூட்டிச் சேர்க்கிறாய். தோபித்து. ச.

ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன்கொடுக்கிறான். அவன் கொடுக்கும் உபகாரம் அவனுக்குத் திரும்பக் கொடுக்கப்படும். நீதிமொழி, ௰௯.

வியாதியுள்ளவனேயும் ஏழையையும் சிந்திக்கிறவன் பாக்கியவான். தீங்குவரும் நாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார். சங்கீதம், ௪௧.

¶ மேலெழுதிய வாக்கியங்களை வாசிக்கையில், உதவிக்குருக்களாவது, கோவில் காரியக்காரராவது, இந்தக் காரியத்துக்கென்று நியமிக்கப்பட்ட மற்றவர்களாவது அந்தச் சேகரச்சபையாரால் சவதரித்த தகுதியான பாத்திரத்தைக்கொண்டு ஏழைகளுக்காகத் தருமங்களையும், மற்றக் காணிக்கைகளையும் சனங்களிடத்தில் வாங்கிக் குருவானவரிடத்தில் வணக்கமாய்க் கொண்டுபோக, குருவானவர் அதை ஏற்றுக்கொண்டு தாழ்மையாய்த் திருமேசையில் படைத்துவைக்கவேண்டும்.

¶ நற்கருணை பரிமாறுகிறதாயிருந்தால், அப்பொழுது போதுமென்று குருவானவருக்குத் தோன்றுகிற அப்பத்தையும் திராட்சப்பழ இரசத்தையும் அவர் மேசையிலே வைக்கவேண்டும். அப்படிச் செய்தபின்பு, குருவானவர் சொல்லுகிறதாவது:

இவ்வுலகத்தில் போராடுகிற கிறிஸ்துசபையனைத்துக்கும்

சீருண்டாகச்

## செபம்பண்ணக்கடவோம்.

எல்லா மனிதருக்காகவும் செபங்களையும் விண்ணப்பங்களையுஞ் செய்து தோத்திரங்களைச் செலுத்தவேண்டுமென்று, உமது பரிசுத்த அப்போஸ்தலனைக்கொண்டு கற்பித்தருளின சர்வவல்லமையும் நித்தியசீவனுமுள்ள பராபரனே, உமது தேவமகத்துவத்துக்கு நாங்கள் செலுத்துகிற தருமங்களையும் காணிக்கைகளையும் தேவரீர் இரக்கமாய் ஏற்றுக்கொண்டு, நாங்கள் செய்கிற செபங்களைக் கிருபையாய்க் கேட்டருளவேண்டுமென்றும், எங்குமுள்ள திருச்சபைக்கு உண்மையும் ஐக்கியமும் ஏகசிந்தையும் பொருந்திய மனதை இடைவிடா

மல் அருளிச்செய்யவேண்டுமென்றும் மனத்தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். உம்முடைய திருநாமத்தை அறிக்கையிடுகிற யாவரும் உமது பரிசுத்த வசனத்தின் சத்தியத்தைக்குறித்து இசைந்தமனதுள்ளவர்களாயிருந்து, ஐக்கியத்திலும் தேவபத்தியுள்ள அன்பிலும் நிலைத்து வாழ்ந்திருக்கும்படி செய்தருளும். கிறிஸ்தவர்களான இராசாக்கள் பிரபுக்கள் அதிகாரிகளெல்லாரையும் இரட்சித்துக் காப்பாற்றுகிறதுமல்லாமல், விசேஷமாய் எங்களைத் தேவபத்தியோடும் சமாதானத்தோடும் ஆளுகிறதற்கு உம்முடைய பணிவிடைக்காரியாகிய எங்கள் இராசாத்தியாயிருக்கிற விக்த்தோரியாள் என்பவளை இரட்சித்துக் காப்பாற்றவேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளுகிறோம். அவருடைய ஆலோசனைக் கர்த்தாக்கள் அனைவரும், அவரால் அதிகாரம் பெற்றிருக்கிற மற்றெல்லாரும் பட்சபாதமில்லாமல் உண்மையாய் நீதியைச் செலுத்தித் துன்மார்க்கத்தைத் தண்டனையினாலே அடக்கி, உமது சத்திய வேதத்தையும் சன்மார்க்கத்தையும் நிலைப்படுத்திவரும்படி அவர்களுக்குக் கிருபைசெய்தருளும். பரமபிதாவே, கண்காணிமார் குருமாரெல்லாரும் தங்கள் நடக்கையினாலும் போதகத்தினாலும் சத்தியமும் சீவனுமுள்ள உமது வசனத்தைப் பிரசித்தப்படுத்தி, உமது பரிசுத்த சாக்கிரமெந்துக்களை ஒழுங்காயும் செம்மையாயும் பரிமாற அவர்களுக்குக் கிருபையைத் தந்தருளி, உம்முடைய சனங்களெல்லாரும், விசேஷமாய் இவ்விடத்தில் கூடிவந்திருக்கிற இந்தச் சபையாரும் சாந்த இருதயத்தோடும் தகுந்த வணக்கத்தோடும், உமது பரிசுத்த வசனத்தைக் கேட்டு உட்கொண்டு, தங்கள் வாழ்நாளெல்லாம் பரிசுத்தமும் நீதியுமுள்ளவர்களாய் உமக்கு ஊழியஞ்செய்ய அவர்களுக்கும் உமது பரமகிருபையைத் தந்தருளும். நிலையில்லாத இந்தச் சீவகாலத்தில் துன்பம் துக்கம் வருமை வியாதி முதலான உபத்திரவங்களால் வருத்தப்படுகிற யாவரையும் உமது தயவினாலே தேற்றி ஆதரிக்கவேண்டுமென்று

மனத்தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். அல்லாமலும், உம்மிடத்தில் விசுவாசமும் பயபத்தியுமுள்ளவர்களாய்ச் சிவித்துப்போன உம்முடைய ஊழியக்காரரெல்லாருக்காகவும் நாங்கள் உம்முடைய பரிசுத்த நாமத்தைத் துதித்து, அவர்களோடுங்கூட நாங்களும் உமது பரம இராச்சியத்தை அனுபவிக்கத்தக்கதாக, அவர்கள் காட்டிய நல்மாதிரியைப் பின்பற்றும்படி, எங்களுக்குக் கிருபைசெய்யவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம். பிதாவே, எங்கள் ஒரே மத்தியஸ்தரும் காரியக்கர்த்தருமாகிய இயேசுக்கிறிஸ்துவினிமித்தம் இப்படிச் செய்தருளும். ஆமன்.

¶ *நற்கருணையைப் பரிமாறும்நேரத்தில் அதற்குச் சேருகிறவர்கள் பரிசுத்த சாக்கிரமெந்தைப் பெற்றுக்கொள்ளும்படி ஒழுங்காயிருக்க, குருவானவர் சொல்லவேண்டிய பிரசங்கமாவது:*

கர்த்தருக்குட்பட்ட பிரியமானவர்களே, நம்முடைய இரட்சகராகிய கிறிஸ்துவின் சரீரத்தையும் இரத்தத்தையும் பரிசுத்த நற்கருணையில் வாங்க மனமாயிருக்கிற நீங்கள் அந்த அப்பத்தைப் பொசிக்கவும், அந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணவும் துணிந்து சேராமல், தங்களைக் கூர்மையாய்ச் சோதித்தறிந்து சேரவேண்டுமென்று பரிசுத்த பவுல் எல்லாருக்கும் புத்திசொல்லியிருக்கிறதை நினைத்துக்கொள்ளவேண்டும். பாவத்தினிமித்தம் மெய்யாய்த் துக்கப்படுகிற இருதயத்தோடும், உயிருள்ள விசுவாசத்தோடும் நாம் இந்தப் பரிசுத்த சாக்கிரமெந்தை வாங்கினால் பிரயோசனம்பெரிதாயிருக்கும். எப்படியெனில், நாம் அப்பொழுது ஞானப்பிரகாரமாகக் கிறிஸ்துவின் மாமிசத்தைப் பொசித்து, அவருடைய இரத்தத்தையும் பானம்பண்ணுவோம்; கிறிஸ்து நமக்குள்ளே வாசமாயிருக்க, நாம் அவருக்குள்ளே வாசமாயிருப்போம். கிறிஸ்து நம்மோடே ஒன்றாயிருக்க, நாம் அவரோடே ஒன்றாயிருப்போம். அப்படியே, இந்தச் சாக்கிரமெந்தை நாம் அபாத்திரராய் வாங்கினால் மோசமும் பெரிதாயிருக்கும். எப்படியெனில், நாம் அப்

பொழுது நம்முடைய இரட்சகராகிய கிறிஸ்துவின் சரீரத்துக்கும் இரத்தத்துக்குங் குற்றமுள்ளவர்களாகி, கர்த்தருடைய சரீரத்தை எண்ணாததினாலே நமக்கு ஆக்கினைத்தீர்ப்புண்டாகப் போசித்துப் பானம்பண்ணி, நமக்கு விரோதமாகத் தேவகோபத்தை மூட்டிப் பற்பல வியாதியினாலும் அநேகவிதமான மரணத்தினாலும் நம்மை உபாதிக்கும்படி அவனை ஏவுகிறவர்களாயிருப்போம். ஆகையால் சகோதரரே, கர்த்தராலே ஆக்கினைத்தீர்ப்படையாதபடிக்கு நீங்களே உங்களைப் பரிசோதித்து, நீங்கள் செய்த பாவங்களுக்காக உண்மையாய் மனஸ்தாபப்பட்டு, நம்முடைய இரட்சகராகிய கிறிஸ்துவை உயிரும் உறுதியுமுள்ள விசுவாசத்தினாலே பற்றிக்கொண்டு, உங்கள் நடக்கையைச் சீர்திருத்தி எல்லா மனிதரோடும் சிநேகமாயிருங்கள். இப்படிச் செய்தால், இந்தப் பரிசுத்த இரகசியங்களை வாங்கப் பாத்திரராயிருப்பீர்கள். எல்லாவற்றிலும் முக்கியமாக, இருளிலும் மரணநிழலிலுங்கிடந்த நிர்ப்பாக்கியமுள்ள பாவிகளாகிய நம்மைத் தேவபுத்திரராக்கி நித்தியசீவ நிலைமைக்கு உயர்த்தும்படியாகச் சிலுவையிலே மரணமடையுமளவும் தம்மைத் தாழ்த்திக்கொண்ட தேவனும் மனிதனுமாயிருக்கிற நம்முடைய இரட்சகராகிய கிறிஸ்துவானவர் பாடுபட்டு மரணமடைந்ததினாலே உலகத்தை மீட்டுக்கொண்டதினிமித்தம், பிதா குமாரன் பரிசுத்தஆவியுமாகிய பராபரனுக்கு நீங்கள் தாழ்மையாய் முழு இருதயத்தோடே தோத்திரஞ் செலுத்தவேண்டும்; நம்முடைய ஆண்டவரும் ஒரே இரட்சகருமாகிய இயேசுக்கிறிஸ்து நமக்காக மரணமடைந்ததினாலே வெளிப்படுத்திய ஒப்பில்லாத மகா அன்பையும் அருமையான தமதிரத்தத்தினாலே நமக்காகச் சம்பாதித்திருக்கிற எண்ணிமுடியாத உபகாரங்களையும் நாம் எப்பொழுதும் நினைவுகூரும்படி, நமக்கு என்றைக்கும் மிகுந்த ஆறுதலுண்டாக அவர் இந்தப் பரிசுத்த இரகசியங்களை ஏற்படுத்தி, தமது அன்புக்கு அத்தாட்சியாகவும், தமது மரணத்துக்கு என்றுமுள்ள ஞாபகமாகவும் இவைகளை நியமித்திருக்கிறார். ஆகையால், அவருக்கும் பிதாவுக்கும் பரிசுத்தஆவிக்கும் நமது கடமையின்

படியே இடைவிடாமல் தோத்திரஞ்செலுத்தி, அவருடைய பரிசுத்த சித்தத்திற்கும் பிரியத்திற்கும் முற்றுங் கீழ்ப்படிந்து, நமது வாழ்நாளெல்லாம் மெய்யான பரிசுத்தத்தோடும் நீதியோடும் அவருக்கு ஊழியஞ்செய்யக் கருத்துள்ளவர்களாயுமிருக்கக்கடவோம். ஆமன்.

¶ பின்னும் குருவானவர் பரிசுத்த நற்கருணைக்குச் சேருகிறவர்களுக்குச் சொல்லுகிறதாவது:

உங்கள் பாவங்களினிமித்தம் முழு இருதயத்தோடே உண்மையாய் மனஸ்தாபப்பட்டுப் பிறரோடே அன்பாயும் சிநேகமாயுமிருந்து, இனிப் பராபரனுடைய கற்பனைகளைக் கைக்கொண்டு, புதிதாக்கப்பட்டவர்களாய் அவர் பரிசுத்த மார்க்கத்தில் நடக்கவேண்டுமென்று தீர்மானித்திருக்கிற நீங்கள் விசுவாசத்தோடே சேர்ந்து, உங்களுக்கு ஆறுதலுண்டாக இந்தப் பரிசுத்த சாக்கிரமெந்தை வாங்கிக்கொள்ளுங்கள். அதற்காகப் பணிவாய் முழங்காற்படியிட்டுச் சர்வவல்லமையுள்ள பராபரனை நோக்கி உங்கள் பாவங்களை மனத்தாழ்மையாய் அறிக்கையிடுங்கள்.

¶ அப்பொழுது, பரிசுத்த நற்கருணையைப் பெறவேண்டுமென்றிருக்கிற அனைவருடைய நாமத்தினாலும் குருமாரில் ஒருவர் பின்வருகிற பொதுவான பாவ அறிக்கையைச் சொல்லவேண்டும். அவரும் சனங்களெல்லாரும் தாழ்மையாய் முழங்காற்படியிட்டுச் சொல்வதாவது:

சர்வவல்லமையுள்ள பராபரனே, எங்கள் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் பிதாவே, சகலத்தையும் சிருட்டித்தவரே, எல்லா மனிதருக்கும் நியாயாதிபதியே, தேவரீருடைய நீதியுள்ள உக்கிரகோபாக்கினை எங்கள்மேல் வரத்தக்கதாக, நாங்கள் அடிக்கடி நினைவினாலும் வார்த்தையினாலும் கிரியையினாலும் உம்முடைய திவ்விய மகத்துவத்துக்கு விரோதமாய் ஆங்காரித்துச் செய்த பலவிதமான எங்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் அறிக்கையிட்டுப் புலம்புகிறோம். இந்தக் குற்றங்களைக்குறித்து நாங்கள் உண்மையாய் மனஸ்தாபப்பட்டு முழுமனதோடே துக்கப்படுகிறோம்; அவைகளை நினைத்து

வேதனைப்படுகிறோம்; அவைகள் எங்களாலே சுமக்கப்படாத பாரம். எங்களுக்கு இரங்கும், மிகுந்த இரக்கமுள்ள பிதாவே, எங்களுக்கிரங்கும். நாங்கள் செய்த யாவையும் உமது குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசுக்கிறிஸ்துவினிமித்தம் எங்களுக்கு மன்னித்து, நாங்கள் புதிதாக்கப்பட்டவர்களாய் இனி எப்பொழுதும் உமக்கு ஊழியஞ்செய்து, உமக்குப் பிரியமாய் நடந்துவரும்படி உமது நாமத்துக்குக் கனமும் மகிமையுமுண்டாக, எங்கள் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் மூலமாய்க் கட்டளையிட்டருளும். ஆமன்.

¶ அப்பொழுது, கண்காணியாராவது, அவரில்லாவிட்டால் குருவானவராவது எழுந்துநின்று சனங்கள் முகமாய்த் திரும்பிப் பின்வரும் பாவவிமோசன அறிக்கையைக்கூறி அறிவிக்க வேண்டும்.

உண்மையான குணப்படுதலோடும், மெய்யான விசுவாசத்தோடும் தம்மிடத்திற்கு மனந்திரும்புகிற யாவருக்கும் பாவமன்னிப்பை அருளிச்செய்வோமென்று மிகுந்த இரக்கமாய் வாக்குத்தத்தஞ்செய்திருக்கிற நம்முடைய பரமபிதாவாகிய சர்வவல்லமையுள்ள பராபரன் எங்கள் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினிமித்தம் உங்களுக்கு இரங்கி, உங்கள் பாவங்களெல்லாவற்றையும் மன்னித்து, அவைகளினின்று உங்களை இரட்சித்துச் சகல நன்மையிலும் உங்களை உறுதிப்படுத்தி நிலைநிறுத்தி, உங்களை நித்தியசீவனில் சேர்த்துக்கொள்வாராக. ஆமன்.

¶ பின்பு குருவானவர் சொல்வது:

தம்மிடத்தில் உண்மையாய் மனந்திரும்புகிற யாவருக்கும் ஆறுதலுண்டாக நம்முடைய இரட்சகராகிய கிறிஸ்து திருவுள்ளம்பற்றின வார்த்தைகளைக் கேளுங்கள்.

வருத்தப்பட்டுப் பாரஞ்சுமந்துகொள்ளுகிறவர்களாகிய நீங்களெல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் செய்வேன். பரி. மத். ௰க. உ௮.

தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிற எவ

னும் கெட்டுப்போகாமல், நித்தியசீவனை அடைவதற்குப் பராபரன் அவரைத் தந்து இவ்வளவாய் உலகத்தாரில் அன்பு கூர்ந்தார். பரி. யோவான், ௩. ௰௬.

பரிசுத்த பவுல் சொல்லியிருக்கிறதையும் கேளுங்கள்:

பாவிகளை இரட்சிக்கக் கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தாரென்கிற வார்த்தை உண்மையாயும் எல்லாரும் அங்கிகரிக்கத் தக்கதாயுமிருக்கிறது. ௧. தீமோ. ௧. ௰௫.

பரிசுத்த யோவான் சொல்லியிருக்கிறதையும் கேளுங்கள்:

ஒருவன் பாவஞ்செய்தால், நீதிபரனுயிருக்கிற இயேசுக் கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்துபேசுகிறவராயிருக்கிறார். நம்முடைய பாவங்களை நிவிர்த்திசெய்கிற பலி அவரே.

¶ பின்னும் குருவானவர் சொல்வதாவது:

உங்கள் இருதயத்தை உயர்த்துங்கள்.

மறுமொழி. எங்களிருதயத்தைக் கர்த்தரிடத்தில் உயர்த்துகிறோம்.

குரு: நம்முடைய கர்த்தராகிய பராபரனுக்குத் தோத்திரஞ் செலுத்தக்கடவோம்.

மறுமொழி. அப்படிச் செய்வது தகுதியும் நீதியுமாயிருக்கிறது.

¶ அப்பொழுது குருவானவர் நற்கருணை மேசையிடமாய்த் திரும்பிச் சொல்வதாவது:

கர்த்தாவே, *பரிசுத்த பிதாவே, சர்வவல்லமையுள்ள நித்திய பராபரனே! நாங்கள் எக்காலத்திலும் எவ்விடத்திலும் தேவரீருக்குத் தோத்திரஞ்செலுத்துகிறது மிகவும் தகுதியாயும் நீதியாயும் எங்களுக்கு விசேஷித்த கடமையாயுமிருக்கிறது.

¶ அந்த நாளுக்கு விசேஷித்த முகவுரை இருக்குமாகில், அதை வாசிக்கவேண்டும். இல்லாவிட்டால், பின்வருவதை உடனே சொல்லவேண்டியதாவது:

ஆதலால் தூதரோடும், பிரதான தூதரோடும், பரமசபை

* [பரிசுத்த பிதாவே] என்கிற வார்த்தைகளைத் திரித்துவ ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கப்படாது.

அனைத்தோடும் நாங்களும் உமது மகிமையுள்ள நாமத்தைப் புகழ்ந்து, மேன்மைப்படுத்தி, சேனைகளின் கர்த்தராகிய பராபரனே, பரிசுத்தர்! பரிசுத்தர்! பரிசுத்தர்! வானமும் பூமியும் உமது மகிமையால் நிறைந்தன! உன்னதமானவராகிய தேவரீருக்கே மகிமையுண்டாவதாக என்று இடைவிடாமல் உம்மைத் தோத்திரிக்கிறோம். ஆமென்.

## விசேஷித்த முகவுரைகள்.

கிறிஸ்து பிறந்த நாளுக்கும்,
பின்வரும் ஏழு நாட்களுக்குமுரிய முகவுரை.

சகல பாவமும் நீங்க எங்களைச் சுத்தம்பண்ணுவதற்குப் பரிசுத்தஆவியின் கிரியையினாலே பாவக்கறையில்லாமல் தம்முடைய தாயாராகிய கன்னிமரியாளுடைய தன்மையில் மெய்மனிதனாக இக்காலத்தில் பிறக்கும்படி, உம்முடைய ஒரே குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவைத் தந்தருளினபடியினாலே விசேஷமாய்த் தோத்திரஞ்செலுத்தக் கடனாளிகளாயிருக்கிறோம். ஆதலால் தூதரோடும், ௱.

கிறிஸ்து உயிர்த்தெழுந்த பண்டிகைக்கும், பின்வரும்
ஏழுநாட்களுக்குமுரிய முகவுரை.

விசேஷமாக, உம்முடைய குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசுக்கிறிஸ்து மகிமையோடே உயிர்த்தெழுந்ததினிமித்தம் உம்மைத் துதிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். எங்களுக்காகப் பலியிடப்பட்டு உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்த்த மெய்ப் பஸ்கா ஆட்டுக்குட்டி அவரே. தாம் அடைந்த மரணத்தினாலே அவர் மரணத்தை அழித்து உயிர்த்தெழுந்ததினாலே எங்களுக்கு நித்தியசீவனைத் திரும்பவும் தந்தருளினார். ஆதலால் தூதரோடும், ௱.

கிறிஸ்து பரமண்டலத்துக்கேறின நாளுக்கும், பின்வரும் ஏழுநாட்களுக்குமுரிய முகவுரை.

சிறந்த மகிமையோடே உயிர்த்தெழுந்து, தமது அப்போஸ்தலரெல்லாருக்கும் தரிசனையாகிப் பிரத்தியட்சமாக அவர்கள் கண்களுக்குமுன்பாகப் பரமண்டலத்துக்கேறி, தாம் இருக்கிற இடத்திலே நாங்களும் ஏறவும் தம்மோடேகூட (மோட்ச) மகிமையிலே ஆளுகைசெய்யவும் எங்களுக்காக ஸ்தலத்தைப் பிரயத்தினஞ்செய்யப் போயிருக்கிற உம்முடைய மிகவும் பிரியமான குமாரனாகிய எங்கள் கர்த்தர் இயேசுக்கிறிஸ்துவினிமித்தம் உமக்குத் தோத்திரஞ்செலுத்தக் கடனாளிகளாயிருக்கிறோம். ஆதலால் தூதரோடும், ௸.

பரிசுத்த ஆவியின் பண்டிகைக்கும், பின்வரும் ஆறுநாட்களுக்குமுரிய முகவுரை.

எங்கள் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து அருளிச்செய்த நிச்சயமான வாக்குத்தத்தத்தின்படியே பரிசுத்தஆவியானவர் இக்காலத்தில் பலத்தக் காற்றைப்போல் வானத்திலிருந்து சடுதியாய் வரும் பெரிய சத்தத்தோடு அக்கினி நாவுள்ள ரூபமாயிறங்கி அப்போஸ்தலர்மேல் தங்கியிருந்து, அவர்களுக்குப் போதித்துச் சகல சத்தியத்திலும் நடத்தி, அவர்கள் எல்லாத் தேசத்தாருக்கும் சுவிசேஷத்தை எப்பொழுதும் பிரசங்கிக்கத்தக்கதாகப் பற்பல பாஷைகளைப் பேசும் வரத்தையும் தயிரியமும் பத்திவயிராக்கியமுமுள்ள சிந்தையையுங் கட்டளையிட்டதுமல்லாமல், அதினாலே நாங்கள் அந்தகாரத்துக்கும் பொய்யான மார்க்கத்துக்கும் விலகி, சுத்த வெளிச்சத்திலும் உம்மையும் உம்முடைய குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவையும் அறிகிற மெஞ்ஞானத்திலும் சேரும்படி, கிருபைசெய்ததினிமித்தம் உம்மைத் துதிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். ஆதலால் தூதரோடும், ௸.

திரித்துவத்தின் பண்டிகைநாளுக்கே உரிய முகவுரை.

ஒருவராயிராமல் ஒரே தத்துவமுடைய மூவருமாயிருக்கிற

ஒரே தேவனும், ஒரே கர்த்தருமாகிய உமக்குத் தோத்திரஞ் செலுத்தக் கடனாளிகளாயிருக்கிறோம். பிதாவினுடைய மகிமை இவ்விதமென்று நாங்கள் விசுவாசிக்கிறதுபோல், குமாரனுடைய மகிமையும் பரிசுத்தஆவியினுடைய மகிமையும் யாதொரு வித்தியாசமும் குறைவுமின்றி அவ்விதமேயென்று விசுவாசிக்கிறோம். ஆதலால் தூதரோடும், ௸.

¶ மேற்சொல்லிய முகவுரைகளில் ஒன்றை வாசித்தவுடனே பாட அல்லது சொல்லவேண்டியதாவது:

ஆதலால் தூதரோடும், பிரதான தூதரோடும், பரமசபை அனைத்தோடும் நாங்களும் உமது மகிமையுள்ள நாமத்தைப் புகழ்ந்து, மேன்மைப்படுத்தி, சேனைகளின் கர்த்தராகிய பராபரனே, பரிசுத்தர்! பரிசுத்தர்! பரிசுத்தர்! வானமும் பூமியும் உமது மகிமையால் நிறைந்தன! உன்னதமானவராகிய தேவரீருக்கே மகிமையுண்டாவதாக என்று இடைவிடாமல் உம்மைத் தோத்திரிக்கிறோம். ஆமென்.

¶ அப்பொழுது குருவானவர் கர்த்தருடைய இராப்போசன மேசையருகே முழங்காற்படியிட்டு நற்கருணை வாங்குகிற எல்லாருடைய நாமத்தினாலும் சொல்லவேண்டிய செபமாவது:

இரக்கமுள்ள கர்த்தாவே, எங்கள் சுயநீதியை நம்பி நாங்கள் உம்முடைய பந்தியில் சேரத்துணியாமல், தேவரீருடைய அநேகவிதமான மிகுந்த இரக்கத்தையே நம்பிச் சேருகிறோம். உம்முடைய மேசையின் கீழ்விழும் துணிக்கைகளையும் பொறுக்கிக்கொள்ள நாங்கள் பாத்திரரல்ல; ஆனாலும் தேவரீர் மாறாமல் எப்போதும் இரக்கஞ்செய்கிற லட்சணமுடைய ஆண்டவராயிருக்கிறீர். ஆகையால் கிருபையுள்ள கர்த்தாவே, உம்முடைய அருமையான குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவின் சரீரத்தால் எங்கள் பாவமுள்ள சரீரம் சுத்தமாகி, அவருடைய விலையுயர்ந்த இரத்தத்தால் எங்கள் ஆத்துமாவும் கழுவப்படுவதற்கும், எப்பொழுதும் நாங்கள் அவருக்குள்ளும் அவர் எங்களுக்குள்ளும் வாசமாயிருப்பதற்கும், அவருடைய சரீரத்

தைப் புசித்து, அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணக் கிருபைசெய்தருளும். ஆமென்.

¶ குருவானவர் நற்கருணை மேசைக்கு முன்னே நின்று சனங்கள் காணத் தடையில்லாமல் மரியாதையாய் அப்பத்தைப் பிட்கவும், கையிலே பாத்திரத்தை எடுத்துக்கொள்ளவுந்தக்கதாக அப்பத்தையும் திராட்ச இரசத்தையும் ஒழுங்காய் வைத்துச் சொல்லவேண்டிய பிரதிஷ்டைச் செபமாவது:

சிலுவையில் மரணமடைந்து எங்களை மீட்டுக்கொள்ளும்படி, எங்களுக்கு உருக்கமாயிரங்கி உம்முடைய ஒரே குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவைத் தந்தருளின எங்கள் பரமபிதாவாகிய சர்வவல்லமையுள்ள பராபரனே, அவர் ஒரேதரந் தம்மைத்தாமே ஏகபலியாக ஒப்புக்கொடுத்துச் சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்திசெய்வதற்குப் போந்ததும் நிறைவும் பூரணமுமான பலியையும் காணிக்கையையும் பரிகாரத்தையும் செலுத்தினதுமல்லாமல், அருமையான தமது மரணத்தை என்றைக்கும் நினைப்பூட்டும் ஞாபகத்தை ஏற்படுத்தி, தாம் திரும்ப வருமளவும் நாங்கள் அதை அனுசரித்துவரும்படி தமது சுவிசேஷத்தில் கட்டளையிட்டிருக்கிறாரே. இரக்கமுள்ள பிதாவே, எங்கள் செபத்தைக் கேட்டருளவேண்டுமென்றும், உம்முடைய குமாரனும் எங்கள் இரட்சகருமாகிய இயேசுக்கிறிஸ்து கட்டளையிட்ட பரிசுத்த ஏற்பாட்டின்படி அவருடைய மரணத்தையும் பாடுகளையும் நினைவுகூர்ந்து, உமது சிருட்டிகளாகிய இந்த அப்பத்தையும் திராட்ச இரசத்தையும் வாங்குகிற நாங்கள் மிகவும் பரிசுத்த அவருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் பெற்றனுபவிக்கும்படி, கிருபைசெய்தருளவேண்டுமென்றும் மிகவும் தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். 'அவர் தாம் காட்டிக்கொடுக்கப்பட்டஅன்றுஇராத்திரியிலே, அப்பத்தை எடுத்துக்கொண்டு, *தோத்திரம்பண்ணி, †அதைப் பிட்டுச் சீஷர்களுக்குக் கொடுத்து, நீங்கள்வாங்கிப் பொ

* இதைச் சொல்லுகையில் குருவானவர் அப்பம்வைத்திருக்கிறதட்டைக் கையில் எடுக்கவும்.

† இப்பொழுது அப்பத்தைப் பிட்கவும்.

சியுங்கள்; ‡ இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரம். என்னை நினைவுகூரும்படிக்கு இப்படிச் செய்யுங்களென்றார். அப்படியே இராப்போசனம்பண்ணினபின்பு, § அவர் பாத்திரத்தையும்எடுத்துக்கொண்டுதோத்திரம்பண்ணி அவர்களுக்குக் கொடுத்து நீங்களெல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; ‖ இது பாவமன்னிப்புண்டாகும்படி, உங்களுக்காகவும் அநேகருக்காகவும் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கின்றது; இதைப் பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இப்படிச் செய்யுங்கள் என்றார். ஆமன்.

‡ இப்பொழுது அப்பம் எல்லாவற்றின்மேல் கையை வைக்கவும்.

§ இப்பொழுது பாத்திரத்தைக் கையில் எடுக்கவும்.

‖ இப்பொழுது பிரதிஷ்டை செய்யப்படுகிற திராட்ச இரசம் இருக்கும் ஒவ்வொரு பாத்திரத்தின்மேலும் கையைவைக்கவும்வேண்டும்.

¶ அப்பொழுது குருவானவர் முந்தி நற்கருணை அப்பத்தையும் திராட்சஇரசத்தையும் தாம் பொசித்துப் பின்பு வந்திருக்கும் கண்காணிமார், குருக்கள்மார், உதவிக்குருக்கள்மாருக்குப் பரிமாறவேண்டும். பின்பு சனங்களெல்லாரும் பணிவாய் முழங்காற்படியிட்டிருக்க, அவர்கள் கையிலும் கொடுக்கவேண்டும். ஒருவனுக்கு அப்பத்தைக் கொடுக்கும்பொழுது அவர் சொல்லவேண்டியதாவது:

உனக்காகக் கொடுக்கப்பட்ட நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசுக்கிறிஸ்துவின் சரீரம் உன் சரீரத்தையும் ஆத்துமத்தையும் நித்திய சீவனுண்டாகும்படி காக்கக்கடவது. கிறிஸ்துவானவர் உனக்காக மரணமடைந்தாரென்று நினைவுகூரும்படி நீ இதை வாங்கிப் பொசித்து விசுவாசத்தினால் உன் இருதயத்திலே நன்றியறிதலோடே அவரை உனக்கு ஆகாரமாய் உட்கொள்வாயாக.

¶ ஒருவனுக்குப் பாத்திரத்தைக் கொடுக்கிற குருவானவர் சொல்லவேண்டியதாவது:

உனக்காகச் சிந்தப்பட்ட நம்முடைய கர்த்தராயிருக்கிற

மாட்சிமையுள்ள ஆண்டவரே! உம்முடைய நாமத்துக்கேற்ற பிரகாரமாகவும், என் ஆத்தும ஈடேற்றத்துக்கு உபயோகமாகவும், நான் பயபத்தியுள்ள நேசத்தோடும், மெய்யான விசுவாசத்தோடும், மாயமற்ற வணக்கத்தோடும், கருத்துள்ள மனநிர்ணயத்தோடும், இராசாதிராசாவும் கர்த்தாதி கர்த்தருமாயிருக்கிறவரை ஏற்றுக்கொள்ளத்தக்கதாக, உம்முடைய தயாள பரிபூரணத்தினாலே என் ஆத்துமவியாதியைத் தீர்த்து, என் அசுத்தத்தை நீக்கி, என் மன அந்தகாரத்தை அகற்றிவிட்டு, என்னைப் பிரகாசிப்பித்து என் எளிமையை ஐசுவரியமாக மாற்றி, மாசற்ற நீதியென்னும் வஸ்திரத்தினாலே என் நிர்வாணத்தை மூடி, என்னை முற்றிலும் ஆயத்தப்படுத்தவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறேன்.

நான் இப்பொழுது என் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் சரீரரத்தத்திற்கு அடையாளங்களாகிய அப்பத்தையும் இரசத்தையும் வாங்குகிறதுமன்றி, இச்சாக்கிரமெந்துக்குரிய பொருளையும் பலனையும் பெற்றனுபவிக்கும்படிக்கும்;

என்னிடத்தில் மாமிசத்துக்குரிய எல்லாம் அழிந்து ஆவிக்குரிய எல்லாம் பிழைத்து வளர்ந்தேறும்படிக்கும்;

நான் இப்பொழுது விசுவாசத்தினாலே உம்மை ஏற்றுக்கொண்டு இனி உம்முடைய வெளிப்பொருள் தரிசனத்தை அடையும்படிக்கும்; எனக்குக் கட்டளையிட்டருளும்.

உமது வீட்டின் சம்பூரணத்தால் என்னைத் திருத்தியாக்கி, உமது செல்வங்களின் ஆற்றினால் என் தாகத்தைத் தீரும்.

நான் உம்மையே நேசித்துக்கொண்டு நீர் எனக்குத் தயவுள்ளவரென்கிறதை நான் ருசித்துப்பார்த்து, என்றைக்கும் உம்மை நினைத்துக்கொள்வேனாக.

அருமையான இரட்சகரே, உமது இரத்தமாகிய விலையுயர்ந்த கிரயத்தினாலே என்னைக் கொண்டீர். உமது இரத்தத்தினாலே கொண்ட ஆத்துமத்தைக் கெட்டுப்போகாத

படி காரும். என் சரீரமும் என் ஆவியும் உம்முடைய வைகளே. அவைகளைக்கொண்டு நான் உம்மை மகி மைப்படுத்தும்படி செய்யும்.

கிறிஸ்துவே, உம்முடைய சிலுவைப்பாடுகளினிமித் தம் என்னுடைய பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமல் என்னுடைய அநியாயங்களை மன்னித் தருளும். உமது சரீரத்தினாலே என்னைப் பாவமாகிய சரீரத்தினின்று விடுவியும். சீவ ஊற்றாகிய உம்முடைய இரத்தத்தினாலே என் மனச்சாட்சியைக் கறையறச் சுத்தி கரியும்.

என் நம்பிக்கை விருதாவாய்ப் போகும்படி என்னை வெட்கப்படுத்தாதேயும். நான் இரட்சிக்கப்பட்டு எக் காலமும் உம்முடைய பிரமாணங்களின் பேரிலே மன மகிழ்ச்சியாயிருக்கும்படிக்கு உமது வார்த்தையின்படி என்னை ஆதரியும்.

என் கைகளை உமக்கு நேராய் விரிக்கிறேன். என் ஆத் துமம் வறண்ட நிலத்தைப்போல் உமதுமேல் தாகமாயி ருக்கிறது. கர்த்தாவே, உமது நாமத்தினிமித்தமாக என்னை உயிர்ப்பியும். வான ஆகாரத்தால் என்னைப் போஷித்து, சீவதண்ணீரை எனக்குக் குடிக்கத் தந்து உமது அன்பினாலே என்னைத் திருத்தியாக்கும்.

மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுமாப்போ லே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது, என் தேவனாகிய பராபரனே.

என் பராபரனே, பரமண்டலத்தில் உம்மையல்லாமல் எனக்கிருக்கிறதார். பூமியில் உம்மைப்பார்க்கிலும் ஒன் றையும் விரும்பேன்.

ஆண்டவரே, நீர் என் வீட்டுக்குள் பிரவேசிப்பதற்கு நான் பாத்திரவானல்ல. ஒரு வார்த்தையைமாத்திரம் சொ ல்லும்;அப்பொழுதுஉமதடியான் சொஸ்தம்அடைவான்.

ஆண்டவரே, கேளும்; ஆண்டவரே, மன்னியும்;

ஆண்டவரே, கவனித்து இரட்சியும்; உமது இரக்கங்களினிமித்தம் தாமதியாமல் என்னை ஆதரிக்கும்படி தீவிரியும். என் இரட்சிப்பின் பராபரனே வாரும், வாரும். இயேசு கர்த்தரே, சீக்கிரமாய் வாரும்.

இதோ உமது அடியான். உமது வார்த்தையின்படி எனக்காகக்கடவது.

¶ ஒருவனுக்கு அப்பத்தைக் கொடுக்கும்பொழுது குருவானவர் சொல்லவேண்டியதாவது:

உனக்காகக் கொடுக்கப்பட்ட நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசுக்கிறிஸ்துவின் சரீரம், உன் சரீரத்தையும் ஆத்துமத்தையும் நித்திய சீவனுண்டாகும்படி காக்கக்கடவது. கிறிஸ்துவானவர் உனக்காக மரணமடைந்தாரென்று நினைவுகூரும்படி, நீ இதை வாங்கிப் புசித்து விசுவாசத்தினால் உன்னிருதயத்திலே நன்றியறிதலோடே அவரை உனக்கு ஆகாரமாய் உட்கொள்வாயாக.

## கவனிப்பு:

குருவானவர் இந்த வார்த்தைகளைச் சொல்லும்பொழுது "உனக்காக" என்றும், "நீ" என்றும் சொல்வதை "எனக்காக" என்றும், "நான்" என்றும் நீ தன்மையிடமாகத் திருப்பி ஒவ்வொரு வார்த்தையின் கருத்தைக் கவனித்துக்கொண்டு, குருவானவர் சொல்லும் வார்த்தைகளை அவருக்குப்பின்னே உள்ளத்தில் சொல்லவேண்டியது.

அப்பத்தை வாங்கினவுடனே இதனடியில் கண்டிருக்கிற சுருக்கமான செபத்தியானங்களில் இரண்டொன்றைச் சொல்லவேண்டியது.

சீவ அப்பமாகிய கிறிஸ்துவே, என் ஆத்துமத்தை ஆதரித்துப் பலப்படுத்தும்.

உமது சிலுவைப்பாடுகளினிமித்தம் என்னை இரட்சித்தருளும், தயவுள்ள கர்த்தாவே.

உமது பரிபூரணத்தால் கிருபையின்மேல் கிருபையை எனக்கருளிச்செய்யும்.

கிறிஸ்துவே, நான் உம்மை இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொண்டு உமது ஊழியத்திற்கு என்னை ஒப்புக்கொடுக்கிறேன்.

தேவரீருக்கே மகிமை உண்டாவதாக.

¶ ஒருவனுக்குப் பாத்திரத்தைக் கொடுக்கிற குருவானவர் சொல்லவேண்டியதாவது:

உனக்காகச் சிந்தப்பட்ட நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசுக்கிறிஸ்துவின் இரத்தம் உன் சரீரத்தையும் ஆத்துமத்தையும் நித்தியசீவனுண்டாகும்படி காக்கக்கடவது. கிறிஸ்துவின் இரத்தம் உனக்காகச் சிந்தப்பட்டதென்று நினைவுகூரும்படி இதிலே பானம்பண்ணி நன்றியறிந்தவனாயிருப்பாயாக.

## கவனிப்பு:

முன்னே சொல்லியிருக்கிறபடியே மேற்கண்ட வார்த்தைகளையும் குருவானவரோடே சொல்லவேண்டியது.

பாத்திரத்தை வாங்கினவுடனே இதனடியில் கண்டிருக்கிற சுருக்கமான செபத்தியானங்களில் இரண்டொன்றைச் சொல்லவேண்டியது.

என் தேவனே, உமது இரத்தமாகிய சீவ ஊற்றினாலே என் ஆத்துமத்தின் தாகத்தைத் தீரும்.

எங்களில் அன்புகூர்ந்து உமது இரத்தத்தினாலே எங்கள் பாவங்களற எங்களைக் கழுவினவரே, உமக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருக்கக்கடவது.

உலக இரட்சகரே, உமது சிலுவைப்பாடுகளினாலும் விலையேறப்பெற்ற உமது இரத்தத்தினாலும் நீர் மீட்டுக்கொண்ட ஆத்துமத்தைக் கெட்டுப்போகாதபடி கார்த்தருளும்.

என் முழு இருதயத்தினாலும், என் முழு பலத்தினாலும் நான் தேவரீரை நேசித்து விசுவாசித்துப் பின்பற்றும்படி எனக்குக் கிருபைசெய்யும்.

நற்கருணை அப்பத்தையும் பாத்திரத்தையும் வாங்கி, முன் இருந்த இடத்திற்குத் திரும்பிப்போயிருக்கும்பொழுது, முழங்கால்படியிட்டுச் செய்யவேண்டிய

## செபத்தியானங்கள்.

இரக்கம் நிறைந்த இரட்சகரே, உம்மில் நம்பிக்கை வைக்கிறவர்களுக்கு நீர் ஏற்படுத்தின நன்மை எவ்வளவு அருமை!

தேவரீர் என்னை உமது சாயலாகச் சிருட்டித்து நான் உமக்குச் சத்துருவானபோது என் பாவங்களைத் தீர்க்கும்படி நீரே உம்மை மரணத்துக்கு ஒப்புக்கொடுத்து, என்னை மீட்டுக்கொண்டு, இந்நாள்வரைக்கும் என்னைக் கிருபையாய் நடத்தினதுமன்றி, இந்தச் சாக்கிரமெந்தின் மூலமாய் உமது சரீர இரத்தத்தை ஆத்தும ஆகாரமாக எனக்கு அருளிச்செய்தும், இவ்வகையாய் நீரே என் உயிருக்கு உயிரும், என் ஆத்துமத்திற்குப் பெலனும் ஆறுதலுமானதால் தேவரீருக்கு மகிமை உண்டாவதாக.

நானும் இந்தத் திவ்விய பந்தியைச் சேர்ந்திருக்கிறவர்களெல்லாரும் இனி எப்பொழுதும் உம்முடையவர்களாய் நிலைத்திருக்கவும், உமது ஆவியின் முதற்பலன்களைப் பெற்றவர்கள் நடக்கவேண்டிய சீலமாய் நாங்கள் நடக்கும்படிக்கும், எங்கள் விசுவாசம் நாளுக்குநாள் பெருகிவரும்படிக்கும், நாங்கள் புதுச்சீவனும் பரிசுத்த அன்பும் அடைந்தவர்களாய் உம்மைச் சேவித்துக்கொள்ளும்படிக்கும் எங்களுக்குக் கிருபைசெய்யும்.

நீர் எங்களுக்குத் தந்திருக்கிற நித்தியசீவன் உம்முடைய குமாரனிலிருக்கிறதென்றும், குமாரனையுடையவன் அந்தச் சீவனையுடையவனாயிருக்கிறானென்றும்,

தேவரீர் அருளின வாக்கின்படியே நான் குமாரனை யுடையவனுயிருக்கிறேனென்கிற நம்பிக்கை எனக்கு ண்டு. நான் குமாரனையுடையவனுயிருப்பதினுலே நித் தியசீவனையும் உடையவனுயிருக்கிறேன். வழியும் சத்தி யமும் சீவனும் என்னுடையவைகளே; நான் கிருபை பெற்ற பாக்கியவான். என் ஆத்துமாவே, கர்த்தர் உன க்கு நன்மைசெய்தபடியால் உன் இளைப்பாறுதலுக்குத் திரும்பிக்கொள்.

“தேவரீருடைய இரட்சணியத்தை என் கண்கள் கண் டன.” என் விசுவாசமென்கிற கண் அதைக் கண்டது, என் விசுவாசமென்கிற கை அதைப் பற்றிக்கொண்டது, என் விசுவாசமென்கிற வாய் அதை ருசித்து உட்கொண் டது, அது சொல்லிமுடியாத மகிமையால் நிறைந்த நித் திய இரட்சணியமென்று கண்டுணர்ந்தேன். ஆதலால் ஆண்டவரே, இப்பொழுது உமது அடியானைச் சமாதா னத்தோடே போகவிடுகிறீர். உன்னதங்களில், பராபர னுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும் மனிதரானை வர்மேலும் பிரியமும் உண்டாவதாக.

தேவரீர் உமது அடியானின் தாழ்மையை நோக்கிப் பார்த்து மகிமையானவைகளை எனக்குச் செய்தபடியி னுலும், பசியுள்ளவனுகிய என்னை நன்மைகளால் நிரப் பினதினுலும் என் ஆவி என் இரட்சகராகிய பராபரனில் களிகூருகிறது.

நீர் என் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, என் நோக்காடெல்லாம் குணமாக்கி, என் பிராணனை அழி வுக்கு விலக்கிமீட்டு, என்னைக் கிருபையாலும் இரக்கங் களாலும் முடிசூட்டி, என் வாயை நன்மைகளால் திருத் தியாக்கினபடியினுலே என் தேவனுகிய இராசாவே, உம்மை நேசித்துக்கொண்டு உம்முடைய நாமத்தை என்றென்றைக்கும் போற்றுவேன்.

கிருபையுள்ள கர்த்தரே, நீர் இப்பொழுது என்னிடத்

தில் கண்ட பாவங்களை இரக்கமாய் மன்னித்து, என் செபங்களையும் என் தோத்திரங்களையும் ஏற்றுக்கொண்டு, என் குறைவுகளை நிறைவாக்கி உமது வரப்பிரசாதங்களினாலே என்னைத் தேவபத்தியில் உறுதிப்படுத்தும்.

என் ஆத்துமத்தை உமக்கு ஆலயமாக ஏற்றுக்கொண்டு பிரதிஷ்டைசெய்தீரே, நான் ஒருக்காலும் அதைப் பரிசுத்த குலைச்சலாக்காதபடிக்கும், திரும்ப நான் உம்முடைய கோபத்திற்குட்படாதபடிக்கும், உமது பரிசுத்தஆவியினாலே என்னை நடத்திக் காத்துக்கொண்டருளும்.

கர்த்தாவே! என் உறவின்முறையார், சிநேகிதர், உபகாரிகள் எல்லாருக்காகவும் (விசேஷமாக எனக்கு அதிக தயவுபாராட்டின இன்னாருக்காகவும்) வேண்டிக்கொள்ளுகிறேன். எனக்குத் தீங்குசெய்தவர்களையும், என்னால் தீங்கனுபவித்தவர்களையும், என்னால் இடறல் அடைந்தவர்களையும், என்னால் பெறவேண்டிய உதவியைப் பெறாமல்போனவர்களையும் ஆராருக்கு நன்மை செய்வது எனக்குக் கடமையோ அவர்களையும் நான் இப்பொழுது நினைத்து அவர்கள்பேரில் தேவரீர் இரக்கமாயிருக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். இரக்கமுள்ள பரமபிதாவே! அவர்களும் தேவரீருக்கு உத்தம பிரியமுள்ளவர்களாகி, உம்மை அறிக்கையிட்டு உமக்குப் பயந்து, உம்மில் அன்புகூர்ந்து உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு, அவர்களுக்கும் இரக்கத்தையும் கிருபையையும் தந்தருளும். தேவரீருக்கும் உம்முடைய பிரியகுமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும் இப்பொழுதும் எப்பொழுதுமான சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமன். †

† அநேகர் நற்கருணைக்குச் சேருகிறதினாலே அதிகநேரஞ்சென்றால் மேற்கண்ட தியானத்தை வாசிக்கிறதுமல்லாமல், பின்னாலே கண்டிருக்கும் தியானங்களில் சிலவற்றையும் வாசிக்கலாம். நற்கருணையை வாங்கினதின்பின்பு இந்தத் தியானத்தையே முதலாவதாக வாசிக்கவேண்டியது.

¶ எல்லாரும் வாங்கினபின்பு குருவானவர் நற்கருணை மேசைக்குத் திரும்பிவந்து, பிரதிஷ்டையாக்கப்பட்ட அப்பத்திலும் திராட்ச இரசத்திலும் மீதியானதை அதின்மேல் வணக்கமாய் வைத்து வெள்ளைச் சீலையினாலே மூடவேண்டும்.

¶ பின்பு குருவானவர் கர்த்தருடைய செபத்தைச் சொல்ல, சனங்களும் அதில் ஒவ்வொரு விண்ணப்பத்தையும் தொடர்ந்து சொல்லவேண்டும்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய இராச்சியம் வருவதாக.

உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்றுதாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல், எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குட் பிரவேசிக்கப்பண்ணாமல்; தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். இராச்சியமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமன்.

¶ பின்பு சொல்லவேண்டுவதாவது:

பரமபிதாவாகிய கர்த்தாவே, உம்முடைய தாழ்மையான ஊழியக்காரராயிருக்கிற நாங்கள் இப்பொழுது செலுத்தியிருக்கிற துதிதோத்திரபலியை இரக்கமாய் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று தயவுள்ள பிதாவாகிய உம்மை முழுமனதோடு வேண்டிக்கொண்டு, நாங்களும் மற்றுமுள்ள உம்முடைய சபையாரெல்லாரும் உம்முடைய குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவின் புண்ணியங்களினாலும் மரணத்தினாலும் அவர் திரு இரத்தத்தைப்பற்றும் விசுவாசத்தின் மூலமாய், பாவமன்னிப்பையும் அவர் பாடுகளினாலுண்டான மற்றெல்லா நன்மைகளையும் பெற்றுக்கொள்ளும்படி தேவரீர் கிருபைசெய்யவேண்டுமென்று தாழ்மையாய்ப் பிரார்த்திக்கிறோம். அன்றியும் கர்த்தாவே, தேவரீருக்கு நாங்கள் புத்தியும் பரிசுத்தமும் சீவனு

முடைய பலியாயிருக்கும்படி, சரீரமும் ஆத்துமாவுமாகிய எங்களை முழுதும் உமக்கு ஒப்புக்கொடுத்து, இப்பொழுது பரிசுத்த நற்கருணையை வாங்கி அநுபவித்திருக்கிற எங்களெல்லாரையும் தேவரீர் உமது கிருபையினாலும் பரம ஆசீர்வாதத்தினாலும், நிரப்பியருளவேண்டுமென்று, பணிவாய் வேண்டிக்கொள்ளுகிறோம். தேவரீருக்கு எந்தப் பலியும் செலுத்துவதற்கு அநேகவிதமாயிருக்கிற எங்கள் பாவங்களினாலே நாங்கள் அபாத்திரராயிருந்தும், நாங்கள் பாத்திரவான்களோவென்று மதியாமல் இயேசுக்கிறிஸ்துவினிமித்தம் எங்கள் குற்றங்களை மன்னித்து, நாங்கள் கடமையாகச் செலுத்தியிருக்கிற இந்த ஊழியத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம். அவரோடும் பரிசுத்தஆவியோடும் ஐக்கியமாயிருக்கிற தேவரீருக்குச் சகல கனமும் மகிமையும் என்றென்றைக்கும் உண்டாவதாக. ஆமன்.

¶ அல்லது இதைச் சொல்லவேண்டும்.

நித்திய சீவியாயிருக்கிற சர்வவல்லமையுள்ள பராபரனே, இந்தப் பரிசுத்த இரகசியங்களை ஏற்றவிதமாய் வாங்கியிருக்கிற எங்களுக்குத் தேவரீர் உம்முடைய குமாரனும் எங்கள் இரட்சகருமாகிய இயேசுக்கிறிஸ்துவின் விலைமதியாத திருச்சரீரமும் இரத்தமுமாகிய ஆவிக்குரிய ஆகாரத்தை அருளிச்செய்ததற்காக உம்மைத் துதிக்கிறோம். அன்றியும், தேவரீர் எங்கள் மேல் தயவையும் அன்பையும் வைத்திருக்கிறதையும், ஆசீர்வாதம் பெற்ற விசுவாசிகள் அனைவருமாகிய உமது அருமையான குமாரனுடைய ஞானசரீரத்தில் நாங்கள் இணைக்கப்பட்ட அவயவங்களாயிருக்கிறதையும், அவருடைய விலையுயர்ந்த மரணத்தினாலும் பாடுகளினாலுமுண்டான புண்ணியங்களின்மூலமாய் நாங்கள் நம்பிக்கையினாலே உமது நித்திய இராச்சியத்துக்குச் சுதந்தரராயிருக்கிறதையும், இந்த நற்கருணையினாலே எங்களுக்கு நிச்சயப்படுத்தினதற்காகவும்; முழு இருதயத்தோடே உமக்குத் தோத்திரஞ்செலுத்துகிறோம். அன்றியும், பரமபிதாவே, நாங்கள் இந்தப் பரிசுத்த ஐக்கியத்தில்

நிலைத்துக்கொண்டேயிருந்து, நாங்கள் செய்வதற்குத் தேவரீர் நியமித்திருக்கிற நற்கிரியைகளெல்லாவற்றையும் நிறைவேற்ற உமது கிருபையைத் தந்தருளவேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினிமித்தம் மனத்தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். அவருக்கும் தேவரீருக்கும் பரிசுத்த ஆவிக்கும் எல்லாக் கனமும் மகிமையும் என்றென்றைக்கும் உண்டாவதாக. ஆமன்.

¶ பின்பு, சொல்ல அல்லது பாடவேண்டியது.

உன்னதங்களில் பராபரனுக்கு மகிமையும், பூமியில் சமாதானமும், மனிதர்கள்மேல் பிரியமுமுண்டாவதாக. கர்த்தராகிய பராபரனே, பரம இராசாவே, சர்வவல்லமையுள்ள தேவனாகிய பிதாவே, உம்மைத் துதிக்கிறோம், உம்மைப் புகழுகிறோம், உம்மை வணங்குகிறோம், உம்மை மகிமைப்படுத்துகிறோம். உமது சிறந்த மகிமையினிமித்தம் உமக்குத் தோத்திரஞ் செலுத்துகிறோம்.

கர்த்தராயிருக்கிற ஒரேபேறான குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவே, கர்த்தராகிய பராபரனே, பிதாவின் சுதனே, உலகத்தின் பாவங்களைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியே, எங்களுக்கு இரங்கும். உலகத்தின் பாவங்களைச் சுமந்துதீர்க்கிறவரே, எங்களுக்கு இரங்கும். உலகத்தின் பாவங்களைச் சுமந்துதீர்க்கிறவரே, எங்கள் செபத்தை ஏற்றுக்கொள்ளும். தேவனாகிய பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறவரே, எங்களுக்கு இரங்கும்.

நீரே பரிசுத்தர், நீரே கர்த்தர்; கிறிஸ்துவே, தேவரீர் பரிசுத்த ஆவியோடே தேவனாகிய பிதாவின் மகிமையிலே உன்னதமானவராயிருக்கிறீர். ஆமன்.

¶ அப்பொழுது, குருவானவராவது கண்காணியார் இருந்தால் அவராவது பின்வருகிற ஆசீர்வாதத்தைச் சொல்லி சனங்களை அனுப்புவிக்கவேண்டும்.

பராபரனையும் அவருடைய குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசுக்கிறிஸ்துவையும் நீங்கள் அறிந்து நேசித்துக்

கொண்டேயிருக்கும்படி, எல்லாப் புத்திக்கு மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயத்தையும் சிந்தையையும் காப்பாற்றக்கடவது. பிதா குமாரன் பரிசுத்த ஆவியுமாகிய சர்வவல்லமைபொருந்திய பராபரனுடைய ஆசீர்வாதமும் உங்களுக்குள்ளேயிருந்து, எப்பொழுதும் உங்களோடே நிலைத்திருக்கக்கடவது. ஆமன்.

ஆசீர்வாதத்திற்குப்பின்பு உள்ளத்திலே செய்யத்தக்க

## செபம்.

இரக்கமுள்ள தேவனே, நான் இப்பொழுது உம்முடைய பந்திக்கு வந்திருக்கையில் தேவரீர் என்னிடத்தில் கண்டிருக்கும் அவிசுவாசம் அசதி அன்புத்தாழ்ச்சி முதலிய குற்றங்களை எனக்கு மன்னித்து, என் கிரியைகளுக்குத் தக்கதாய் எனக்குப் பதில்செய்யாமல், உமது இரக்கங்களின் ஐசுவரியத்திற்குத் தக்கதாக எனக்கு ஆசீர்வாதந்தந்து என்னை இரட்சியும்.

சிலுவையில் அறையுண்டு மரித்த இரட்சகருடைய அன்பையும், இத்தருணத்தில் தேவரீர் எனக்கு அருளின ஈவுகளையும் நான் என்றைக்கும் நினைத்து நன்றியறிதலுள்ளவனாயிருக்கும்படிக்கும், நான் இனி என் சிந்தைகள் வார்த்தைகள் கிரியைகளாலும் உம்மை மென்மேலும் மகிமைப்படுத்தி, கடைசியிலே நித்திய சீவக்கரையைச் சேர்ந்து உம்மைத் தரிசிக்கும்படிக்கும் எனக்குக் கிருபை செய்தருளும். என் கர்த்தராயிருக்கிற இயேசுக்கிறிஸ்துவின் மரண புண்ணியங்களினிமித்தமே. ஆமன்.

# நற்கருணைத்தியானங்கள்.

# நற்கருணைத் தியானங்கள்.

அநேகர் நற்கருணைக்குச் சேருகிறதினாலே அதை வாங்குகிறதற்கு நேரஞ்சென்றால், நற்கருணை ஒழுங்கின் இடையில் ௯௯ பக்கமுதல் சேர்த்திருக்கிற செபத்தியானங்களை வாசிக்கிறதுமல்லாமல், இதின் அடியில் கண்டிருக்கும் தியானங்களில் சிலவற்றையும் வாசிக்கவேண்டும்.

## 1.

*நீதி. ச. உ௬. உன் கால் நடக்கும் வழியை உற்றுப்பார்.*

நான் நடக்கிற வழியை இத்தருணத்தில் உற்றுப்பார்க்கிறது அவசியமே. எந்த நோக்கத்தோடே இந்தப் பரிசுத்த சாக்கிரமெந்தை வாங்கும்படி சேர்ந்திருக்கிறேன்? இதற்கு என் மனச்சாட்சி எந்த உத்தரவுசொல்லும்? கிறிஸ்துவின் மரணத்தை நினைக்கும்படிக்கும், அவர் சிலுவைமரத்தில் தம்மைத்தாமே ஏகபலியாகக்கொடுத்ததை ஞாபகம்பண்ணும்படிக்கும், அவர் ஒருவரே என் இரட்சகரென்றும், அவரே என் பாவங்களை நிவிர்த்திசெய்து பராபரனை என்னோடும் என்னைப் பராபரனோடும் ஒப்புரவாக்கினவரென்றும் நான் நம்பிக்கொண்டிருக்கிறதை அறிக்கையிடும்படிக்கும், அவர் அருளிச்செய்கிற கிருபைக்கு அத்தாட்சியும் முத்திரையுமாயிருக்கிற வரப்பிரசாதங்களை வாங்கிக்கொள்ளும்படிக்கும் நான் சேரவேண்டியது. இதற்காகவே வந்திருக்கிறேனென்று தாழ்மையாய் நம்புகிறேன். என் இரட்சகரே, உம்மை நோக்கிக்கொண்டிருக்கிற எனக்கு உம்முடைய சாயலைத் தரித்து, என் குறைவுகளை நீக்கி, உம்முடைய கிருபையை நிறைவாய்த் தாரும். நான் வறுமையுள்ளவன், நீர் கிருபையாலும் நீதியாலும் நிறைந்தவர். நான் நிர்ப்பாக்கியன், நீர் உருக்கமான இரக்கங்களை உடையவர். நான் பாவி, நீர் மன்னிக்கிறவர். நான் ஆக்கினைக்குப் பாத்திரன், நீர் ஆக்கினையை விமோசனஞ்செய்கிறவர். நான் நன்மைசெய்ய விரும்பினாலும் அதை நிறைவேற்றப் பலனில்லாத

வன், நீர் பலப்படுத்தி ஊன்றக்கட்டிச் சகாயஞ்செய்கிறவர். நான் மரணத்திற்கும் நரகத்திற்கும் தீர்க்கப்பட்டவன், நீர் மோக்ஷத்தையும் நித்தியசீவனையும் ஈகிறவர். தேவரீர் ஏற்படுத்தின சாக்கிரமெந்தின் வழியாய் விசுவாசத்தினாலே உம்மிடத்தில் வருகிறேன். எனக்கிரங்கி, என்னைச் சந்திக்கவாரும்.

## 2.

லூக்கா, ௨௨. ௬. என்னை நினைவுகூரும்படிக்கு இப்படிச் செய்யுங்கள்.

அருமை இரட்சகரே, நீர் எங்கள்பேரில் வைத்த மிகுந்த அன்பையும், நீர் எங்களுக்காகச் சகித்த கொடிய வேதனைகளையும் இடைவிடாமல் நினைக்கவேண்டியதாய் இருக்க, அவைகளை மறக்கிறதே எங்கள் சுபாவம். நாங்கள் பாவத்தை விட்டுவிடாததினாலும், நற்கருணை ஆராதனையிலேயும் அசதி அசட்டை பராக்குள்ளவர்களாயிருப்பதினாலும் நாங்கள் மறதிக்குணமுள்ளவர்களென்பது நிச்சயமே. தேவரீர் எங்கள் பலவீனத்தைக் கண்டு எங்களுக்கிரங்கி உம்முடைய சிலுவைப் பாடுகளை எங்களுக்குவெளிப்படையாய்க் காண்பித்து ஞாபகப்படுத்தும்படிக்கு இந்த அடயாளங்களை ஏற்படுத்தினீர்; இதற்காக உமக்குத் தோத்திரம். சிலுவையில் அறையுண்ட இயேசுவே, நீர் மரித்த அன்பை எங்களுக்கு வெளிப்படுத்தி, அவ்வன்பின் ரூபத்தை எங்கள் இருதயத்தில் எழுதும். உம்முடைய பிறப்பின் தாழ்மையையும், உமது மரணத்தின் புண்ணியங்களையும், நீர் உயிர்த்தெழுந்த வல்லமையையும், நீர் பரத்துக்கேறின மகிமையையும் நாங்கள் இப்பொழுது அன்போடே நினைத்துக்கொள்ளுகிறோம். நாங்கள் உம்முடைய பாடுகளைக்குறித்து நன்றியுள்ளவர்களாயிருக்கிறதாகவும், உம்முடைய உயிர்த்தெழுதலில் விசுவாசம் வைத்திருக்கிறதாகவும், உம்முடைய இரண்டாம் வருகைக்கு நாங்கள் எதிர்பார்க்கிறதாகவும் உலகத்தாருக்கு முன்பாகக் கூறி அறிக்கையிடுகிறோம். உம்முடைய மரணத்தை இப்பொழுது நினைத்திருக்கிற நாங்கள் இனி ஒருபோதும் உம்முடைய அன்பை மறவாதபடிக்கும், இத்தருணத்தில்

யோசித்தவைகளும் உணர்ந்தவைகளும் தீர்மானித்தவைகளும் என்றென்றைக்கும் எங்கள் இருதயத்தில் பதிந்திருக்கும்படிக்கும் கிருபைசெய்யும்.

## 3.

லூக்கா, ௨௨. ௪௪. அவர் கொடிய வேதனைப்பட்டு அதிக உக்கிரத்தோடே செபம்பண்ணினார். அப்பொழுது அவருடைய வேர்வை இரத்தத்துளிகளைப்போலாகித் தரையிலே விழுந்தது.

ஆத்துமாவே, உன் பாவத்தினாலே தேவசுதனுக்குண்டான வருத்தத்தைப் பார்த்துத் துக்கித்துக்கொள். அவர் அடைந்த வருத்தத்தின் கொடூரத்தினாலே மனவேதனையும் வியாகுலமும் அவருக்கு அதிகரித்ததால் அவருக்கு இரத்தவேர்வை உண்டாயிற்று. நீ அடையவேண்டிய தண்டனையையும், உனக்கு நியமிக்கப்பட்ட நரக ஆக்கினையையும் அவர் கண்டார். உன் பாவங்களின் ஏராளத்தையும் நீ பரலோக இராசாவுக்கு உண்டாக்கின கனவீனத்தையும் அறிந்தார். பராபரனுடைய மாசற்ற பரிசுத்ததன்மை இப்படிப்பட்டதென்று அவர் அறிந்ததால், உன் அசுத்தங்களுக்கு வரத்தக்க பலனும் இப்படிப்பட்டதென்று அவருக்கு நன்றாய்த் தெரியும். தேவகோபமாகிய புசல் பெருங்காற்று உன்னைப் பிடித்தடிக்க வருகிறதை அவர் கண்டார். உன் பங்கு நியமித்திருக்கிற காரிருளையும், அக்கினி கெந்தகம் எரிகிற கடலையும் கண்டார்; கண்டு மனதுருகி உன்னை இரட்சிக்கும்படி ஏற்பட்டார்; இடைதலிலே நின்றார். நீ உனக்காகக் குவித்த தேவகோபாக்கினையை உத்தரித்துத் தீர்த்தார். உன் பாவங்களைச் சுமந்துகொண்டு நீசனுக்குப் பெலனும், நெருக்கப்படுகிற எளியவனுக்குத் திடனும் பெருவெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலமும், வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமானார்.

அவருடைய திருமேனியெல்லாம் இரத்தமாய் வேர்க்கத்தக்கதாக, அவர் அடைந்த வியாகுலங்கள் எத்தனை! என் ஆத்துமாவே, உன் மீட்பர் உன் பாவங்களுக்காக அநுபவித்த பாடுகள் எவ்வளவென்று நீ யோசித்து மதித்ததுண்டோ?

இப்பொழுதாவது அவருடைய பாடுகளைச் சிந்தித்துப்பார். அவர் உனக்காக அடைந்த அகோரமான வேதனைகளைப் பார்த்து இனி என்றென்றைக்கும் பாவமான யாவையும் வெறுப்பாயாக.

## 4.

ஏசாயா, ௫௩. ௫. எங்கள் மீறுதலுக்காகக் காயப்பட்டார்.

என் மீட்பரே, உமது சீவகாலத்திலும் உமது மரணவேளையிலும் நீர் ஏழைப் பாவிகளுக்குச் செய்த தயவு அதிசயமே. நீர் பட்ட காயங்கள் ஐந்திலும் உமது கருணை விளங்குகிறது. என் ஆத்துமரோகங்கள் தீருதற்கு அந்தக் காயங்களே அவிழ்தம். துரிச்சைகள் எழும்பும்போது உமது காயங்களை நினைத்து அந்த இச்சைகளை அடைக்கிக்கொள்வேனாக. உமக்கு ஊழியஞ்செய்வதில் நான் அசந்து தூங்கி நடக்கும்போது, உமது காயங்களை நினைத்து விழித்துக்கொண்டு உழைப்பேனாக. தேவ நற்கருணைவேளையில் உமது காயங்களை நினைத்தமாத்திரத்திலே வீண்சிந்தைகள் அனைத்தும் அற்றுப்போகக்கடவன. ஆத்துமாவே, நீ என்னத்தை மறந்தாலும் உன் இரட்சகருடைய அன்பை மறவாதே. அவர் ஒருக்காலும் உன்னை மறக்கவில்லை. கடை இக்கட்டிலும் தம்மை நினையாமல் உன்னை நினைத்தார். மரண அவஸ்தை சமீபிக்கும்போது தாம் மீட்கப்போகிற ஆத்துமாக்கள் ஒவ்வொன்றாய் அவர் நினைவுக்கு வந்ததில் உன் பேரையும் உன் போரையும் உன் முடிவையும் நினைத்தார். தோட்டத்திலும் சிலுவையிலும் கல்லறையிலும் உன் இரட்சிப்பே அவர் கவலை. இப்பொழுதும் அவர் மகிமையுடையவராய் வானத்தில் வீற்றிருந்தும் பூமியில் போராடுகிற தம்முடையவர்களை நோக்கிப்பார்க்கிறார். அவர்கள் அபாத்திரராயிருந்தும் அவர்களிடத்தில் அன்பாயிருக்கிறார். அவர் தேவாதி தேவனாகவும் அவர்கள் அற்பமண்ணாகவும் இருந்தும், அவர்கள் ரூபத்தைத் தரித்து அவர்களைச் சகோதரரென்று அழைக்கிறார். அவர் தூதருடைய கீர்த்தனங்களைக் கேளாமல், தமது பிள்ளைகளின் செபங்கள் பெருமூச்சுகளுக்குச் செவி

கொடுக்கிறார். குறைவில் எங்களை ஆதரிக்கிறதும், மோசங்களுக்கு எங்களை விலக்கிக் காக்கிறதும் துன்பங்களில் எங்களை ஆறுதல்படுத்துகிறதும் அவருக்குப் பிரியம். அவருடைய அன்பை நான் ஒருக்காலும் மறவாதிருப்பேனாக.

## 5.

*யோவான், க. உகூ. பாருங்கள், உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி இவரே.*

ஆத்துமாவே, உனக்காக அடிக்கப்பட்ட பலியை உற்றுப்பார். உன் இரட்சகர் தேவ ஆட்டுக்குட்டி என்னப்பட்டவர். அவர் பழுதற்றவரும் பொறுமையுள்ளவருமானதால் அவரை ஆட்டுக்குட்டி என்றும், தெய்வதன்மையுடையவராயும் பிதாவினாலே நியமிக்கப்பட்டவராயும் இருப்பதால் அவரைத் தேவ ஆட்டுக்குட்டி என்றும் சொல்லியிருக்கிறது. "அவர் ஒரு ஆட்டுக்குட்டியைப்போல் அடிக்கப்படகொண்டுபோகப்பட்டு, தன்னை மயிர் கத்திரிக்கிறவனுக்குமுன்பாக சத்தமற்றிருக்கிற ஆட்டைப்போல் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார். அவர் வாயிலே வஞ்சனையும் முறையிடுதலும் காணப்பட்டதில்லை." ஆட்டுக்குட்டியானவருக்குப் பின்செல்லுகிறேனென்று மேன்மைபராட்டுகிறாயே, அப்படியானால் அவரைப்போல் பிழையற்றவனாயும், சாந்தமுள்ளவனாயும், ஒருவருக்கும் தீமைசெய்யாமல் பிறர் செய்கிற தீமையைச் சகிக்கிறவனாயும் இருக்கும்படி அவரிடத்தில் கற்றுக்கொள். தேவ ஆட்டுக்குட்டியானவர் பாவத்தைச் சுமந்து தீர்த்ததெப்படி? தமது சொந்தச் சரீரத்திலே பாவத்தைத் தாங்கிக்கொண்டு சிலுவையில் மரித்ததினாலேயல்லவோ அதைத் தீர்த்தார்; நமக்குச் சமாதானம் உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் இறங்கிற்று. தேவகுமாரன் சுமந்த பாவபாரம் எவ்வளவு! அவர் அதைச் சுமந்துதீராவிட்டால் உலகமுழுதும் அந்தப் பாரத்தினாலே நொறுங்கி அழியுமே. "அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும், ஐசுவரியத்தையும், ஞானத்தையும், பலத்தையும், கனத்தையும், மகிமையையும், தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளுதற்குப் பாத்திரராயிருக்கிறார்."

## 6.

*லூக்கா, உ௩. ௪உ. ஆண்டவரே, நீர் உம்முடைய இராச்சியத்தில் சேரும்பொழுது என்னை நினைத்தருளும்.*

இரட்சகரே, குணப்பட்ட கள்ளனைப்போல உம்மை நோக்கி மன்றாடுகிறேன். அவனைத் தயவாய் ஏற்றுக்கொண்டு இன்று என்னுடனே பரதீசில் இருப்பாயென்று மொழிந்தவரே, உமது இராச்சியத்தின் மகிமையோடே நீர் திரும்ப வரும்போது என்னை நினைத்தருளும். நான் ஒரு நன்மையையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரனல்ல. நீர் என்னைக் கைவிட்டாலும் நீதியாகவே இருக்கும். ஆனாலும் இரக்கமுள்ள ஆண்டவரே, கடைசிநாளில் கோடாகோடிபேர்கள் உம்முடைய சன்னிதானத்தில் பயந்துநின்று நியாயத்தீர்ப்பை அடையும்போது என்னை இரக்கமாய் நினைத்தருளும். கிருபையுள்ள இயேசுவே, என்னை நினைத்தருளும், இனி நான் ஒருக்காலத்திலாகிலும் உம்மை மறவாமல், உமது அன்பினாலே ஏவப்பட்டு என்னையும் என் முழுப்பலத்தையும் என் வாழ்நாட்கள் ஒவ்வொன்றையும் உமக்கென்று படைத்து ஒப்புவிப்பேனாக.

## 7.

*மத். உ௬. உ௬. வாங்கிப் புசியுங்கள்; இது என்னுடைய சரீரம்.*

கர்த்தரே, கெட்ட குமாரனைப்போல் தவிடுகளைத் தின்று பட்டினியினாலே தவித்து வதங்கிப்போயிருக்கிற எனக்கு இந்தவார்த்தை எவ்வளவு ஆறுதல் தரத்தக்கது! தேவரீர் உம்மை ஈவாய்க்கொடுத்து நாங்கள் உமது பாவ நிவாரணத்தையும் உமது புண்ணியங்கள் வரப்பிரசாதங்களையும் ஞான ஆகாரமாக உட்கொள்ளும்படி எங்களுக்கு அருளிச்செய்து, "வாங்கிப் புசியுங்கள்" என்று கட்டளையிட்டிருக்கிறீரே. எனக்கு அவசியந் தேவையானவைகளையும், நான் மிகுந்த ஆவலாய் விரும்புகிறவைகளையும் நீர் இலவசமாய்த் தருகிறீர். கர்த்தாவே, உமது தயாபரக் கிருபைக்காக உமக்குத் தோத்திரம். அபாத்திரனாகிய நான் உமது தயாளத்தினாலே தைரியங்கொண்டு கிறிஸ்

ருவைப் பற்றிக்கொள்ளும்படி சேருகிறேன். அவரை ஆண்டவரென்று ஏற்றுக்கொண்டு அவர் நாமத்தில் விசுவாசம் வைத்து அவருடைய பரிபூரணத்தினாலே போஷிக்கப்படுவேனாக.

## 8.

*யோவான், ௬. ௫௬. என் மாமிசத்தைப் புசித்து, என் இரத்தத்தில் பானம்பண்ணுகிறவன் என்னில் தரித்திருக்கிறான்; நானும் அவனில் தரித்திருக்கிறேன்.*

கர்த்தாவே, நான் புறம்பான அடையாளங்களை வாங்கிக்கொள்ளும்போது அவைகளால் குறிக்கப்படுகிற காரியமாகிய உள்ளான கிருபையையும் அடையும்படி எனக்கு உதவிசெய்யும். உம்முடைய வார்த்தைகள் ஆவியுமாய் சீவனுமாய் இருக்கின்றன. ஆவிக்குரிய ஆகாரமாகிய உம்முடைய இரட்சிப்பை நான் வாஞ்சித்து, அதின்மேல் பசியும் தாகமும் உள்ளவனாயிருக்கும்படியாக என் குற்றங்களை உணரும் உணர்வையும், கிறிஸ்துவின் கிருபையை விரும்பும் ஆசையையும் உமது பரிசுத்தஆவியானவர் எனக்குத் தந்தருளவேண்டும். கிறிஸ்துவில் உண்டாயிருக்கும் பரிபூரணத்தை நான் இப்பொழுது கண்டு அநுபவிக்கும்படி எனக்குக் கிருபைசெய்யும். அவர் என் தன்மையை ஏற்றுக்கொண்டு என் பலவீனங்களை உணர்ந்து இரங்குகிறவர். அவர் தம்முடைய சீவனை எனக்காக ஒப்புக்கொடுத்த மீட்பர். என்னை உண்டாக்கினவர் என்னைப் புறக்கணியாமல் கெட்டழிந்துபோகிற பாவியாகிய எனக்காகத் தம்முடைய இரத்தத்தைச் சிந்தினார். அவருடைய திரு இரத்தம் சகல பாவமும் போகச் சுத்திகரிக்கும் தன்மையுள்ளது. எங்கள் பாவங்களை நீக்கும் பலி அவரே, பலிசெலுத்தின ஆசாரியரும் அவரே. அவர் என் பாவங்களை நிவிர்த்தி செய்ததுமல்லாமல், இப்பொழுது எனக்காக வேண்டுதல் செய்தும்வருகிறார். அவர் முற்றும் என்னை இரட்சிக்கிறவர். என் அவசரங்களுக்குத்தக்க ஞானமும் வல்லமையும் கிருபையும் அவரிடத்தில் உண்டு. அவருடைய அன்பு அறிவுக்கு மேலானது. இவைகளெல்லாவற்றையும் என் முழு இருதயத்தோ

டே விசுவாசிக்கிறேன், அவர் ஒருவரே என் இரட்சகர். அவர் கட்டளையிட்ட அப்பமும் இரசமுமாகிய இந்த அடையாளங்களின்மூலமாய் ஆண்டவரின் மரண புண்ணியங்களையும் அவருடைய இரட்சிப்பின் பரிபூரணத்தையும் நான் இப்பொழுது கண்டு கிரகித்து எனக்குரித்தாக்கிக்கொள்வேனாக. கிருபையுள்ள மீட்பரே, என் கண்கள் உம்மையே நோக்கிக்கொண்டிருக்கின்றன. நீர் மரித்துத் திரும்ப உயிர்கொண்டு எனக்காகப் பரிந்துபேசுகிறவர். உம்முடைய பிள்ளைகள் கூடிவந்திருக்கும் சபையில் நீரும் வந்திருக்கிறீர். என் ஆத்துமமே, கர்த்தரையும் என் முழு உள்ளமே அவருடைய பரிசுத்த நாமத்தையும் ஸ்தோத்திரி. இவ்வகையாய் நான் தியானம்பண்ணிக்கொண்டு தேவரீரிடத்தில் தரித்திருப்பேனாக. நீரும் உமது ஆவியைத்தந்து இச்சாக்கிரமெந்தின் வழியாய் விசுவாசத்தைக் கொண்டு என்னிடத்தில் வந்து தங்கும். நான் தேவரீரை என் பங்காகவும் என் சந்தோஷமாகவும் என் பலமாகவும் என் செயமாகவும் ஏற்றுக்கொண்டு உம்மோடே ஐக்கியப்படவேண்டுமென்று விரும்புகிறேன். லோக ஆசைகளும் லோக சிந்தைகளும் அற்றுப்போகக்கடவன. நீரே என் ஆத்துமத்துக்கு மெய்யான போசனமாயும் மெய்யான பானமாயும் இருக்கும்படிக்கும், உமது இரட்சிப்பினாலே என் ஆத்துமா சந்தோஷித்து எழுப்புதல் அடைந்து நற்கிரியைகளை நிறைவேற்றுதற்கு பலங்கொள்ளும்படிக்கும், இப்பொழுது என்னைச் சந்திக்க வந்து என்னை ஆசீர்வதித்தருளும்.

## 9.

எசா. ௫௫. ௩. நம்முடைய உடன்படிக்கையைப் பிடித்திரு.

கர்த்தராயிருக்கிற இயேசுக்கிறிஸ்துவின் சுவிசேஷம் மகிமையுள்ள உடன்படிக்கையே. அது கிருபையையும் ஆசீர்வாதத்தையும் உடையதாயிருக்கும் ஊழியம். அது மோசேயின் நியாயப்பிரமாணத்தைப்பார்க்கிலும் விசேஷித்ததாயும், சிறந்த பலியின் மூலமாய் உறுதியாக்கப்பட்டதாயும் இருக்கிறது. இந்தப் புது உடன்படிக்கையே நித்தியமும் குறைவற்றதும்

நிச்சயமுமானது. இவ்வுடன்படிக்கைக்கேற்ற மத்தியஸ்தராகிய இயேசுக்கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே இரட்சிப்புக்குரிய நன்மைகளை நான் பற்றிக்கொண்டு அவைகளை எனக்குரித்தாக்கிக்கொள்வேனாக. ஆழத்தில் அமிழ்ந்து போகிறவன் தனக்கு நீட்டப்பட்ட கோலைப் பற்றிக்கொள்வதுபோல், பாவத்தில் அமிழ்ந்துபோகிற நான் சுவிசேஷத்தின் வழியாய் அருளப்பட்ட தேவ இரக்கத்தைப் பற்றிக்கொண்டு இரட்சிப்படைவேனாக. மற்றெந்த நம்பிக்கையையும் நான் வெறுத்து கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளவும் கிறிஸ்துவுக்குட்பட்டவனாய்க் காணப்படவும் ஆசையாயிருக்கிறேன். கப்பல் சேதப்பட்டிருக்கையில் கடலில் அமிழ்ந்து சாகிறவர்கள் தங்களை இரட்சிக்கும்படி வந்த படகை எவ்வளவு ஆவலோடே பற்றிப் பிடித்து எவ்வளவு சந்தோஷமாய் அதில் ஏறி கரைசேருவார்களோ, அப்படிப்பட்ட ஆவலோடும் அப்படிப்பட்ட சந்தோஷத்தோடும் என் இரட்சகரின் அன்பாகிய படகை நான் பற்றிப்பிடித்து இரட்சிப்பைக் கண்டு கிரகித்துக்கொள்ளுகிறேன். இந்தப் படகே சேதமின்றி மோட்சகரை பிடிக்குமென்று எனக்கு நிச்சய நம்பிக்கையுண்டு. இதிலே அடைக்கலம் புகுந்திருக்கையில் பயமில்லை. கிறிஸ்துவின் இரத்தத்தினாலே உண்டான மீட்பே என் நம்பிக்கை. இந்த நம்பிக்கையொன்றே என்னை வெட்கப்படுத்தமாட்டாது.

## 10.

மல்கி. ௪. ௨. நமது நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்களுக்கு நீதியின் சூரியன் உதிக்கும்.

திவ்விய சூரியனாகிய இயேசுவே! நீர் ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளிப்படுத்தி, பராபரன் அங்கிகரித்த வருஷத்தை உலகத்தாருக்குக் கூறினீர். நீர் நியாயப்பிரமாணத்திற்கேற்ற நீதியின் சூரியனாய் இராமல், சுவிசேஷத்துக்கேற்ற நீதியின் சூரியனாயிருக்கிறீர். எங்கள் சுய நீதியை நீதியல்லவென்று புறக்கணித்து, உமது புண்ணியங்களாகிய சிறந்த நீதியை வெளிப்படுத்தினீர். விசுவாசத்தின் ஒளி

யானவரே! நீர் ஆக்கினைப்படுத்தும் சுடரல்ல, நீர் பட்சிக்கிற அக்கினியுமல்ல, நீர் கிருபையையும் இரக்கத்தையும் பொழிந்து, நல்லறிவாகிய பிரகாசத்தையும் அன்பாகிய அனலையும் உலகத்துக்கு அருளுகிறீர். பராபரன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு எத்தனம்பண்ணினவைகளைக் கண் காணாமலும் காது கேளாமலும் இருதயத்திற்கு அவைகள் தோன்றாமலும் இருக்க, உம்மாலே அவைகளைக் கண்டும் கேட்டும் கிரகித்தும் இருக்கிறோம். நீர் எங்களை அழைத்த நம்பிக்கையின் பாக்கியம் இவ்வளவென்றும் பரிசுத்தவான்களுக்கு நீர் கொடுக்கிற சுதந்தரத்தின் மகிமையின் ஐசுவரியம் இவ்வளவென்றும் நாங்கள் அறியும்படி எங்கள் புத்தியின் கண்களுக்கு வெளிச்சமுண்டாக்குகிறீர். உமது ஒளி எங்கள் இருதயத்தின் அந்தகாரத்தை நீக்குகின்றது. உமது கிரணங்களின் உஷ்டணம் எங்கள் மனக்கடினத்தை உருகச்செய்து எங்கள் மனச்சாட்சியைப் பாவமற சுத்திகரிக்கின்றது. நீர் எங்களுக்கு உதயமாகி புது வானங்களையும் புது பூமியையும் சிருட்டிக்கிறீர். நீர் எங்களையும் புதுச்சிருட்டிகளாகச் சிருட்டித்து, உமது இரட்சிப்புக்குரிய நல்லீவுகளை எங்களுக்கு அருளுகிறீர்.

## 11.

சங்கீதம், ௩௯. ௭. ஆண்டவரே, இப்பொழுது எதற்கு எதிர்ப்பார்க்கிறேன்.

வேண்டிக்கொள்ளுங்கள், அப்பொழுது பெற்றுக்கொள்வீர்கள் என்று தேவகிருபையாய் வாக்குத்தத்தஞ்செய்திருக்கிறார். இந்த வாக்குத்தத்தத்தை நான் விசுவாசித்து, இப்பொழுது அவர் பரிசுத்த மேசையின் அருகே சேர்ந்து, அவருக்குக் காத்திருந்து அவருடைய கிருபையை மன்றாடுகிறேன்.

கர்த்தாவே, என் விசுவாசம் பெருகவேண்டுமென்று எதிர்ப்பார்க்கிறேன். வேத உபதேசங்கள் எல்லாம் எனக்குத் தெளிவாய் விளங்கும்படிக்கும், அவைகளின் நிச்சயத்தை நான் அறிந்து உணரும்படிக்கும், என் மீட்பருடைய புண்ணியங்களில் நான் உயிருள்ள விசுவாசம் வைக்கிறவனாய் அவர்

பந்தியைச் சேரும்படிக்கும், அவரே பாவத்துக்கும் மரணத் துக்கும் என்னை விலக்கி மீட்டு விலையுயர்ந்த தமது இரத்தத்தி னாலே சீவனையும் இரட்சிப்பையும் எனக்காகச் சம்பாதித்தா ரென்கிற நம்பிக்கையில் நான் பெலன்கொள்ளும்படிக்கும் எனக்கு உதவிசெய்தருளும்.

கர்த்தாவே, என் ஆத்தும சத்துருக்களை செயிக்கத்தக்க பலம் கிடைக்கிறதற்கு எதிர்பார்க்கிறேன். நான் பலயீன னென்றும் ஒரு நற்கிரியையையுஞ்செய்ய ஏலாதவனென்றும் உணர்ந்திருக்கிறேன். ஆனாலும் கிறிஸ்துவில் நிலைத்திருந்தால் மிகுந்த பலனைக் கொடுப்பேனென்று நம்பிக்கையாய் இருக் கிறேன். ஆனதால் இச்சாக்கிரமெந்தைக்கொண்டு நான் அவ ரைச் சேர்ந்து அவரில் நிலைத்திருப்பேனாக.

கர்த்தாவே, உமது இரட்சிப்புக்குரிய சம்பூரண ஆசீர்வா தத்திற்காகவும் எதிர்பார்க்கிறேன். என் இருதவயத்தின் சஞ் சலம் நீங்கும்படிக்கும், கிறிஸ்துவின் இரத்தம் எனக்குச் சமா தானத்தையும் இளைப்பாறுதலையும் கூறும்படிக்கும் கிருபை செய்யும். உமது திருமுகத்தின் வெளிச்சம் என்பேரில் பிர காசிக்கவும், என் இருதயம் உமது பிரசன்னத்தினாலே மகிழ வுங்கடவது. என் பாவம் மன்னிக்கப்பட்டதும், என் ஆத்துமம் இரட்சிப்படைந்ததும், நான் கிறிஸ்துவின் சரீரத்தில் பொருத் திவைக்கப்பட்டதும், கிறிஸ்து என்னிடத்தில் வாசம்பண்ணு கிறதும் மெய்யென்று எனக்கு நிச்சயப்படுத்தியருளும்.

கர்த்தாவே, புத்திரசுவிகாரத்தின் ஆவி எனக்குக் கிடைக்கிற தற்கும் எதிர்பார்க்கிறேன். ஒரு பிள்ளை தன் தகப்பனிடத் தில் சேருகிறதுபோல் நான் இப்பொழுது உம்முடைய சன்னிதியில் சேருகிறேன். தேவரீர் என்னில் பட்சம் வைத்து என்னைப் பிள்ளைபோல் நடத்தும். நானும் உம்மைத் தகப்பனென்று ஏற்றுக்கொண்டு கனப்படுத்தி அன்புள்ள பிள் ளையாய் உமக்கு அடங்கி நடக்கும்படி எனக்குக் கிருபைசெய் யும். என் பரமபிதாவே, உமக்கு எதிர்பார்க்கிறேன்,

என்னை வெறுமையாய் அனுப்பிவிடாதேயும். சீவ அப்பந் தந்து என்னைப் போஷித்தருளும்.

கர்த்தாவே, என் நம்பிக்கை உம்மிடத்தில் வைத்திருக்கிறது; எனக்கு நலமானதைத் தாரும்.

## 12.

சங்கீதம், ௰எ. ௩. என் வாய் மீறுதபடிக்குத் தீர்மானம்பண்ணினேன்.

கர்த்தாவே, நான் ஞானஸ்நானம்பெற்றபோது பசாசையும், அதின் கிரியைகள் எல்லாவற்றையும், இந்தப்பொல்லாத உலகத்தின் ஆடம்பரத்தையும், வீண் மகிமையையும், பாவமான மாமிச இச்சைகள் எல்லாவற்றையும் வெறுத்துவிடுவேனென்று தேவரீருக்கும் உமது சபைக்கும் முன்பாக நான் வாக்குக்கொடுத்தும், பலதரம் அந்த வாக்கை மீறி மறந்திருக்கிறேன். இப்பொழுது அந்த வாக்கைப் புதிதாய்க் கொடுக்கவும், மறுபடியும் உமக்குப் பொருத்தனைபண்ணவும் உம்முடைய சன்னிதானத்தில் வந்திருக்கிறேன். கிறிஸ்துமார்க்கப் பிரமாணங்களெல்லாவற்றையும் நான் விசுவாசிக்கிறதாயும், தேவரீருடைய பரிசுத்த சித்தத்தையும் கற்பனைகளையும் கைக்கொள்ளும்படி தீர்மானம்பண்ணுகிறதாயும் நான் அறிக்கையிடும்படி வந்திருக்கிறேன்.

இப்படியிருக்க, உமது இரக்கம் எனக்குக் கிடைக்கவேண்டுமென்று தாழ்மையோடே மன்றாடுகிறேன். நான் இரக்கத்தைப் பெற்றுக்கொள்ள சற்றும் பாத்திரவானல்ல என்றாலும், என் பரமபிதாவாகிய நீர் உம்முடைய பிள்ளைகளோடே என்னைச்சேர்த்து உமது சன்னிதானத்தில் என்னைப் பந்தியிருத்திவானேர் அப்பத்தை எனக்கு அருளுகிறீர். நான் தரித்திரனும் நிருவாணியாயும் ஆதரவற்றவனுயும் இருக்கிறேன். இப்படியிருந்தும் சீர்கெட்ட பாவிகளுக்கு நீர் கொடுக்கிற இரக்கத்தின் ஐசுவரியத்தை நம்பிச் சேருகிறேன்.

உலகத்திலிருக்கிற யாவரோடும் அன்பாயிருந்து சேருகி றேன். நான் ஒருவருக்கும் மனஸ்தாபமுண்டாக்கியிருக்கவி ல்லையென்று எனக்கு நம்பிக்கையுண்டு. உண்டாக்கியிருந்தா லும் அவர்களிடத்தில் என் குற்றத்தை நான் ஒத்துக்கொண்டு பொறுமைகேட்டுஅவர்களைச் சமாதானப்படுத்தியிருக்கிறேன். பிறர் எனக்கு விரோதமாய்ச்செய்த குற்றங்களையும் நான் முழு இருதயத்தோடே மன்னித்திருக்கிறேன். இருதயங்களை ஆரா ய்ந்துபார்க்கிறவரே, இது உண்மையென்று அறிவீர். ஒருகா லத்திலாகிலும் அன்புக்கு விரோதமான யோசனைகள் என்னி டத்தில் எழும்பினால் அவைகளை நான் அடக்கி மேற்கொள் ளும்படி எனக்கு உதவிசெய்தருளும்.

உமது கிருபையை முன்னிட்டு எந்தப் பாவத்தையும் வெறு த்துவிடும்படி தீர்மானம்பண்ணிச் சேருகிறேன். உமது பரிசு த்தஆவி என்னை நடத்தும்படிக்கும், உமது திருவசனம் என் னைப் போதிக்கும்படிக்கும், உமது பிரியமான குமாரன் முற்று முடிய என்னை இரட்சிக்கும்படிக்கும், என் நடக்கை நினைவு கள் சம்பாஷணைகள் இவைகளினாலே நான் உமது பரிசுத்த நாமத்தை மகிமைப்படுத்தும்படிக்கும், என்னை உமது சித்தத் திற்குப் படைத்தொப்புவித்துச் சேருகிறேன். கர்த்தாவே, இரக்கமாயிரும்.

## 13.

லூக்கா, ௨௩. ௩௪. பிதாவே, இவர்களுக்கு மன்னித்தருளும்; தாங் கள் செய்கிறது இன்னதென்று அறியார்கள்.

இரக்கம்நிறைந்த இரட்சகரே, சமாதான கர்த்தரே, என க்கு விரோதிகளாயிருக்கிறவர்களில் நான் இதுமுதல் அன்புள் ளவனாயும், அவர்களை மன்னித்து அவர்களுக்கு நன்மைசெய்து அவர்களுக்காகச் செபம்பண்ணுகிறவனாயும் இருக்கும்படி கட்டளையிட்டருளும். நேசமுள்ள இரட்சகர் விசுவாசத்தின் மூலமாய் வாசம்பண்ணும் இருதயத்தில் பொறாமையும் பகை யும் மூர்க்கமும் வாசம்பண்ணத்தகுமா? தகாதே. நான் உமக்கு

விரோதமாய்ச் செய்த கொடிய பாவங்களை நீர் பொறுமையோடே சகித்து இரக்கமாய் மன்னித்திருக்க, எனக்கு நேரிடும் அற்ப அநியாயங்களை நான் மன்னியாதிருப்பேனாகில் எப்படியிருக்கும்? கிறிஸ்துவே, உம்மிடத்தில் இருந்த சிந்தை என்னிடத்திலும் உண்டாயிருக்கும்படி செய்யும்.

## 14.

க கொரி. ௰க. உ௬. கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைக் கூறுகிறீர்கள்.

கர்த்தருடைய மரணத்தை இச்சாக்கிரமெந்தினாலே கூறுகிறதுமன்றி, அநுதினமும் பாவத்திற்கு மரித்து ஆவியிலே உயிர்கொண்டு அவருடைய மரணத்தைக் கூறவேண்டியது. இயேசு இரட்சகர் இவ்வுலகத்தில் இருக்கும்பொழுது அவர் மாம்சத்திற்கு இளக்காரங்கொடாமல் அதைச் சிலுவையில் அறைந்ததுபோலவும், அவர் லோக இன்பங்கள் சவுக்கியங்களை நாடாமல் உலகத்தார் இரட்சிப்பை நாடினதுபோலவும், பிறருக்குச் சீவனைக் கொடுக்கும்படி அவர் தாமாய்ச் சாவுக்குட்பட்டதுபோலவும், அவருடைய சீஷராகிய நாங்களும் அவருக்கு ஒப்பாய்த் தீங்கநுபவித்து, பிறருக்கு நன்மைசெய்து வரவேண்டும். நாங்கள் தேவனுக்காகச் சாட்சிகளாயிருக்கிறோம். இக்காலத்தில் அவர் சரீரக்கண்ணுக்கு மறைந்திருந்தாலும், நாங்கள் அவரைக் கண்டவர்களாயிருந்தாற்போல அவருடைய சத்தியம் நீதி ஞானம் அன்பை உலகத்தாருக்குக் கூறி அறிக்கையிடுகிறவர்களாய் இருக்கவேண்டியது.

எங்கள் ஆண்டவர் திரும்பிவந்து தம்மை அறிக்கையிட்டவர்களை அறிக்கையிடும்பொழுது எங்களில் வெளிப்படும் மகிமை எவ்வளவு சிறப்பாயிருக்கும்! "அவர் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படி ஒருதரம் பலியிடப்பட்டு தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பைக் கொடுக்கிறதற்கு இரண்டாந்தரம் பாவபலியில்லாமல் தோன்றுவார்." அவருடைய நாமத்தினாலே கூடி நற்கருணை வாங்கும்

போதெல்லாம் தாங்கள் பெற்றனுபவிக்கும் ஆவிக்குரிய கிருபை அவருடைய இரண்டாம் வருகைக்கும், எங்கள் உயிர்த்தெழுதலுக்கும்,மோட்ச சுதந்தரத்திற்கும் அத்தாட்சியும் முத்திரையுமாயிருக்கிறது. நாங்கள் மெய்விசுவாசிகளாயும் இந்தச் சாக்கிரமெந்தின் வழியாய்க் கிறிஸ்துவோடே ஐக்கியப்படுகிறவர்களாயுமிருந்தால், கொஞ்சக்காலத்தில் இவ்வுலகத்தைவிட்டு ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணவீட்டில் விருந்தராகச் சேர்வோமே. அப்போது மகிமையுள்ள சரீரங்களையுடையவர்களாயும், சகல பாவமும் அசுத்தமும் நீங்க மாசற்ற பரிசுத்தமும் குறைவற்ற பாக்கியமும் உள்ளவர்களாயும் இருப்போம்.

அருமை இரட்சகரே, நாங்கள் உம்முடைய வருகைக்கு ஆவலுடனே எதிர்ப்பார்க்கும்படிக்கும்,நீர் பிரசன்னமாகும் சிறந்த நாளுக்கு நாங்கள் ஆயத்தம்பண்ணிக்கொண்டு விழித்துச் செபம்பண்ணும்படிக்கும் உமது ஆவியை எங்களுக்குத் தந்தருளும்.

---

நற்கருணை வாங்கித் தான் இருந்த இடத்திற்குத் திரும்பிப்போய் ௱௪௰ம் பக்கமுதல் கண்டிருக்கும் தோத்திரங்களையும் செபங்களையும் செய்து, பின்பு சமயங்கிடைத்தால் இதின் அடியிற் கண்டிருக்கும் தியானங்களை வாசிக்கவேண்டியது.

## 1.

உன்னதப்பாட்டு, ௨. ௩. அவர் நிழலிலே வாஞ்சையாய் உளுக்கார்ந்தேன். அவர் கனி என் ருசிக்கு மதுரமாயிருந்தது.

ஆண்டவர் என் விண்ணப்பத்திற்குச் செவிகொடுத்து நிர்ப்பந்தமான பாவியாகிய எனக்குத் தமது சரீர இரத்தத்தின் ஐக்கியத்தையும் ஆவிக்குரிய ஆறுதலையும் அருளிச்செய்திருக்கிற கிருபை மிகுதியே. எனக்காகக் காயப்பட்டு மரித்தவரை அன்போடே நினைத்துக்கொண்டேன். பிறரை நேசித்து அவர்கள் ஈடேற்றத்தை விரும்பும்படி என் இருதயம் என்னை யேவிவிட்டது. அப்பத்தை வாங்குகையில் விசுவாசத்தால் நன்றியறிதலோடே கிறிஸ்துவை எனக்கு ஆகாரமாக்கிக்கொள்ள

வும், பாத்திரத்தில் பானம்பண்ணுகையில் அவருடைய இரத்தத்தினலே சம்பாதிக்கப்பட்ட விலைமதியாத நன்மைகளையும், அவருடைய அன்புக்கு அத்தாட்சியான வரங்களையும் பெற்றனுபவிக்கவும், சாவாச் சீவனைச் சுதந்தரிப்பேன் என்கிற நம்பிக்கையினலே களிகூர்ந்து பூரிக்கவும், தேவரீர் எனக்குக் கிருபை செய்தது எவ்வளவு ஆனந்தம்! ஆத்துமமே, இனி நீ உன்னதத்தில் ஏறி உன் இரட்சகராகிய பராபரனைத் தரிசித்து, அவருக்குக் கனமும் மகிமையும் என்றென்றைக்கும் உண்டாவதாகவென்று வானேரோடே துதித்துப் பாடுவாயென்கிற நம்பிக்கை உனக்குக் கிடைத்தபடியினலே கர்த்தனை ஸ்தோத்திரி. என் ஆத்துமாவே, என் முழு உள்ளமே, கர்த்தனை ஸ்தோத்திரி. இப்பொழுது எனக்குக் கிடைத்த திவ்விய உதவியினலே நான் ஆவியில் பெலன்கொண்டு என் ஆத்துமத்தைக் கெடுக்கப்பார்க்கிற கொடிய சத்துருக்களை நான் போர்செய்து செயித்துக்கொள்ளும்படி எனக்குக் கிருபைசெய்தருளும். வென்றவனுக்காக வைத்திருக்கிற மகிமையுள்ள கிரீடத்தை நான் வாஞ்சித்து அதைப் பெறும்படி மற்றெல்லாவற்றையும் வெறுத்து வீரியமாய்ப் போராடுவேனுக. கர்த்தருக்குள் சந்தோஷப்படுதல் எனக்குப் பலமாயிருக்கக்கடவது. இந்தப் போசனத்தின் பலத்தினலே பராபரனுடைய பர்வதமட்டும் நான் நடக்கும்படி கிருபைசெய்யும்.

## 2.

பிலிப்பியர், ச. ச. கர்த்தருக்குள் சந்தோஷமாயிருங்கள்.

கர்த்தாவே, நான் உமது அதிசயமான கிருபையையும், உமது உருக்கமான இரக்கங்களின் ஏராளத்தையும், உமது தயவின் பெருக்கத்தையும் சிந்தித்துணர்ந்து எப்பொழுதும் உம்மிடத்தில் சந்தோஷமாயிருக்கும்படி செய்யும். நீர் எனக்கு அருளின ஆசீர்வாதங்களும் இரக்கங்களும் எத்தனை! நிர்ப்பாக்கியமுள்ள பாவியாகிய நான் சுவிசேஷத்துக்குரிய மகிமையுள்ள நம்பிக்கையை அடைந்திருக்கிறதும், என் பாவங்கள் இனி

நினைக்கப்படாதபடி எனக்கு மன்னிப்புக் கிடைத்ததும், நான் கர்த்தருடைய ஊழியக்காரரோடே அவருடைய பந்தியைச் சேர எனக்குக் கிருபை அருளப்பட்டதும், பந்தியிருக்கையில் ஆவிக்குரிய சந்தோஷத்தையும் தேவசமாதானத்தையும் நான் பெற்று அனுபவித்திருக்கிறதும் உம்முடைய இரக்கமே. இப்படிப்பட்ட விசேஷித்த நன்மைகளை அடைந்ததினாலே நான் நன்றியறிதலுள்ளவனாய் இருக்கவேண்டியது. ஆத்துமாவே, இனி நீ கிறிஸ்து இரட்சகருடைய கிருபையினாலே அவருடைய மோட்சபதவி அடைந்து, "ஆகாதவர்கள் கலங்கடிக்குதலை விட்டோய்ந்திருக்கும் இடத்திலும், விடாய்த்துப்போனவர்கள் இளைப்பாறும் ஸ்தலத்திலும்" பிரவேசித்து, பாவமற்று சோதனைகள் துன்பங்களில்லாமல், சதாகாலமாய் ஆனந்தமடையும் நாள் பிறக்கும் என்று உண்மையாய் நம்புகிறாயா? அப்படியானால் இந்த நன்னம்பிக்கையால் உண்டாயிருக்கிற திவ்விய ஆறுதலுக்காக நீ சந்தோஷக் கீர்த்தனங்களைப் பாடிக்கொண்டு உன் பரமபிதாவாகிய பராபரனுக்குத் தோத்திரஞ் செலுத்து.

கர்த்தாவே, நான் உமக்குள் சந்தோஷப்படுகிறவனாயிருக்கிறது நிச்சயமானால் லோக சந்தோஷங்களை நான் வெறுக்காமலிருக்கிறதென்ன? இனி ஒருபோதும் என் பரமபிதாவுக்கு விரோதமாகப் பாவஞ்செய்யாமலும், இரக்கமுள்ள இரட்சகருக்கு விசனம் உண்டாக்காமலும், தேற்றரவாளனாகிய பரிசுத்தஆவியைத் துக்கப்படுத்தாமலும், நான் அழைக்கப்பட்ட பரிசுத்த அழைப்புக்கு அபாத்திரனாய் நடவாமலும், நான் தரித்த மகிமையான நாமத்துக்கு அவகீர்த்தி உண்டாக்காமலும் இருக்கும்படி எனக்குக் கிருபைசெய்யும்.

கர்த்தாவே, நான் இன்றைக்கும் என்றைக்கும் உமக்குள் சந்தோஷமாயிருக்கும்படி என்னைப் பாவத்துக்கு விலக்கிக் காரும்.

## 3.

[பராக்காயிருந்தவர்கள் வாசிக்கத்தக்க தியானம்.]

*யோபு, ௨௩. ௩. ஆ! நான் அவரைச் சந்திக்கும் இடத்தை அறிந்தேனாகில் நலமாயிருக்கும்.*

இன்றைக்கு நற்கருணை வாங்குகையில் நான் அன்பும் நல்லுணர்வும் பரிசுத்த விருப்பங்களும் இல்லாமல் என் இருதயம் குளிர்ந்திருந்ததே. உலக சிந்தனைகள் மேற்கொண்டன. இதினாலே நான் கிறிஸ்துவையும், அவருடைய அன்பையும், பாவத்தின் அருவருப்பையும், பரிசுத்தத்தின் இனிமையையும் கண்டுணராமலும் ஆசீர்வாதம் பெறாமலும்போனேன்.

கர்த்தாவே, உமக்குமுன்பாக நான் விழுந்து பணிந்து என் குற்றத்தை அறிக்கையிடுகிறேன். உம்முடைய தயவைப் பெற்றுக்கொள்வதற்குத் தடையாயிருந்த என் அவிசுவாசத்தை எனக்கு மன்னித்து, என்னிடத்தில் சீர்கேடாயிருக்கிற குணங்களை மாற்றி என்னைச் சீர்ப்படுத்தியருளும். உம்மிடத்தில் ஒரு நன்மையையும் பெற்றுக்கொள்ள நான் பாத்திரவானல்ல. கோபாக்கினையே பெற்றுக்கொள்ளப் பாத்திரனாயிருக்கிறேன். ஆனாலும் ஆண்டவரே, பூர்வ நாட்களையும், நீர் முன்னே தந்தருளின இரக்கங்களையும் நினைத்து முற்றிலும் என்னைக் கைவிடாதேயும். கர்த்தாவே, என்னைத் தண்டித்தாலும் நான் அவமாய்ப் போகாதபடிக்கு உம்முடைய கோபத்தினாலே தண்டியாமல் மட்டாய்த் தண்டியும். உமது தரிசனத்தின் ஆறுதலையும், உமது இரட்சிப்பின் சந்தோஷத்தையும் எனக்குத் திரும்பவும் கட்டளையிடும். நீர் நீதியாய் என்னைத் தண்டிக்கும்போது நான் சலிப்படையாமல், கிருபைபெறத்தக்க எத்தனங்களின் வழியாய் உமது கிருபையைத் தேடிக்கொண்டே வரும்படிக்கும், உமது ஆசீர்வாதம் கிடைக்குமட்டும் வேண்டுதலினால் போராடிக்கொள்ளும்படிக்கும் கிருபைசெய்யும். நீர் ஞானமும் இரக்கமுமுள்ள தகப்பனே. "தகப்பன் பிள்ளைகளுக்கு இரங்கு

கிறதுபோல் தேவரீர் உமக்குப் பயந்தவர்களுக்கும் இரங்குகிறீர். நாம் இன்ன உருவென்று அறிவீர். நாம் மண்ணென்று நினைவுகூருகிறீர்.''

கர்த்தாவே, நான் உமது சத்தியத்திலே நடப்பதற்கு உமது வழியை எனக்குப் போதியும். உமது நாமத்திற்குப் பயந்திருப்பதற்கு என் இருதயத்தை ஒருமுகமாக்கும்.

## 4.

[ஆறுதலடையாதிருக்கிறவர்கள் வாசிக்கத்தக்க தியானம்.]

மீகா. எ. ௰௮, ௰௯. அக்கிரமத்தை நீக்கிவிட்டு, தமது சுதந்தரத்தில் மீதியானவர்களுக்கு மீறுதலை மன்னித்துவிடுகிற தேவரீரைப்போல் ஒத்த தேவன் யார்? எங்கள் அக்கிரமங்களை அடக்கி, எங்கள் பாவங்களையெல்லாம் சமுத்திரத்தின் ஆழங்களில் போட்டுவிடுவார்.

நான் பந்தியிருக்கையில் ஆறுதலையும் சந்தோஷத்தையும் அடையாமல் போனேன். என் பாவம் நீங்காதிருக்கிறதால் வெட்கப்பட்டுத் துக்கிக்கிறேன். ஆனாலும் மேற்சொல்லிய வேதவாக்கியம் என் விசாரங்களை நீக்கி எனக்கு ஆறுதல் உண்டாக்கத்தக்கது. என்னைப்பார்க்கிலும் பெரிய குற்றவாளி ஒருவனுமில்லை. வீண்பெருமையும் பொருளாசையும் சிற்றின்பமுமாகிய இம்மூன்று சத்துருக்கள் ஒவ்வொன்றாய் என்மேலே பாய்ந்து என்னைக் காயப்படுத்தின. இயேசுவே, எங்கே ஓடுவேன்? உம்மிடத்தில் அல்லாமல் எங்கே அடைக்கலம் புகுவேன்? உமது சிலுவையின் மறைவில் நான் ஒதுங்கி உமது காயங்களில் ஒளிக்கிறேன். இவ்விடத்தில்மாத்திரம் அக்கிரமம் நீக்கிவிடப்படும். இங்கேமாத்திரம் உம்முடைய சுதந்தரத்தில் மீதியானவர்களுக்கு மீறுதல் மன்னிக்கப்படும்.

என் தேவனே, இந்த வாக்கியத்தில் சொல்லியபடி என் அக்கிரமங்களை அடக்கிக்கொள்ளும். உமது கரம் சர்வத்துக்கும் நல்லது. உமது கரமே என் அக்கிரமங்களை மேற்கொள்ளக்கூடும். நான் பாவத்தோடே போராடிவருகையில் நீரே

வெற்றிதருவீரென்று உம்மை நோக்கிப்பார்க்கிறேன். என்னில் அன்புவைத்தவரினிமித்தம் நான் முற்றிலும் வெற்றி சிறக்கும்படியாக நீர் எனக்காகப் போராடவேண்டும், என்னிடத்திலும் போராடும்.

## 5.

யோவான், உக. ௰௫. ஆண்டவரே, நான் உம்மிடத்தில் அன்பாயிருக்கிறதை நீர் அறிந்திருக்கிறீர்.

ஆத்துமாவே, நீ இயேசுவையும் அவருடைய அன்பையும் பிரதான முக்கியமாய்ச் சிந்தித்துக்கொள். அவரை உனக்கு ஞாபகப்படுத்தும் எத்தனங்களெல்லாம் உனக்கு அருமையாயிருக்கவேண்டியது. கிறிஸ்துவின் சிலுவையை அறிந்திருப்பது உனக்குப் பிரதானமான அறிவாயும் முக்கியமான மகிமையாயும் இருக்கக்கடவது. சிலுவையில் அறையுண்ட இயேசுவையல்லாமல் வேறொன்றையும் அறிவதில்லையென்று தீர்மானம்பண்ணு. என் இரட்சகரே, என் ஆத்துமத்தைச் சிநேகிக்கிறவரே, உம்மைத் தேடுவேன். உமது அன்புக்கேற்கும் அன்போடே நான் உம்மை நேசிக்கும்படி உதவிசெய்யும். உம்முடைய அன்பை என்னுடைய இருதயத்தில் பதித்து எழுதும். நாங்கள் முந்தி இரட்சகரில் அன்புகூரவில்லை. அவரே முந்தி எங்களில் அன்புகூர்ந்தார். அவருடைய அன்பு ஒருபோதும் குறையவில்லை. தம்முடையவர்களைச் சிநேகித்தவர் முடியவும் அவர்களைச் சிநேகித்தார். அவர் எங்களைக் கவலையோடே தேடினதும், பட்சமாய்ப் போதித்ததும் இரக்கமான அற்புதங்களைச் செய்ததும் போதாதோ? தம்முடைய இரத்தத்தையும் சிந்தவேண்டியதாயிற்று. அவருடைய இரத்தம் சிந்தப்பட்டதை நாங்கள் பார்க்கும்பொழுது எங்கள் கல்நெஞ்சு உருகவேண்டும். என் மீட்பரே, இவ்வளவு உருக்கமாய் என்னை நேசித்தவரே, என்னிடத்தில் நேசத்தீயைப் பற்றிஎரியும்படிசெய்யும். நான் உமது அன்பினாலே நிறைந்தால் எந்தத் துன்பமும் துன்பமல்ல, மரணமும் பயங்கரமாயிராது. அவ்வன்பினாலே

நான் நிறைந்தால், "ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மிடத்தில் அன்புகூருகிறதையும் அறிந்திருக்கிறீர்" என்று சொல்லக்கூடும்.

## 6.

சங்கீதம், ௰௭. ௫. என் காலடிகள் பிசகாதபடிக்கு என் நடைகளை உம்முடைய வழிகளில் நடப்பபடுத்தும்.

அருமையான இயேசுவே, நீர் விசுவாசத்தை ஆரம்பிக்கிறவராயும் முடிக்கிறவராயும் இருக்கிறீர். நீர் நேற்றும் இன்றும் என்றைக்கும் ஒரே சீராயிருக்கிறீர். உமக்குப் பயந்தவர்களுக்கு ஆகாரங்கொடுக்கிறீர். உமது உடன்படிக்கையை என்றென்றைக்கும் நினைக்கிறீர். என் நற்குணமோ விடியற்காலத்தின் மேகம்போல் சீக்கிரமாய் நீங்கிப்போகிறது. என் பத்தியும் ஒரு நிழலைப்போல ஓடுகிறது. கர்த்தாவே, இச்சமயத்தில் நான் கொடுத்த வாக்குகளை முன்போல நான் சீக்கிரமாய் மீறாமலும், என் பொருத்தனைகளை மறவாமலும், நான் அடைந்த ஆறுதலை இழந்துவிடாமலுமிருக்கும்படி உம்முடைய நிலைவரமான ஆவியைக்கொண்டு என்னை உறுதிப்படுத்தும். என் காலடிகள் பிசகாதபடி செய்யும்.

கிருபையுள்ள இரட்சகரே, நீர் இடைவிடாமல் எனக்கு நன்மைசெய்கிறவர். உமது அன்பு என்றைக்குமுள்ளது. உமது இரக்கங்களும் உமது வரப்பிரசாதங்களும் எவ்வளவு அருமை! அப்படியிருந்தும் நான் உம்மை மறந்து நன்றிகேடாய் நடந்திருக்கிறேன். என் பலவீனத்தை நான் அறிந்திருப்பதால் இனிமேலும் உம்முடைய வழிகளை நான் விட்டு விலகுகிறதாயிருக்கும் என்று அஞ்சுகிறேன். என் ஆத்தும சத்துருக்களுடைய வல்லமையும் வஞ்சகமும் எனக்குப் பயமுண்டாக்குகின்றன. இதற்குமுன் நான் அநேகந்தரம் மதிகேட்டுக்குத் திரும்பினதைக்குறித்துத் துக்கித்து வெட்கப்படுகிறேன். இரக்கமுள்ள மீட்பரே, ஒருபோதும் என்னை என் மனதுக்கு ஒப்புக்

கொடாதேயும். நான் செய்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்றும்படி இடைவிடாமல் உமது கிருபையை எனக்குத் தாரும். மறதியையும் அவபத்தியையும் என்னைவிட்டகற்றும். நான் உமது கிருபையினாலே பெற்றுக்கொண்ட நன்மைகளைப் பத்திரமாய்க் காப்பாற்றிக்கொண்டு, நாளுக்குநாள் அவைகளைப் பெருகச்செய்யும்படிக்கும், மரணபரியந்தம் நான் உண்மையுள்ளவனாயிருக்கும்படிக்கும், கடைசிநாளிலே உமக்குமுன்பாக நிற்கும்பொழுது உம்மிடத்தில் நித்திய சீவகிரீடத்தைப் பெற்றுக்கொள்ளும்படிக்கும் எனக்குக் கிருபைசெய்தருளும்.

தேவாலயத்தைவிட்டு

வீட்டுக்குத் திரும்பிப்போயிருக்கும்பொழுது செய்யத்தக்க

# செபத்தியானங்கள்.

---

## தியானம்.

ஆத்துமாவே, நீ இன்றைக்குப் போன இடத்தையும், நீ செய்த விசேஷங்களையும் சிந்தித்துக்கொள். இன்றைக்கு இயேசு இரட்சகரின் சமுகத்தில் போயிருந்தாய்; பராபரனுக்கும் தேவதூதர்களுக்கும் மனிதர்களுக்கு முன்பாக இயேசுவை உன் ஆண்டவரென்று அறிக்கையிட்டு, அவருடைய ஊழியத்திற்கு உன்னைப் படைத்தொப்புவித்தாய். அவர் உனக்கருளின நன்மைகள் வாக்குகளினிமித்தம் களிகூர்ந்தாலும், நடுக்கத்துடனே களிகூரு. இன்றைக்கு அவருடைய வீட்டிலே போசனபானம்பண்ணினவர்கள் நினையாத நேரத்தில் அவருடைய நியாயஸ்தலத்திலே நிற்கவேண்டியதாயிருக்கும். இன்றைக்கு அவரைச் சந்தித்தவர்களில் சிலர் இனி அவரைச் சந்திக்கும்போது உயிருள்ளோரையும் மரித்தோரையும் நடுத்தீர்க்கும்படி சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறவராக அவரைக் காண்பார்கள். வருங்காலத்திற்கு ஆயத்தம்பண்ணிக்கொள்.

இயேசு இரட்சகருடைய மரணப்பாடுகளை நீ எப்படிப்பட்ட மனதோடே நினைத்தாய்? நன்றியறிதலும், பரிசுத்த அன்பும், உண்மையான துதியுமாகிய பலிகளை அவருக்குச் செலுத்தினாயா? அவருடைய அன்புக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்றெண்ணித் தகாத நடக்கைகள் யாவையும் வெறுத்துத் தள்ளி, உன்னை அவருக்கு ஆலயமாகும்படி பிரதிஷ்டைசெய்தாயா? அவர் வரும்பொழுது நீதியும் மெய்ப்பரிசுத்தமுமாகிய தம்முடைய சாயலை உன்னிடத்தில் காணும்படியாக நீ இடைவிடாமல் அவரை நோக்கி அவரைச் சிந்தித்துக்கொண்டு அவரு

டைய மாதிரியைப் பின்பற்றவேண்டியது. அநேகர் இதை நினையாமல், அவர் வரும்நாளிலே, கர்த்தாவே, உம்முடைய சமுகத்தில் போசனபானம்பண்ணினோம், எங்கள் வீதிகளிலும் உபதேசித்தீர் என்று சொல்லும்போது, அவர் இவர்களை நோக்கி: நான் உங்களை அறியவில்லை; அக்கிரமக்காரரே, என்னைவிட்டகன்றுபோங்கள் என்பார். ஆனபடியினாலே, இதுமுதல் உன் பலத்தைச் சாராமல், அவருடைய பலத்தினாலேயும் அவருடைய கிருபையைக்கொண்டும், நீ பாவத்துக்கு எதிர்த்துநின்று, அவருடைய பந்தியிலே பண்ணின பொருத்தனைகளை நிறைவேற்றி, மெய்விசுவாசத்தையும், பரிசுத்த அன்பையும், இச்சையடக்கத்தையும், பத்திவயிராக்கியத்தையும் மென்மேலும் அடைந்து, சன்மார்க்கநடக்கையில் வளர்ந்தேறி வரும்படி கருத்துள்ளவனாயிரு. கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன், நான் ஒருக்காலும் கலங்காதபடி செய்யும்.

## செபங்கள்.

### 1.

பரிசுத்த பிதாவாகிய சர்வவல்லமையுள்ள தேவனே, உமக்கு மகிமையும் தோத்திரமும் உண்டாவதாக. நான் இன்றையத்தினத்தில் உம்முடைய சன்னிதியில் சேர்ந்து கர்த்தராயிருக்கிற இயேசுக்கிறிஸ்துவின் மரணப்பாடுகளை நினைக்கும்படி தேவரீர் கிருபைசெய்ததற்காகவும், இவ்வகையாய் எனக்கு அருளின ஆறுதல் எழுப்புதல் ஞான ஆகாரத்திற்காகவும் உமக்குத் தோத்திரம். உம்முடைய பந்தியைச் சேர்ந்திருக்கும்போது உமது ஆவியானவருடைய உதவியினாலே உம்முடைய சித்தத்திற்கேற்றபடி செய்தேனேயாகில், நான் அதற்காகக் கிறிஸ்து இயேசுவைக்கொண்டு உம்மைத் துதிக்கிறேன்; உம்முடைய திருப்பார்வைக்கேலாமல் செய்த யாவையும் எனக்கு மன்னிக்கவேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளுகிறேன். உம்முடைய நன்மைகளின் அருமையை நான் உணராமலும், கிறி

ஸ்துவின் இரட்சணிய அன்புக்கேற்கும் நன்றியறிதலோடே அவரை நினையாமலும்போனேன். என் நினைவுகள் கிரியைகள் அனைத்தும் நான் இப்பொழுது செய்த பணிவிடையும் பாவத்தினாலே தீட்டுப்பட்டன. ஆனாலும் நான் இன்றைக்கு நினைவுகூர்ந்திருக்கிற கிறிஸ்து இயேசுவின் மரண புண்ணியங்களினாலே மற்றெல்லாக் குற்றங்களும் நிவிர்த்தியாகிறதுமல்லாமல், உம்முடைய சமுகத்தில் பந்தியிருக்குந்தருணத்தில் என்னிடத்தில் நீர் கண்ட குற்றங்குறைவுகளும் நிவிர்த்தியாகுமென்று நம்பிக்கைக்கொண்டிருக்கிறேன். தயவுள்ள கர்த்தாவே, சர்வலோகத்தின் பாவங்களுக்காகச் செலுத்தப்பட்ட பலிநிமித்தம் என் குற்றங்கள் யாவையும் பொறுத்து என்னை ஏற்றுக்கொண்டருளும்.

நான் எனக்கென்று பிழையாமல், எனக்காக மரித்தவருக்கென்று பிழைக்கும்படி கிறிஸ்துவின் அன்பு என்னை நெருக்கி ஏவிவரும்படிக்கும், என் நடக்கை இன்றைக்குமாத்திரம் சீர்திருந்தாமல், என்றைக்கும் தேவபத்தியும் பரிசுத்தமும் அன்புமுள்ளதாய்ச் சீர்திருந்தும்படிக்கும் கட்டளையிட்டருளும். நான் தேவரீருக்குச் சொன்ன பொருத்தனைகள் என்மேலிருக்கிறதென்றும், அந்நியருக்கு நான் ஆளாயிராதபடி உமக்கே உரியவனானேனென்றும் அறிந்து, நான் பராபரனுடைய பிள்ளையாயும் மோட்சசுதந்தரனாயும் நடக்கும்படி எனக்குக் கிருபைசெய்யும். இதுமுதல் தேவரீர் என்னோடேயிருந்து, என் விசுவாசம் பெருகும்படி செய்து, என் இருதயத்தில் அன்பாகிய அனலையுண்டாக்கியருளும். நான் முன்பார்க்கிலும் என் ஆத்தும சத்துருக்களைக்குறித்து எச்சரிக்கையுள்ளவனாயும், முன்னிலும் தாழ்மையும் இச்சையடக்கமும் தெளிந்தபுத்தியும் பத்திவயிராக்கியமும் உள்ளவனாயும், என்னிமித்தம் தமது ஜீவனைக் கொடுத்தவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்றெண்ணுகிறவனாயும் இருக்கும்படி எனக்குக் கிருபை செய்தருளும்.

நான் கிறிஸ்துவோடே மெய்யாய் ஐக்கியப்பட்டு, அவருடையஞானசரீரமாகியதிருச்சபையில்பொருத்திவைக்கப்பட்டிருக்கிறேனென்று விளங்கத்தக்கதாக மோட்சபாதையில் நடக்கிறதற்கு எனக்கு வேண்டியவைகள் எல்லாவற்றையும் நான் கிறிஸ்துவினிடத்திலே கேட்டுப் பெற்றுக்கொள்ளும்படிக்கும், அவரிடத்திலிருந்த சிந்தையையுடையவனாகி, அவர் எழுதிவைத்த சட்டத்தைப் பார்த்துப் படித்து, அவருடைய அடிச்சுவடுகளில் நடக்கும்படிக்கும், நான் அவருடையவர்களெல்லாரையும் சிநேகித்து, அவர்கள் பலவீனங்களைச் சகித்து, அவர்களுக்கு அன்பான ஊழியங்களைச் செய்துகொண்டுவரும்படிக்கும் எனக்குக் கட்டளையிடும்.

இரக்கமுள்ள பிதாவே, கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக்கொண்டவர்களெல்லாரும் அவரிட்ட கடைசிக் கட்டளையின்படி விசுவாசமும் சந்தோஷமுமுள்ளவர்களாய் அவருடைய பந்தியில் விருந்தராய்ச் சேர்ந்து, அவருடைய அன்பை நினைத்துக் கொண்டாடத்தக்க நல்லகாலம் சீக்கிரமாய் நிறைவேறும்படியாக தேவரீர் கிருபைசெய்தருளவேண்டுமென்று ஆவலோடே விண்ணப்பம்பண்ணுகிறேன். பூமியின் கடையாந்தரங்களிலுள்ள அனைவரும் இயேசுவின் மூலமாய் இரட்சிப்படையுங்காலம் எப்போது பிறக்கும்! எந்தச் சனங்களும் இயேசு இரட்சகனை அறிந்து நேசித்துச் சேவிக்கிறவர்களாகும்படிக்கும், சூரியன் உதிக்கும் திசைதுவக்கி அது அஸ்தமிக்கும்திசைமட்டும் அவருடைய திருநாமத்திற்குத் தூபமும் சுத்தமான காணிக்கையும் செலுத்தப்படும்படிக்கும், தீர்க்கதரிசனங்களில் குறித்த காலம் சீக்கிரமாய் வரும்படி கட்டளையிட்டருளும். தயவுள்ள கர்த்தரே, உம்முடைய நாமத்தின் மகிமை விளங்கவும், உமது கிருபையுள்ள வாக்குத்தத்தங்கள் நிறைவேறவும், உமது வல்லமையைக்கொண்டு எழுந்தருளி உம்முடைய இராச்சியத்தை எங்கும் நிலைநிறுத்தும். எங்கள் ஒரே மத்தியஸ்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தமே. ஆமென்.

## ௨.

பரமபிதாவே, தேவரீர் இன்றைக்கு உம்முடைய பரிசுத்த பந்திக்கு என்னை அழைத்து, உமது குமாரன் எனக்காக மரித்த அன்பை எனக்குக் காண்பித்தீர். அவர் மூலமாய் நீர் என்னோடே ஒப்புரவாயிருக்கிறதாயும், இம்மையில் என்னிடத்தில் வாசம்பண்ணி மறுமையில் நித்திய சந்தோஷம் அருளிச்செய்யும்படி நீர் தீர்மானித்திருக்கிறதாயும் உமது வார்த்தையைக் கொண்டு தேவரீர் எனக்கு அறிக்கைபண்ணினதுமன்றி, இவைகளை எனக்கு நிச்சயப்படுத்தும்படிக்கு உமது குமாரனுடைய சரீர இரத்தத்தை அத்தாட்சியாகவும், ஆத்தும ஆகாரமாகவும் எனக்குத் தந்தருளினீர். இந்த நன்மைகளுக்காக உமக்குத் தோத்திரம். அருமையான இரட்சகரே, இந்த உபகாரங்களுக்காக எந்த ஈடு செலுத்துவேன். உமது அன்புக்காக உமக்குப் பதில் செலுத்தக்கூடுமோ! கூடாதே. உமது அன்பின் அதிசயத்தைக்குறித்துப் பிரமித்து, அதின் மகத்துவத்தை என்றென்றைக்கும் சொல்லுவேன். உம்மை உயர்த்தும் கீர்த்தனங்கள் எப்பொழுதும் என் வாயிலிருக்கும். உமது கிரியைகளின் புகழ்ச்சியைக் கெம்பீரித்து விவரிப்பேன்.

தயவுள்ள கர்த்தாவே, உமது ஈவுகள் விலைமதியாத அருமையுள்ளவைகள். அவைகளின் அருமையை நான் உணராத குற்றத்தையும், உம்மைத் துதியாத குற்றத்தையும், எல்லாக் குற்றத்தையும் எனக்கு மன்னித்து, உமது இரக்கங்களுக்கேற்ற சிந்தையையும் ஞான சந்தோஷத்தையும் எனக்கு அருளிச்செய்யும். தேவரீர் இச்சமயத்திலே என்னோடே பண்ணின சமாதான உடன்படிக்கையையும், நீர் முத்திரையோடே அருளின வாக்குத்தத்தங்களையும், நான் உம்மிடத்தில் பெற்றநுபவித்த கிருபையுள்ள ஈவுகளையும் புதுச்சீவனுள்ளவனாய் நடப்பேனென்று இன்றைக்குத் தீர்மானம்பண்ணின உறுதியையும் நான் ஒருக்காலும் மறவாமல், எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு மரணபரியந்தம் உண்மையுள்ளவ

ணய் நடக்கும்படி எனக்கு உதவிசெய்தருளும். என்னிடத்தில் நற்கிரியையைத் துடங்கினவரே, இயேசுக்கிறிஸ்துவின் நாள் பரியந்தம் அதை முடிய நடத்திவருவீராக. உமது ஆவியே எனக்கு உயிராயும், உமது கிருபையே எனக்கு ஆறுதலாயும், உமது பலமே எனக்குக் காவலாயும் இருக்கும்படி செய்யும். என் பலவீனமும் என் இருதயத்தின் கபடும் தேவரீருக்குத் தெரியும். உம்முடைய உதவி எனக்கு இல்லாமல்போனுல் நான் வெறுத்த பாவங்கள் மறுபடியும் என்னை ஆண்டுகொள்ளும். என் இருதயத்தை நான் தேவரீருக்கு ஒப்புக்கொடுத்திருந்தும், அது மறுபடியும் உம்மை விட்டு வழுவிப்போகத்தக்கதே. நான் ஒவ்வொரு காற்றினுலும் அசைகிறவனுயும் ஒவ்வொரு வஞ்சனைக்கும் உட்பட்டு மயங்குகிறவனுயும், ஒவ்வொரு சோதனையாலும் வெல்லப்படுகிறவனுயும் இருக்கிறேன். நான் நிலையற்று மாறுகிறவன். என் தேவனே, நீர் நேற்றும் இன்றும் என்றைக்கும் ஒரே சீராயிருக்கிறபடியினுலும், பலவீனத்தில் பலமுண்டாக்குகிறவராயிருக்கிறபடியினுலும், உமது சத்தியத்திலும் உம்மை வணங்கும் பத்தியிலும் என்னை உறுதிப்படுத்தும். முறிந்த நாணலுக்கும் இளங்கிளைக்கும் ஒப்பாயிருக்கிற என்னைப் பலப்படுத்தி நிலைநிறுத்தும். நான் எகிப்தைவிட்டு சற்றுத் தூரம்மாத்திரம் பிரயாணமாய் வந்த இஸ்ரவேலன். இது மட்டும் என்னை வழிநடத்தி விசாரித்தவரே, நித்திய இரக்கங்களையுடைய பிதாவே, வனுந்தரத்தில் என்னை விட்டுவிடாதேயும். நான் இனி உமது வழிகளை மறந்து அலையாதபடிக்கு என்னை நடத்திக் காத்துக்கொள்ளும். உமது பாடுகளினுலே எனக்குச் சீவனைத் தந்தீரே. அந்தச் சீவனைத் தேவரீர் காத்து அதை நித்தியசீவனுகும்படி சீவ அப்பம் தந்து என்னைப் போஷித்தருளும். என்னை மீட்டவரே, உமது ஆசீர்வாதங்களால் என்னை முடிசூட்டும். என்னிடத்தில் நீர் படைத்ததை நீரே ஆசீர்வதித்துக் காத்து, நீர் நட்டதை மேன்மேலும் பலங்கொள்ளும்படி செய்யும்.

இரக்கமுள்ள இயேசுவே, இவ்வுலகத்திலுள்ளவர்கள் யாவருக்கும் உமது கிருபையைத் தந்து, உமது இரத்தத்தினுலே

மீட்கப்பட்டவர்களனைவரும் உம்மை வணங்குகிறவர்களா யும் உமக்கு உண்மையுள்ள ஊழியக்காரராயும் இருக்கும்படி கிருபைசெய்யும். கிறிஸ்தவர்களெல்லாருக்கும் ஏகசிந்தையை யும் அன்புள்ள இருதயங்களையும் மெய்வேதத்திற்கேற்ற பரிசுத் தத்தையும் கட்டளையிடும். மனக்கிலேசம் அடைந்தவர்களுக்கு ஆறுதலையும், இருளில் அகப்பட்டலைகிறவர்களுக்கு வெளிச் சத்தையும், முகாந்தரமில்லாமல் பயந்தவர்களுக்கு மனவுறுதி யையும், சோதிக்கப்பட்டவர்களுக்கு ஞான பலத்தையும் தந் தருளும். என்னுடைய குடும்பத்தார் சிநேகிதர் அறிமுகமான வர்களும் தங்களுக்காகச் செபம்பண்ணும்படி என்னை வேண் டிக்கொண்டவர்களுமாகிய இவர்களெல்லாரையும் தேவரீர் கிருபையாய் விசாரித்து இரட்சியும். உம்முடைய சித்தத்திற் கேற்றதையே விரும்பும்படி எங்களுக்குப் போதித்து, அப்படி விரும்புகிறதை எங்களுக்குக் கிடைக்கச்செய்யும் எந்தக் கிரி யைகளிலும் தேவரீர் எங்களுக்கு முந்திக்கொண்டு எந்த மோ சங்களுக்கும் எங்களைக் காத்து, எந்த நெருக்கங்களிலும் எங்க ளை ஆதரித்துத் தாங்கி, நாங்களெல்லாரும் உம்மையே நம்பிக் கொண்டு எப்பொழுதும் உம்முடைய நிழலின்கீழ்ச் சுகமாய்த் தங்கும்படி கிருபைசெய்யும். நாங்கள் துன்பப்படுங்காலத் தைத் தேவரீர் சுருக்கி, சுற்றிநிற்கும் பாவங்களுக்கு எங்களை விலக்கிக்காத்து, எங்களுக்கு நீர் எத்தனம்பண்ணின நித்திய இராச்சியத்திற்கு எங்களெல்லாரையும் ஆயத்தமாக்கியருளும். நாங்கள் இன்றைக்கு நினைவுகூர்ந்திருக்கிற இயேசுக்கிறிஸ்து வின் மரணபுண்ணியங்களினிமித்தமே. ஆமென்.

---

"எங்கள் பிரார்த்தனைக்கும் கருத்துக்கும் மேலாக மிகவும் அதிகமாய் அருளிச்செய்ய வல்லவருக்கு, கிறிஸ்து இயேசு மூலமாய், சபைக்குள்ளே தலைமுறைதோறும், சதாகாலங்க ளிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்."

Printed at the C. K. S. Press, Madras, 1872.